# பெண்ணிலவு மயங்குதடி

## 1

''உதயா! வா வா!''

''வாலாம் சித்தி, எப்படியிருக்கீங்க?''

''நல்லார்க்கேம்மா,'' என்று சொல்லிக்கொண்டே தனது அக்கா மகளின் கையிலிருந்த சூட்கேஸை வாங்கிக் கொண்டார் வனஜா.

''அப்புறம் சித்தப்பா, அபிஷேக், அர்விந்த் எல்லாரும் எப்படியிருக்காங்க?''

''எல்லாரும் நல்லார்க்காங்கடாம்மா. அப்புறம் அங்க ஊர்ல அக்கா, வித்யா எல்லாரும் நல்லார்க்காங்களா? வா உதயா, உக்காரு...''

''எல்லாரும் நலம் சித்தி!'' என்ற உதயாவிடம், ''ஹீட்டர் போட்டு விட்டிருக்கேன். போய் நல்லா அலுப்புத் தீரக் குளிச்சுட்டு வா. சாப்பிடலாம்,'' என்றார்.

''சரி சித்தி,'' என்றவளிடம், ''இந்தா, முதல்ல இந்த காபிய எடுத்துக்கோமா. உன் ரூம் மேல இருக்கு. நான் வந்து காட்றேன்,'' என்று தனது அக்கா மகளின் கையில் நுரை பொங்க ஆற்றிய சூடான காபி கப்பைக் கொடுத்தார்.

பயண அலுப்பினால் வந்திருந்த தலைவலிக்கு அந்தச் சூடான காபி அருமருந்தாக இருந்தது.

''சரி, வாடாம்மா,'' என்று தானும் உதயாவிடமிருந்து ஒரு பையை வாங்கிக் கொண்டு, அவர் நடக்க, அவரைப் பின் தொடர்ந்தாள் உதயா.

''என்ன சித்தி அப்படிப் பாக்கறீங்க?'' என்று புன்னகையுடன் கேட்டவளிடம், ''நீ ரொம்ப க்யூட் ஆயிட்ட உதயா. இந்த அளவுக்குப் பிரமாதமா வந்திருப்பேன்னு உண்மைலயே நான் கொஞ்சங்கூட எதிர்பாக்கலமா,'' என்று உணர்ந்து சொன்னார் வனஜா.

''போங்க சித்தி,'' என்று லேசான வெட்கத்துடன் சொன்ன அக்கா மகள் உதயாவை ஆசையாகப் பார்த்தார் அவர்.

''அப்புறம் அர்விந்த், அபிஷேக், சித்தப்பா எல்லாரும் எப்ப வருவாங்க சித்தி?''

''சித்தப்பா ஆபீஸ்ல இருப்பார்மா. அவருக்குத் தெரிஞ்சது பிடிச்சது எல்லாமே எப்பவுமே பிஸினஸ் பிஸினஸ் பிஸினஸ் தான். அவர் வரும்போது தான் வருவார். சரியான நேரம் சொல்லவே முடியாது.



''அப்புறம் அபிஷேக்கும், அர்விந்தும் காலேஜ் போயிருக்காங்க. ஈவ்னிங் வருவாங்க.''

''ஓ. எல்லாரையும் உடனே பாக்கணும் போலிருக்கு சித்தி. அதான் கேட்டேன்.''

''அதுவும் நீங்க சின்னவங்கெல்லாம் பாத்துக்கிட்டு ரொம்ப வருஷங்களாச்சு. இல்லையா, உதயா?''

''ஆமா சித்தி,'' என்றவள், ''நீங்களும் ரொம்ப க்யூட்டா ஏன், எனக்கு அக்கா மாதிரி தான் இருக்கீங்க சித்தி!'' என்றாள்.

உதயா சொன்னது உண்மையையே. அவள் ஒன்றும் எதையும் மிகைப்படுத்திச் சொல்லியிருக்கவில்லை.

''நீ சொன்னா சரியாதான் இருக்கும். ஆனா உங்க சித்தப்பா இதுக்கே உடம்பையும், ஹெல்த்தையும் கன்ட்ரோல்ல வெச்சுக்கிறதில்லைன்னு திட்டிட்டே இருப்பார்மா,'' என்றவர், ''சரிடாம்மா, நீ குளிச்சுட்டு வா. எனக்குக் கிச்சன்ல வேலையிருக்கு,'' என்று கீழே இறங்கி வந்திருந்தார்.

அந்த வருடம் தான் கல்லூரிப் படிப்பை முடித்திருந்த உதயா இப்பொழுது சென்னையில் இருக்கும் தனது சித்தி வீட்டிற்கு அங்கு இருந்தபடியே வேலை ஒன்றைத் தேடிக் கொள்ளலாமென்று வந்திருந்தாள்.

வேலை கிடைத்ததும் அருகிலிருக்கும் ஏதாவதொரு பெண்கள் விடுதியில் சென்று தங்கிக் கொள்ளலாம் என்பதும் அவளுடைய எண்ணம்.

வனஜா உதயாவின் தாயுடைய சொந்தத் தங்கை. அவர்கள் இருவருக்கும் மூத்தவர்களாக இரண்டு ஆண்களும் இருக்கிறார்கள்.

அதில் ஒரு அண்ணன் குடும்பம் சிங்கப்பூரிலும், இன்னொரு அண்ணன் குடும்பம் அமெரிக்காவிலும் இருக்கிறார்கள்.

உதயாவின் குடும்பத்தைத் தவிர மற்ற மூன்று குடும்பங்களுமே மிகவும் செழிப்பானதுதான்.

உதயாவிற்குத் தந்தையில்லை. தாய் மட்டுமே. ஒரு தங்கை. அவள் பெயர் வித்யா.

அவளும் கல்லூரியில் தான் படித்துக் கொண்டிருக்கிறாள்.

உதயாவின் குடும்பம் மிகவும் ஏழ்மையானது. அவர்கள் வசிப்பதும் ஒரு கிராமத்தில்தான்.

உதயாவின் தாயும் இல்லத்தரசிதான். என்றாலும் வீட்டிலிருந்தபடியே டெய்லரிங் தொழில் நடத்தித் தனது இரண்டு பெண்களையும் தன் சக்திக்கு மீறி நன்றாகப் படிக்க வைத்திருந்தார்.

அதற்குத் தகுந்தாற்போல அவருடைய பெண்களும் நன்றாகப் படித்தார்கள்.

படிப்பில் மட்டுமல்லாமல், தோற்றத்திலும் கூடப் பெண்கள் இருவரும் பிரமாதமாகத்தான் இருந்தார்கள்.

அதிலும் உதயாவைப் பற்றிக் கேட்க வேண்டியதே இருக்கவில்லை, அது யாராக இருந்தாலும் அவர்களை மற்றொரு முறை திரும்பிப் பார்க்க வைத்துவிடும் அளவிற்குக் கொள்ளை அழகு.

அது மட்டுமல்லாமல் அவளிடம் இன்னும் நிறையச் சிறப்புகளும் இருந்தன. மற்றவர்களிடம் மென்மையாகப் பேசுவது முதல் அனைத்து விதங்களிலுமே பிரமாதமான குணநலன்களைக் கொண்ட பெண்ணாக இருந்தாள்.



''வா உதயா, குளிச்சாச்சா?''

''ஆமா சித்தி.''

அதற்குப் பிறகு இருவரும் பேசிக்கொண்டே மெதுவாக மதிய உணவை முடித்தார்கள்.

தனியாக வந்ததாலோ அல்லது சற்றும் பழக்கமில்லாத பயணம் என்பதாலோ உதயா ட்ரெயினில் சுத்தமாகத் தூங்கியிருக்கவில்லை.

சுடுநீரில் குளித்ததற்கும், வயிறு முட்டச் சாப்பிட்டதற்கும் சித்தி சொல்கிறார்களே என்று போய்ப் படுத்தவள் தான், மீண்டும் அவள் விழித்துப் பார்த்தபோது மாலை ஐந்து மணிக்கும் மேலேயே ஆகி விட்டிருந்ததை ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

எழுந்து முகம் கழுவித் தலை சீவிக் கொண்டு புத்துணர்ச்சியுடன் கீழே இறங்கி வந்தாள்.

மாடிப்படியில் இறங்கும்போதே ஆண்களின் குரல்கள் பல ஒன்றோடொன்று கலந்து கேட்டதில் சற்றுத் தயக்கத்துடன் தான் கீழேயே இறங்கி வந்திருந்தாள்.

''வா உதயா,'' என்று புன்னகையுடன் தன்னை வரவேற்றுப் பேசிய சித்தப்பா வாசுதேவனிடம், தானும் நன்றாகப் பேசியவள், கூடவே தன்னைப் பிடித்துக்கொண்டு விட்டிருந்த அவளுடைய தம்பிகளான அபிஷேக்கிடமும், அர்விந்திடமும் கூட அவர்களைப் போலவே விளையாட்டாகப் பேசத் தொடங்கி விட்டிருந்தாள்.

அக்கா அக்கா என்று ஆர்வமாக அழைத்துப் பேசிய தம்பிகள் தானே நிமிர்ந்து பார்த்துப் பேசும் அளவிற்கு வளர்ந்து விட்டிருந்ததை ஆச்சரியமாகக் கண்டாள்.

''என்னக்கா பாக்கறீங்க?''

''ரெண்டு பேரும் எவ்வளவு உயரமா வளர்ந்துட்டிங்க!''

''ஹலோ, நீங்களுந்தான் நாங்க சின்ன வயசா இருந்தப்ப பாத்ததுக்கு இப்ப ஃபுல்லா சேஞ்ச் ஆயிட்டிங்களாம்...''

''அதென்ன ஃபுல்லா சேஞ்ச்?''

''ம், அப்ப எண்ணெய் தேய்ச்சு வழிச்சு சீவி, பார்க்க பப்ளிமாஸ் மாதிரி பட்டிக்காடா இருந்தீங்க. ஆனா இப்ப அப்படியே உலக அழகி மாதிரி...''

''போதுன்டா தம்பிகளா, ரொம்பத்தான் ஓட்டாதீங்க.''

ஆனாலும் அக்கா மகளின் தோற்றத்தில் இப்பொழுதும் எளிமை, எளிமை என்று சொல்வதைவிட வறுமை வெளிப்படையாகத் தெரிகிறதோ என்று வனஜாவால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

சும்மா கொடுப்பதைத் தான் அக்காவும், அவருடைய பெண்களும் வாங்கிக் கொள்ள மாட்டார்களே, மிகவும் தன்மானம் பார்ப்பவர்களாயிற்றே என்றும்.

ஆனால் இப்பொழுது அக்காவே தனது மகளுக்கு வேலையொன்று வேண்டுமென்று அனுப்பி வைத்திருப்பதால் எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் தான் ஒரு நல்ல வேலையை உதயாவிற்குத் தேடித் தந்துவிட வேண்டுமென்று தனக்குள் நினைத்துக் கொண்டார் வனஜா.

''வனஜா...''

தனது கணவன் அழைக்க, ''என்னங்க?'' என்று அருகில் சென்றார்.



''விஜயன் தம்பி வருவார்மா, அவருகிட்ட இந்தக் கவரக் குடுத்துட்றயா?''

''சரிங்க,'' என்று அதை வனஜா கையில் வாங்கிக் கொள்ள, தங்களை அழைத்த தந்தையை அர்விந்தும் அபிஷேக்கும் திரும்பிப் பார்த்தனர்.

''சொல்லுங்கப்பா.''

''நீங்க ரெண்டு பேரும் உதயாவை பர்ச்சேஸ், சினிமான்னு எங்காவது கூட்டிட்டுப் போய்ட்டு வாங்க. அப்பதான் உதயாவுக்குப் புது இடம் போரடிக்காம இருக்கும்.''

''ஓ.கே. டாடி,'' என்ற அர்விந்த், ''ஆனா இந்த உதயாக்கா எங்க...'' என்று வாய்க்குள் முணுமுணுத்தான்.

சித்தப்பா கிளம்பியதும், ''என்ன அப்பாவப் பாத்தா அவ்வளவு பயமா?'' என்று தம்பிகள் இருவரையும் பார்த்துக் கேட்டாள் உதயா.

''பயம்னு சொல்லிட முடியாது. ஆனா அவர் ஒன்ன சொல்லிச் செய்யலேன்னா அப்புறம் அவ்வளவுதான்.''

''அப்ப நிறைய விஷயத்துல சொன்ன பேச்சக் கேட்க மாட்டீங்கன்னு சொல்லுங்க.''

''அது எப்படி அவ்வளவு கரெக்டா கண்டுபிடிச்சீங்க?''

''அதுதான் உங்க முகத்துலயே ஒட்டியிருக்கேடா பசங்களா,'' என்ற வனஜா,

''எல்லாருக்கும் குடிக்கறதுக்கு என்னென்ன வேணும், சொல்லுங்க?'' என்று கேட்டார்.

''நாங்க இன்னும் டிஃபனே எடுத்துக்கலமா,'' என்று சொன்ன அபிஷேக்கின் பாவனையில் சிரித்தாள் உதயா.

''அட, கொண்டு வர்றேன்டா,'' என்று வனஜா நகர, ''பின்ன உங்களுக்காக ஸ்பெஷலா ஏதேதோ செஞ்சிருப் பாங்க போலிருக்கு. விட முடியுமா?'' என்று உதயாவைப் பார்த்துச் சொன்னான் அபிஷேக்.

''நீ எப்பவும் திங்கறதுலயே இருடா,'' என்ற அர்விந் திடம், ''பின்ன?'' என்றான்.

சில வினாடிகளில் டிஃபன் ப்ளேட்டுகளுடன் ஹாலுக்கு வந்திருந்த தாயிடம், ''விஜயண்ணா வருவாராமா?'' என்று கேட்டான் அர்விந்த்.

''அப்படின்னு தான் உங்கப்பா சொல்லிட்டுப் போறாங்பா. ஆனா நைட் ஒன்பது மணியில்லாம விஜயன் எப்ப வீட்டுக்கு வந்திருக்கார்?''

''அதான?'' என்று அபிஷேக் சொல்ல, ''விஜயன் அண்ணா வந்தா அவருகிட்ட நான் பர்ச்சேஸ் பண்ணிட்டு வந்த கதையெல்லாம் காட்டணும்,'' என்றான் அர்விந்த்.

''பாவம்பா! அவருக்கு ஏற்கெனவே எத்தனையோ டென் ஷன். நடுவுல நீங்க வேற டிஸ்டர்ப் பண்ணாதீங்கப்பா.''

''நீங்க தான் இப்படிச் சொல்றீங்கம்மா. ஆனா அண்ணா வந்தா எங்ககூட ஒரு கால்மணி நேரமாவது உக்காந்து பேசாமப் போகவே மாட்டாராக்கும்,'' என்று அர்விந்த் சொல்ல, ''வந்தா அப்படித்தான். ஆனா முதல்ல வரு வாரான்னு பாக்கலாம்,'' என்றான் அபிஷேக்.

''அப்புறம் இன்னைக்கு எங்காவது வெளிய போலாமா உதயாக்கா?''

''நாளைக்கு வேணும்னா போலாமா அர்விந்த்?'' என்று கேட்டவளிடம், ''உங்களுக்கு எப்ப வெளிய



போகலாம்னு தோணுச்சுன்னாலும் சொல்லுங்க. நாங்க ரெண்டு பேரும் தயார்,'' என்றான் அபிஷேக்.

அதே நேரம், ''ஹலோ எல்லாரும் எப்படியிருக்கீங்க?'' என்ற குரலில் அனைவரும் ஒரு சேரத் திரும்ப, பந்தா வாக உள்ளே வந்தாள் அந்தப் பெண்.

அல்லது தனக்குத்தான் அப்படித் தோன்றுகிறதோ என்றிருந்தது உதயாவிற்கு.

அனைவரும் பேசிக் கொள்வதிலிருந்து அவளுடைய பெயர் மாயா என்பது தெரிந்தது.

அந்த மாயா பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருந்தாள். ஆனாலும் எதுவோ ஒட்டாத மாதிரி இருக்கிறதோ என்று நினைக்கத் தோன்றியது.

''உதயாக்கா! இவங்க மாயா,'' என்று அபிஷேக் அந்தப் பெண்ணைத் தனக்கு அறிமுகப்படுத்த, ''அப்படியா?'' என்று அவளைப் பார்த்து ஒரு புன்னகையை உதிர்த்தாள் உதயா.

ஆனால் அதை அந்த மாயா கண்டு கொண்டாற் போலவே தெரியவில்லை.

அந்த மாயாவின் குணமே அப்படித்தானோ என்னவோ. அதையும் யாரும் பெரிதாக எடுத்துக் கொண்டிருக்க வில்லை.

அதே போலத் தன்னையும் அந்த மாயாவிற்கு அறி முகப்படுத்த அபிஷேக் வாயைத் திறப்பதற்குள்ளேயே, ''டேய், நீங்க ரெண்டு பேரும் உங்க மனசுல என்னடா நினைச்சுட்டிருக்கீங்க?'' என்று கோபத்துடன் தனது தம்பி கள் இருவரையும் பார்த்த மாயாவைத் தானும் என்ன வென்பதைப் போலப் பார்த்தாள் உதயா.

"என்ன மாயாக்கா?"

"போன சன்டே வெளிய எங்காவது போலாம்னு சொன்னீங்க. ஆனா கூப்புடவே இல்ல..."

"அதனால என்ன மாயாக்கா, எங்க உதயாக்காவும் வந்திருக்காங்களே. இந்த வாரம் நிச்சயம் போலாம்."

என்னது இவளுடனா என்று தனக்குள் நினைத்துக் கொண்ட மாயா, திரும்பி உதயாவைப் பார்த்தாள்.

இது என்ன பட்டிக்காட்டுக் கோலம், அழகு இருக்கிறது தான் என்றாலும், அதைத் துளியும் வெளிப்படுத்தத் தெரியவில்லையே என்று ஏளனமாகப் பார்த்தாள்.

ஒருவேளை ஊருக்குத் தகுந்தாற்போல இவள் தன்னை அழகுபடுத்திக் கொள்ளத் தொடங்கி விட்டால்,

இவளா... ம்கூம்... என்று நினைத்துக் கொண்டவளுக்கு இருந்திருந்து நாம் இவளுடன் செல்வதா என்றிருந்தது.

"என்ன மாயாக்கா, அப்படியே திகைச்சுப் போய் நின்னுட்டிங்க?"

"நான் ஏன் திகை......."

அதைச் சொல்லிக்கூட முடித்திருக்கவில்லை. தனது மொபைலுக்கு வந்திருந்த அந்த அழைப்பை அந்த வினாடியே அட்டெண்ட் செய்து காதில் வைத்திருந்தாள்.

சில வினாடிகளில் போனை வைத்துவிட்டு நிமிர்ந் தவள், "இன்னும் கொஞ்ச நேரத்துல விஜயன் இங்க வர்றேன்னு சொன்னார்," என்று பெருமை பொங்கச் சொன்னாள்.

"அது எங்களுக்கு எப்பவோ தெரியுமே, எங்க டாடி சொல்லிட்டுத் தான் போனார்."



"ஓ, ஆமா, என்ன ரெண்டு பேரும் வெளிய கிளம்பத் தயாரா இருப்பீங்க போலத் தெரியுது," என்று மாயா கேட்டுக் கொண்டிருக்கும்போதே, டிஃபன் கொண்டு வந்து கொடுத்து அவளை எடுத்துக் கொள்ளச் சொல்லி உபசரித்தார் வனஜா.

"அப்படியா தெரியுது? விஜயண்ணா மட்டும் இப்ப வீட்டுக்கு வரலேன்னா சினிமாவுக்குக் கூட கிளம்பலாம். இல்லையாக்கா?" என்று தன்னைப் பார்த்துக் கேட்ட அபி ஷேக்கிடம், "ம்கூம். இன்னைக்கு எங்கயும் வேண் டாமே," என்றாள் உதயா.

மற்ற நாட்களில் எல்லாம் அக்கா அக்கா என்று தான் சொல்வதையெல்லாம் கேட்டுக்கொண்டு தன்னைப் பிடித்துக் கொள்ளும் பையன்களுக்கு இன்றைக்குத் தான் வந்ததே பிடிக்கவில்லை போலிருக்கிறதே என்று தோன்றியது மாயாவிற்கு.

அதிலும் தான் ஒருத்தி இங்கிருப்பதையே சற்றும் கண்டு கொள்ளாமல் சினிமாவுக்குப் போகலாமா என்று அந்தப் பெண்ணிடம் மட்டும் கேட்கிறானே இந்த அபி ஷேக் என்றிருந்தது.

பிறகு அவள் தன்னை எப்படி மதிப்பாள். அதிலும் எப் பொழுதும் நன்றாகப் பேசும் ஆன்ட்டி கூட இன்றைக்குக் கண்டும் காணாதது போலத்தான் நடந்து கொள்கிறாரோ. அந்த உதயாவுடன் அபிஷேக்கும், அர்விந்தும் எதையோ மும்முரமாகப் பேசிச் சிரித்துக் கொண்டிருப்பது தெரிய, வயிறு எரிந்தது மாயாவிற்கு.

அந்தக் கோபம் முழுவதையும் அப்படி வார்த்தை களாக உதயாவின் மேல் காட்டினாள் மாயா.

''என்ன மாயாக்கா?'' என்று கேட்ட அர்விந்த்திடம்
''இல்ல, உங்க உதயாக்கா பாக்கவே பூவரா, ரொம்பவு
கஷ்டப்பட்ற குடும்பத்திலிருந்து வந்த மாதிரி தெரிய
றாங்களே, அப்படியா?''

மாயா கேட்டுக்கூட முடித்திருக்கவில்லை. ''அது
காக எல்லாருமே உங்கள மாதிரியே இருந்துட மு
யுமா?'' என்று பட்டென்று கேட்டிருந்தான் அபிஷேக்.

''ஏன்? எனக்கென்ன?''

''ம், எங்கிட்டயும் இருக்குன்னு காட்டிக்கற மாதி
வீட்ல இருக்கற செண்ட், பவுடர் எல்லாத்தையு
எடுத்துப் பூசிக்...''

''டேய், போதுன்டா அபிஷேக்...''

''சும்மா நீங்க மத்தவங்கள சொல்ற மாதிரி நானும் ஒ
பேச்சுக்குதான் சொல்றேன் மாயாக்கா. அதுக்கு ஏ
இவ்வளவு கோபப்பட்றீங்க?''

''அதுக்காக என்ன வேணும்னாலும் சொல்லிடுவ
யாக்கும்...''

பாவம், தனக்காகத்தானே தம்பிகள் இருவரும் பேசி
கொண்டிருக்கிறார்கள் என்று தோன்ற, ''நான் உங்கள
பாத்தே இன்னும் பத்து நிமிஷம் கூட முழுசா முடிய
அப்படியிருக்கும்போது எங்கூடப் பேசாம ஏதேதே
பேசிட்டிருக்கீங்களே,'' என்று அபிஷேக்கையும் அர்விந்
தையும் பார்த்தாள் உதயா.

அப்படிச் சொன்ன உதயாவைக் கோபத்தைத் தன
குள் மறைத்துக் கொண்டு திரும்பிப் பார்த்தாள் மாயா



பார்க்கத்தான் பட்டிக்காடு. ஆனால் மிகவும் வினய மானவளாக இருப்பாள் போலிருக்கிறதே. ஆனால் அந்தப் பருப்பெல்லாம் தன்னிடமா வேகும்?

அதுவும் என்ன திமிர் இருந்தால் அபிஷேக்கையும், அர்விந்த்தையும் தன்னுடன் பேச வேண்டுமென்று சொல்லுவாள், பார்த்துக் கொள்கிறேன்.

என்ன முயன்றும் மாயாவால் கோபத்தைக் கட்டுப் படுத்திக் கொள்ளவே முடிந்திருக்கவில்லை. இருந் திருந்து தன்னிடமா இவள் மோத வேண்டும் என்று எரிச்சலுடன் நினைக்கத் தோன்றியது.

''சரி, நாங்க போய் டிரஸ் சேஞ்ச் பண்ணிட்டு வர்றோம். பேசிட்டிருங்க,'' என்று அபிஷேக், அர்விந்த் இருவரும் அந்த இடத்தை விட்டு நகர, உதயா, மாயா இரண்டு பேரும் டிஃபன் எடுத்துக்கோங்க என்று மீண்டும் ஒரு முறை உபசரித்துவிட்டுத் தானும் அங்கிருந்து நகர்ந்தார் வனஜா.

மாயா வந்ததற்குப் பிறகு உதயாவால் ஏனோ அங்கு இயல்பாக இருக்க முடியவில்லை. புது இடம் போலத் தோன்றத் தொடங்கி விட்டிருந்தது.

அவள் அதாவது அந்த மாயா எதையோ சொல்லிக் கொண்டு போகட்டும். எனக்காகப் பார்த்துக் கொண்டு நீங்கள் எதையும் சொல்ல வேண்டாம் என்னும் பொருளில் தான் உதயா தனது தம்பிகளிடம் அப்படிச் சொன்னது. ஆனால் அதை அந்த மாயா வேறு மாதிரிப் புரிந்து கொண்டாள் என்பதும் உதயாவிற்குப் புரியவே செய்தது.

கடவுளே! இருந்திருந்து இவளிடம் தான் என்ன
பேசுவதாம் என்று உதயா தனக்குள் நினைத்து
கொண்டிருக்கும்போதே, ''உன்னோட அப்பாவித்
தனமான வேஷத்தையெல்லாம் பாத்து மயங்கறவங்
இங்க யாருமில்ல. தெரிஞ்சுக்கோ,'' என்றாள் மாயா.

என்னது, வேஷமா?

என்ன இவள் தன் பாட்டுக்கு ஏதேதோ உளறி
கொண்டே போகிறாள்.

''உங்கள மாதிரியே என்னயும் நினைச்சுட்டீங்களா?

''ஹலோ, நான் எந்த மாதிரின்னு தெரியுமா உனக்கு
என்னவோ உனக்குத்தான் எல்லாமே தெரியுங்கற மாதி
பேசிட்டிருக்க!''

என்ன இவள், தான் கேட்க வேண்டிய கேள்வி
இவள் கேட்கிறாள் என்று உதயாவால் நினைக்காம
இருக்க முடியவில்லை.

இப்படிக்கூட மனிதர்கள் இருக்கிறார்களே என்
ஆச்சரியமாகவும் இருந்தது.

''என்ன, பேசு.''

பேசுவதா, இவளிடம் பேசுவதற்கு என்ன இருக்கி
தாம்? அதிலும் முதன் முறையாகப் பார்ப்பவர்கள
ஒருமையில் அழைத்துப் பேசுவது அநாகரிகம் என்ப
கூடத் தெரியாதவளிடம்.

தான் என்ன அந்த அளவிற்கா இவளுக்குத் தெ
கிறோம். ஏனோ அதற்கு மேல் அவளிடம் பேச
பிடிக்காமல் போய் விட்டிருந்தது உதயாவிற்கு.

ஆனால் அதற்கு அவள் விட்டால் அல்லவா?



''என்ன, கிராமத்துலயே இருந்திருந்து இங்க சிட்டில யார்கிட்ட எப்படி நடந்துக்கறதுன்னெல்லாம் தெரியாம ரொம்ப பயமா இருக்கில்ல?''

மாயா அப்படிக் கேட்க, இப்பொழுது என்ன முயன்றும் உதயாவால் சிரிப்பைக் கட்டுப்படுத்திக் கொள்ளவே முடிந்திருக்கவில்லை.

வாய்விட்டு நன்றாகவே சிரிக்கத் தொடங்கி விட்டிருந்தாள்.

ஒருவேளை தனக்கு எதிரே இருக்கும் இந்த மாயாவிற்குப் புத்தி ஏதாவது பிசகிப் போயிருக்குமோ?

எது எப்படியோ, மாயாவிற்குத் தன்னைப் பிடிக்கவில்லை என்பது மட்டும் தெளிவாகப் புரிந்தது.

என்னதான் தன்னுடைய அழகில் உதயாவிற்கு எப்பொழுதுமே கர்வம் இருந்ததில்லை என்றாலும், முன்னே இருப்பவளுக்குத் தன்னுடைய அழகைப் பார்த்துப் பொறாமை வந்து விட்டிருந்தது தெரிந்ததில் மனதிற்குள் பெருமையாகக் கூட உணர்ந்தாள்.

''எங்களப் பாத்தே இப்படி பயந்து போய் உக்காந்திருக்க. இன்னும் எங்க விஜயனைப் பார்த்தா அவ்வளவுதான்,'' என்ற மாயாவை, எரிச்சலை மறைக்கக்கூட முடியாது பார்த்தாள் உதயா.

சந்தேகமே இல்லை, இவளுக்கு மூளை தான் குழம்பிப் போயிருக்கிறது.

''என்ன, நினைச்சுப் பாக்கவே பயமா இருக்கு. இல்லையா?'' என்ற மாயாவை இப்பொழுது ஏளனமாகப் பார்த்தாள் உதயா.

''நீ என்ன, பைத்தியமா?'' என்று கோபமும் எரிச்சலும் ஒரு சேரத் தோன்றக் கேட்டாள்.

இவளுடைய விஜயன் என்ன பெரிய கொக்கா என்று நினைத்தவள், இன்னொரு முறை இவள் தன்னிடம் இந்தப் பேச்சையே எடுக்காத அளவிற்கு முகத்தில் அடித்தாற்போல பதில் கொடுத்து விட வேண்டுமென்று வாயைத் திறந்தாள்.

''அந்த விஜயனா, ராஜனா... ஏதோ பேர் சொன்னியே, அவரு உனக்கு வேணும்னா நல்லவரா, வல்லவரா, பெரியவரா... ஏன், இன்னும் எப்படி வேணும்னாலும் இருக்கலாம். அதுக்காக எல்லாருக்கும் அப்படித்தான்னு ஆயிடுமா?

''ஒரு விஜயன் அல்ல, இன்னும் ஓர் ஆயிரம் விஜ யன்கள் வந்து நின்னாலும் கூட என் மனம் கலையாது என் கால் தூசுக்குச் சமம்!'' என்று சிறிதும் எரிச்சலைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாது பதிலடி கொடுத்து விட்டிருந்தாள் உதயா.

அதே நேரம் ஹாலுக்குள்ளேயே யாரோ வந்திருக்க சை! தன்னை இந்த அளவிற்குக் கீழே இறக்கிப் பே வைத்து விட்டாளே என்று உதயாவிற்குத்தான் ஒரு மாதிரியாகி விட்டிருந்தது.

இந்தப் பட்டிக்காட்டு உதயா இந்த அளவிற்குப் பேசுவாளென்று மாயாவும் எதிர்பார்த்திருக்கவில்லை என்பது திகைத்துப் போய் அவள் அமர்ந்து விட்டிருந் திலிருந்து தெரிந்தது.



## 2

''சபாஷ்!'' என்ற அந்தக் கன கச்சிதமான குரலில் மாயா அவசரமாகத் திரும்ப, உதயாவும் அந்தக் குரலில் தான் நடப்புக்கு வந்திருந்தாள்.

''விஜய்! வாங்க வாங்க,'' என்று மாயா உடனே இருக்கையிலிருந்து எழுந்திருக்க, ஓ! இவன்தான் அந்த விஜயனாக்கும் என்று ஏளனமாக நினைத்தாள் உதயா.

அதே நேரம் அந்த விஜயனுடைய பார்வையும் உதயாவின் முகத்தில்தான் நிலைத்திருந்தது, சுவாரஸ்ய மாக.

அதைக் கண்ட மாயாவிற்குக் கடவுளே! சும்மா இருந்த இருவரையும் நாமே பார்த்துக் கொள்ள வைத்து விட் டோமோ என்றிருந்தது.

ஆனால் அந்த விஜயன் என்னும் விஜயமோகனோ அதற்கும் ஒரு படி மேலேயே போய், ''ஹலோ உதயா! பயணமெல்லாம் எப்படியிருந்தது? அப்புறம் என் பேர் விஜயமோகன். அபிஷேக்கும் அர்விந்தும் சொல்லிச் சொல்லி உன் வரவை நானும் கூட ரொம்ப ஆவலா எதிர்பார்த்துட்டிருந்தேன். பரவாயில்ல, அவங்க கொஞ் சங்கூட எதையும் மிகைப்படுத்திச் சொல்லல!'' என்று மேலும் மாயாவின் வயிற்றில் புளியைக் கரைத்தான்.

அவன் பேசியதையெல்லாம் கேட்ட உதயாவிற்கு
தான் பதிலுக்கு என்ன பேசுவதென்றே புரியாது
போயிற்று.

ஆனாலும் அவன் தன்னை ஒருமையில் விளித்து
பேசியது மட்டும் அப்படியே மனதில் உறைத்தது.

இவனும் அந்த மாயாவைப் போலவேதானா? அ
சரிதான் அனைத்துமே ஒரே குட்டையில் ஊறிய மட்
டைகள்தானே.

''என்ன, நானும் அவங்க சொன்ன மாதிரி தான் இரு
கேனா, இல்ல... பசங்க நம்ம மேல இருக்கற பிரியத்து
இல்லாததையெல்லாம் சொல்லிட்டாங்களா?''

என்ன இவன், விட்டால் இவனும் அந்த மாய
போலவே பேசிக் கொண்டே போவானோ?

''ஹலோ மிஸ்டர், உங்களுக்கென்ன மனசுக்குள்
ஹீரோன்னு நினைப்பா? விட்டாப் பேசிட்டே போவீங்
போலிருக்கு.''

அவசரமாக உதயாவிற்குப் பதில் சொல்லப்போன
மாயாவைத் தடுத்து விட்டிருந்தான் விஜயமோகன்.

''அடடா! இன்னும் கொஞ்சங்கூடக் கோபம் குறைய
போலிருக்கே. ஆனா கோபப்படும்போது கூட நீ ரொம்
அழகாதான் இருக்க!'' என்று புன்னகையுடன் சொன்ன
வனை ஏளனமாகப் பார்த்தாள் உதயா.

என்ன முயன்றும் உதயாவால் இப்பொழுது கோப
தைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாது போயிருக்க
''சை! ரோஷம் கெட்ட ஜென்மங்கள்!'' என்று மு
முணுத்தவள்,



'போதும், இதுதான் உங்க லிமிட்,' என்று எச்சரிக்கும் பாவனையில் சொல்லிவிட்டு, அதற்கு மேல் தொடர்ந்து அங்கு இருக்கப் பிடிக்காமல் தன்னுடைய அறைக்கே வந்து விட்டிருந்தாள்.

அதே புன்னகையுடன் திரும்பிய விஜயமோகன் குற்றம் சொல்லும் பாவனையுடன் தன்னைப் பார்த்துக் கொண்டிருந்த மாயாவின் பார்வையைச் சந்தித்தான்.

''சும்மா நலம் விசாரிச்சதுக்கே இவ்வளவு கோபம்னா, அப்படி என்னப்பத்தி என்னதான் சொன்ன?'' என்று அசுவாரஸ்யம் போலக் கேட்டான்.

''நானொன்னும் சொல்லலையே,'' என்று தன்னைப் பார்த்த விஜயமோகனின் பார்வை ஏன் பொய் சொல்கிறாயென்று கேட்பதைப் போலிருந்தது மாயாவிற்கு.

இன்னும் தூண்டித் துருவிக் கேட்பானோ என்று மனதிற்குள் பயமாகவும்.

அனைத்திற்கும் மேலாக இம்மெனும்முன் கோபப் பட்டுக் கடுமையாகப் பேசி விடுபவன் இன்று ஏன் வழக்கத்திற்கு மாறாக நடந்து கொள்கிறானென்று ஆச்சரியமாகவும்.

அதே வினாடி விஜயமோகனும் தனக்குள் அதைத் தான் அதாவது உதயாவைப் பற்றித் தான் நினைத்துக் கொண்டிருந்தான்.

ஒரு விஜயன் என்ன, ஓர் ஆயிரம் விஜயன் வந்தாலும் அவள் மனம் கலையாதென்றாளே! அது மட்டுமா? தான் அவளுடைய கால் தூசுக்குச் சமமென்றும் கூட.

ஆனாலும் இந்த மாயா என்ன சொல்லி அதற்கு அவள் அப்படிப்பட்ட பதிலைச் சொன்னாளோ.

முதலில் இவள் ஏன் உதயாவிடம் தன்னை இழுத்துப் பேச வேண்டும்.

சொல்கிற மாதிரி யாரோ ஒரு விஜயமோகனைப் பற்றி அவளுக்கும்தான் என்ன வந்தது?

எது எப்படியோ உதயா சுவாரஸ்யமான பெண் என்று தனக்குள் நினைத்துச் சிரித்துக் கொண்டான் விஜய மோகன்.

''வாங்க விஜயன்.''

விஜயமோகனை வரவேற்றுக் கொண்டே ஹாலுக்கு வந்திருந்தார் வனஜா.

''வரலாம் ஆன்ட்டி. அப்புறம் கிச்சன்ல ரொம்ப பிஸியா இருந்தீங்க போலிருக்கு.''

''அது சரிதான், டிஃபன் எடுத்துக்கோங்க.''

''அடடா! கையோடயே கொண்டு வந்துட்டீங்களா?'' என்றவன், எழுந்து சென்று கைகளைக் கழுவிக்கொண்டு வந்தான்.

''வாசனையே கமகமன்னு வருதே! நெல்லுக்கு இறைக்கற நீர் புல்லுக்கும் பாயற மாதிரி உதயாவுக்குச் செஞ்ச ஸ்பெஷல் டிஃபன் எங்களுக்குமா?'' என்று அமர்ந்து டிஃபன் ப்ளேட்டைக் கையில் எடுத்தான் விஜயமோகன்.

''ஒருவிதத்துல அப்படித்தான்,'' என்று சிரித்த வனஜா, ''எங்க உதயாவக் காணோம்? இந்நேரம் இங்க தான இருந்தா,'' என்றார்.

''அது சரிதான். இவ்வளவு நேரமும் இங்க இருந்துட்டு இப்பதான் உள்ள போன மாதிரி இருந்தது.'' என்று



விஜயமோகன் சொல்ல, புன்னகையுடன், ''அப்படியா?'' என்றார் வனஜா.

''மாயா! என்னம்மா, நீ இன்னும் அப்படியே வெச்சிருக்க, நீயும் எடுத்துக்கோம்மா ஆனா இவ்வளவு நேரத்துல சூடு கூட ஆறியிருக்கு...''

''அச்சச்சோ! இதெல்லாம் எனக்கு வேண்டாம்டா சாமி. அப்புறம் உடம்பு ஊதிடுவேன் ஆன்ட்டி,'' என்று மாயா பயப்படுவது போலச் சொல்ல, ''உங்க கைப்பக்குவத்த சாப்பிடவும் குடுத்து வெச்சிருக்கணுமே ஆன்ட்டி,'' என்று ருசித்துச் சாப்பிட்டுக் கொண்டே சொன்னான் விஜய மோகன்.

கொடுத்து வைத்திருக்க வேண்டுமா? அப்புறம் உடம்பு கட்டுக்குள் இல்லாமல் பெருத்துப் போய் விடுமே என்று நினைத்துக்கொண்ட மாயாவால் அதை அப்படியே வெளியே சொல்ல முடிந்திருக்கவில்லை.

அப்படிப் பார்த்தால் விஜயமோகன் தன்னுடைய உடலைக் கன கச்சிதமாகப் பிரமாதமாகத் தானே வைத்திருக்கிறான்.

ஒரு பிடி சதைப்பற்றும் கூட எங்கேயும் அதிகமாக இல்லாமல் ஆறடி உயரத்தில், கம்பீரமாகத் தானே இருக்கிறான்.

''எங்க ஆன்ட்டி, அபிஷேக் - அர்விந்த்?''

''மேல இருந்தாங்க விஜயன். உங்களத்தான் ரெண்டு பேரும் எதிர்பாத்துட்டிருந்தாங்க. இப்ப வந்துடுவாங்க.''

அதே சமயம் கிட்டத்தட்ட டிஃபன் முழுக்க காலியாகி விட்டிருந்த விஜயமோகனின் ப்ளேட்டைப் பார்த்த

வனஜா, ''இன்னொரு ப்ளேட் எடுத்துட்டு வரலாமா விஜயன்?'' என்று கேட்டார்.

''அடடா, கேக்கவே எவ்வளவு நல்லார்க்கு! கிடைச்சா இன்னும் எவ்வளவு நல்லார்க்கும்!'' என்ற விஜயனின் பாவனையில் புன்னகையுடன் இன்னொரு ப்ளேட் டிஃபனை எடுத்து வருவதற்காக எழுந்தே சென்றிருந்தார் வனஜா.

அதே நேரம், ''ஐய்... விஜயன் அண்ணா வந்தாச்சு!'' என்று அபிஷேக்கும், அர்விந்த்தும் வந்து விட்டிருந்தனர்.

வந்தவர்கள் அந்த வினாடியே, ''அண்ணா! எங்க உதயாக்கா வந்தாச்சு, பாத்தீங்களா?'' என்று கேட்டனர்.

''அதெல்லாம்...'' என்றவன் ஒரு நிமிஷம் என்று தனக்கு வந்திருந்த மொபைல் அழைப்பை அட்டெண்ட் செய்து பேசினான்.

''சரிமா, பத்து நிமிஷத்துல வந்துடுவேன்,'' என்று அவன் போனை வைக்கவும், வனஜா ஹாலுக்கு வரவும் சரியாக இருந்தது.

''என்ன விஜயன், போன்ல அம்மா போலிருக்கு?''

''ஆமா ஆன்ட்டி,'' என்றவனிடம், ''மதியம் அப்ப நீங்க லஞ்சே சாப்புட்லயா?'' என்று கேட்டார் வனஜா.

''அது சரிதான், வேல மும்முரத்துல நேரம் போனதே தெரியல. திடீர்னு நிமிர்ந்து பாக்கறேன். மணி நாலு ஆன்ட்டி.''

''சரிதான், ஆனாலும் இப்படி நேரத்துக்குச் சாப்பிடாம இருக்கலாமா?'' என்று தயக்கத்துடன் கேட்ட வனஜாவைப் புன்னகையுடன் பார்த்தான் விஜயமோகன்.



''அந்த அளவுக்கு என்னையே அறியாம இன்னைக்கு நான் வேலைல முழுகிப் போயிருக்கேன் ஆன்ட்டி மத்தப் படி வயித்துக்கு வஞ்சகம் பண்றவனா நான்?'' என்ற விஜயமோகன்,

''அபிஷேக்! அர்விந்த்! முதல்ல போய் டிஃபன எடுத்துக்கோங்க. அதுக்கப்புறம் எங்களுக்கு இல்லாமப் பண்ணிட்டிங்களேன்னு நீங்க என்னக் குத்தம் சொல்லிப் பலனில்ல,'' என்று இரண்டாவது முறையாக வந்த டிஃபன் ப்ளேட்டைக் கையில் எடுத்திருந்தான்.

''நாங்க ஏதோ போனாப் போகுதுன்னு வெச்ச மிச் சத்தத்தான் விஜயண்ணா இப்ப நீங்க சாப்புட்டுட் டிருக்கீங்க. முதல்ல அத நீங்க தெரிஞ்சுக்கோங்க,'' என்ற அபிஷேக், அர்விந்திடம்,

''அதான பாத்தேன். ஏதோ தைரியத்துல இன்னொரு ப்ளேட் வாங்கிட்டேன்பா. அதே மாதிரி இப்பவும் ஹெல்ப் பண்ணினீங்கன்னா பரவாயில்ல,'' என்றான் விஜயமோகன்.

விஜயமோகனை நினைக்கவே மனதிற்குள் பெருமை யாக இருந்தது வனஜாவிற்கு.

எந்நேரமும் தொழில் தொழிலென்று அயராது உழைத்து, இனி அவ்வளவுதான், அனைத்துமே முடிந்தது என்னும் நிலைக்கு வந்து விட்டிருந்த தொழிலைத் தூக்கி நிறுத் தியே விட்டானே என்றிருந்தது.

அதிலும் அவ்வளவு எளிதில் திருப்திப் பட்டுவிடாத தனது கணவனே தான் மிகவும் சிரமப்பட்டுப் பல ஆண்டுகள் உழைத்துப் பெற்ற பலனை விஜயன் சில

வருடங்களில் சாதித்து விட்டானென்று பாராட்டுகிறார் என்றால்...

பாராட்டுவது மட்டுமா, பையன் இமயமலையை இடம் பெயர்த்து வைத்திருக்கிறான், அது உண்மையி லேயே அசாத்தியமென்று எந்நேரமும் சொல்லிக் கொண்டே வேறு இருக்கிறாரே.

பின்னே? அப்படியிருக்கப் போய்த்தானே தலைக்கு மேலிருந்த கடன்களை அடைத்து, திருமண வயதி லிருந்த இரண்டு தங்கைகளுக்கும் ஊரே வியக்கும்படி திருமணத்தை முடித்து, கடனில் மூழ்கவிருந்த வீட்டை, அதை மாளிகை என்றல்லவா சொல்ல வேண்டும், காப் பாற்றி, இப்படி இன்னும் சொல்லிக் கொண்டே போக லாமே.

என்ன, மரணப் படுக்கையில் இருந்த தந்தையைத் தான் விஜயமோகனால் என்ன முயன்றும் காப்பாற்ற முடியாது போயிற்று. அவன் முயன்றும் சாதிக்க முடி யாமல் போன ஒன்று உண்டென்றால் அது மட்டும் தான்.

இவ்வளவு நல்ல மகனைப் பெற்றெடுக்க உண்மையி லேயே அந்தத் தாயும் தவம் செய்திருக்க வேண்டு மென்றுதான் வனஜாவிற்குத் தோன்றியது.

ஆனால் விஜயமோகனைக் கேட்டால், இதையெல் லாம் சாதனைகளென்று சொல்லிக் கொள்ளவே அவன் சிறிதும் தயாராக இருக்கவில்லை.

அவனைப் பொறுத்தவரை அவனுடைய தொழில் கனவுகளே வேறாக இருந்தன.



இப்பொழுதிருக்கும் நிலையை விட இன்னும் பல மடங்கு உயர வேண்டுமென்று அதை இலக்காக வைத்து உழைக்க ஆரம்பித்திருந்தான்.

அதாவது அதைத்தான் தனது முன்னேற்றத்திற்கான முதல் படியென்று அவன் நினைத்தான்.

விஜயமோகன் குடும்பத்திற்கும், வனஜா - வாசுதேவன் குடும்பத்திற்கும் கடந்த ஐந்து வருடங்களாகத் தான் நட்பு.

ஆனால் மனம் விட்டுப் பேசிப் பழகியதாலோ என்னவோ எத்தனையோ காலங்கள் தோழமையுடன் பழகி விட்டிருந்ததைப் போன்ற உணர்வுதான் இரண்டு குடும்பங்களுக்குமே.

விஜயமோகனின் குடும்பம் அவனுடைய தாத்தா காலத்திலிருந்தே அங்கே தான் வசித்துக் கொண் டிருந்தது. அதாவது காலங்காலமாகவே அவர்களு டையது செழிப்பு மிகுந்த குடும்பம்.

விஜயமோகன் குடும்பத்திற்கு ஒரே ஆண் பிள்ளை. அவனுக்கு இளையவர்களாக இரண்டு பெண்கள்.

நான்கு வருடங்களுக்கு முன்பு அதாவது விஜய மோகன் மேல் படிப்புக்காக வெளிநாட்டில் தங்கியிருந்த போதெல்லாம், அவர்களுடைய குடும்பத்திற்கு எந்தப் பிரச்சனையும் இருக்கவில்லை. அதற்கு ஒரு வருடம் முன்புதான் அவர்களுடைய பக்கத்து வீட்டை விலைக்கு வாங்கிக் கொண்டு வாசுதேவனின் குடும்பமும் அங்கு குடி வந்திருந்தது.

அனைத்துப் பொறுப்புகளையும் மகனுடைய கையில் ஒப்படைக்க வேண்டுமென்பதற்காகவே உயிரைப்

பிடித்துக் கொண்டு காத்திருந்தாற்போல, விஜயமோகன் வெளிநாட்டில் படிப்பை முடித்துக்கொண்டு இந்தியா திரும்புவதற்கும் அவனுடைய தந்தை மரணப் படுக் கையில் விழுவதற்கும் சரியாக இருந்தது.

மலை போலிருந்த மனிதர் திடீரென்று அப்படி விழ்வாரென்று விஜயமோகன் உட்பட யாருமே கன விலும் கூட நினைத்துப் பார்த்திருக்கவில்லை.

மரணப் படுக்கையிலிருந்த தந்தையைப் பார்த்தே அதிர்ந்து நின்று விட்டிருந்த விஜயமோகனால், தொடர்ந்து சிரமப்பட்டு அவர் சொன்னவற்றையெல்லாம் நம்பக் கூட முடிந்திருக்கவில்லை.

அவர் அந்த நிலையில் மட்டும் இல்லாமல் இருந் திருந்தால், ஏன் விளையாடுகிறீர்கள் என்றுகூடக் கேட்டிருப்பான்.

ஆனால் நிமிடத்திற்கு நிமிடம் சுயநினைவை இழந்து கொண்டிருக்கும் தந்தை விளையாட மாட்டார் என் பதையும், நிதர்சனமான உண்மையைத் தான் அவர் சொல்கிறார் என்பதையும், அதற்குப் பிறகுதான் அவ னால் புரிந்து கொள்ள முடிந்தது.

ஆனால் முயன்று தனக்கு நினைவிற்கு வந்தவற்றை மட்டும் அவ்வப்பொழுது கொஞ்சம் கொஞ்சமாகத் தனது தந்தை சொல்லிக் கொண்டே போக, அவையெல்லாம் விஜயமோகனின் காதுகள் வரை மட்டும் தான் சென் றிருந்தன.

முதலில் தந்தையின் உடலில் என்ன பிரச்சனை, எப்படித் திடீரென்று இந்த நிலைமைக்கு வந்தார், என்



றெல்லாம் நினைத்தவன், அவரைப் பார்க்கும் டாக் டரைச் சந்திக்க ஓடினான்.

ஆனால் அந்த டாக்டரோ, நல்லவேளையாக வந்து சேர்ந்தீர்கள், உங்கள் தந்தை கடைசிக் கட்டத்தில் இருக்கிறார். இனி மருத்துவ ரீதியாக நாங்கள் செய்ய ஒன்றுமில்லையென்று கையை விரித்து விட்டிருந்தார்.

எப்படியும் இன்றோ நாளையோ நீங்கள் வந்து விடு வீர்கள், உங்கள் கையில் அனைத்துப் பொறுப்புகளையும் ஒப்படைத்து விடலாமென்று சில நாட்களாக உங்கள் தந்தை சொல்லிக் கொண்டே இருக்கிறார்.

அவருக்கு உடல் நலம் மட்டும் தான் பிரச்சனை என்றால் ஓரளவு காப்பாற்றி எழுந்து உட்காருமளவிற்குக் கூடச் செய்திருப்போம். ஆனால் அவருக்குப் பிரச்சனை மனதிலும் கூடத்தான்.

அதற்கு மேலும் டாக்டர் ஏதேதோ சொல்லிக் கொண்டே போக, செய்வதறியாது அப்படியே நின்று விட்டிருந்தான் விஜயமோகன்.

அவனுடைய தந்தை நோயின் வேதனையில் மிகவும் சிரமப்பட்டு இடைவெளி விட்டுவிட்டுச் சொன்னதை, டாக்டர் தெளிவாகச் சொல்லி விட்டிருந்தார். அவ் வளவே.

தொழிலில் பெரிய அடி, காலங்காலமாக இருக்கும் வீடு கடனில் மூழ்கிப் போகிற நிலை, தலைக்கு மேல் ஏராளமான கடன், திருமண வயதில் இரண்டு தங் கைகள், உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் பெற்ற தந்தை. இவை எல்லாவற்றிற்கும் மேலாக இருக்கும் நிலை பற்றி எதுவுமே அறியாமல் தந்தையின் அந்த

நிலை ஒன்றிற்கே அதிர்ந்து செய்தறியாது தடுமாறிப்
போய்விட்டிருந்த தாயும் தங்கைகளும்.

வெளிநாட்டில் மேற்படிப்பை முடித்துக் கொண்டு
எத்தனையோ எண்ணற்ற கனவுகளுடன் திரும்பி
வந்திருந்த விஜயமோகனுக்கு அப்போதைய தன் நிலை
யாரோ ஒரு பெரிய மலையைத் தூக்கித் தன
தோள்களின் மீது வைத்து விட்டதைப் போலிருந்தது.

கடன், தொழிலில் அடி, தங்கைகளின் திருமண
என்பதற்கெல்லாம் அவன் துளியும் துவண்டு விட்
டிருக்கவில்லை.

பணம் மட்டும்தான் பிரச்சனையென்றால், அதை
சம்பாதித்துவிட முடியும். அது எவ்வளவு என்றாலும்.

அந்த நம்பிக்கை விஜயமோகனுக்கு நிறையவே
இருந்தது.

அதற்குத்தான் கடவுள் நல்ல ஆரோக்கியத்தையும்
நிறைவாகக் கை கால்களையும், அதற்கு மேல் பெற்ற
வர்கள் நல்ல குணநலன்களையும் தரமான படிப்பையு
கொடுத்திருக்கிறார்களே என்றிருந்தது.

ஆனால் அவன் துவண்டு நின்றது பெற்ற த
தைக்காக.

இனி அவ்வளவுதான், உன் தந்தை எழுந்து வர
போவதில்லை, அவர் கடைசிக் கட்டத்தில் இரு
கிறாரென்று டாக்டர்கள் கையை விரித்து விட்டதற்கா

இல்லை, எப்படியேனும் நான் என் தந்தையைக் கா
பாற்றியே தீருவேனென்று எழுந்து நின்றிருந்த மகனுக்
அவனுடைய தந்தை ஆதிகேசவன் எந்தச் சிரமத்தையு



கொடுக்காமல் அன்று இரவே இந்த உலகத்தை விட்டுச்
சென்றிருந்தார்.

தந்தையின் மறைவு. அதுதான் உன் தலைமீது
எத்தனை எத்தனையோ பொறுப்புகளை வைத்திருக்
கிறேனே. வினாடி கூட வீண் செய்யாமல் நீ அதைப்
போய்ப் பாரென்று சொல்லாமல் சொல்வதைப் போலி
ருந்தது விஜயமோகனுக்கு.

தாங்கொணாத துயரத்துடன் தலைமகனாகத் தந்தைக்
குத் தான் செய்தாக வேண்டிய இறுதிக் காரியங்களைச்
செய்து முடித்த அந்த வேளைதான், அவன் கடைசியாக
ஓரளவு நன்றாகச் சுவாசித்த நிமிடங்கள் என்று கூடச்
சொல்லலாம். அதற்குப் பிறகு...

நான்கு முழு ஆண்டுகள் பறந்து போய் விட்டிருந்தன.

தந்தை கொடுத்து விட்டுச் சென்றிருந்த, அதாவது
குடும்பத்தை நெருக்கிக் கொண்டிருந்த பிரச்சனைகளை
எல்லாம் சுமுகமாக முடித்து விட்டிருந்தான் விஜய
மோகன்.

ஒரு சில ஆண்டுகளுக்குப் பிறகு மனம் மிகவும்
நிதானித்து விட்டதைப் போலவும், இடைவிடாது சுற்றிக்
கொண்டே இருந்த உலகம் இப்பொழுது சற்று ஆசுவாச
மாக அமர்ந்து இளைப்பாறிக் கொண்டிருப்பதைப்
போலவும் மனதிற்குள் உணர்ந்தான்.

அதிகாலைச் சூரிய உதயத்தைச் சில நிமிடங்கள்
நின்று ரசிக்கவும், தாயின் கைப்பக்குவத்தினால் ஆன
சமையலை ருசித்துச் சாப்பிடவும், ஏதாவது நகைச்
சுவையைக் கேட்க நேரும்போது வாய்விட்டுச் சிரிக்கவும்
கூட இப்பொழுது அவனால் முடிந்தது.

அதாவது நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டு
பழைய விஜயமோகனாக மாறியிருந்தான்.

ஆனாலும் அந்த உழைப்பை அவன் சிறிது
விட்டிருக்கவில்லை. எந்த நேரமும் விழத் தயாராக
தலைக்கு மேல் ஒரு கத்தி தொங்கிக் கொண்டிருந்
அந்த நிலை மாறி இப்பொழுது சராசரி மனிதனை
போல மாறியிருந்தான் என்று வேண்டுமானால் சொல்
லாம்.

பிரச்சனைகள் எல்லாம் முடிந்து மனம் சற்று லேசா
விட்டதாலோ என்னவோ, திட்டமிட்டு முன்னைவிட
சற்று அதிகமாகவே உழைக்க ஆரம்பித்து விட்டிருந்தா
என்றும் கூடச் சொல்லலாம்.

"வித்யா உங்கிட்டப் பேசணுமாம் அர்விந்த்," என்
உதயா தனது மொபைலைக் கொண்டு வந்து அவனிட
கொடுக்க, "வா உதயா, வந்து உக்காரு. அதுக்குள்ள என்
போய்ட்ட?" என்று அழைத்தார் வனஜா.

"அப்புறம் இவதான் உதயா. என்னோட அக்
பொண்ணு," என்று வனஜா அவளை விஜயமோகனுக்
அறிமுகப்படுத்த, "ஏதோ உதயா என்னத் திட்டாம நீ
பாத்துக்குவீங்கன்ற தைரியத்துல பேசறேன்," என்
விஜயமோகன், "ஹாய் உதயா! உன்னோட பேர் ம
ரியே நீயும் கூட அழகாத்தான் இருக்க!" என்றான்.

அவன் அப்படிச் சொன்னதை அங்கிருந்த அ
வருமே இயல்பாக எடுத்துக் கொண்டிருப்பது தெ
தாலும், அப்படிச் சொன்னவனின் கண்களிலும் மு
திலும் வித்தியாசமாக ஏதோ தெரிகிறதோ என்று உ
வால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.



"என்னது, உதயா திட்றதா? அதுவும் உங்கள?" என்று
வனஜா ஆச்சரியத்துடன் சிரித்துக் கொண்டே கேட்க,
"எங்க உதயாக்கா ரொம்பவும் ஸாஃப்ட். அவங்களுக்கு
அதிர்ந்து பேசக்கூடத் தெரியாது," என்று பெருமையாகச்
சொன்னான் அபிஷேக்.

"நீங்க எல்லாருமே சொல்றதால போனாப் போகு
துன்னு நம்பிக்கறேன்," என்று விஜயமோகன் சொல்ல,
ஏனோ மற்றவர்களுக்காக என்றுகூட எதுவுமே பேசத்
தோன்றாது போய்விட அப்படியே அமர்ந்து விட்டிருந்
தாள் உதயா.

"அப்புறம் விஜயன், எனக்கொரு சின்ன உதவி
வேணும்," என்ற வனஜாவிடம், "சொல்லுங்க ஆன்ட்டி,"
என்றான் அவன்.

"வேல தேடித்தான் உதயா இங்க வந்திருக்கா. ஏதோ
ஒரு வேலைன்னா எத்தனையோ வேலைகள் இப்பவும்
தயாராத்தான் இருக்கு. ஆனா நீங்க நினைச்சா அவ
படிப்புக்குச் சம்பந்தமான நல்ல வேலையவே தேடிக்
குடுக்க முடியும். இதுகூட ஒன்னும் அவசரமில்ல. சும்மா
உங்ககிட்டயும் ஒரு வார்த்தை சொல்லி வைக்கலா
மேன்னு தான் சொல்றேன்."

மற்றவர்களுக்கு எப்படியோ, இருந்திருந்து இந்த
ஜொள்ளு பார்ட்டி நமக்கு வேலை வாங்கித் தருவதா
என்று உதயாவிற்குத் தான் ஒரு மாதிரியாகி விட்
டிருந்தது.

ஆனால் முயன்று அது வெளியே தெரிந்து விடாத
வாறு முகத்தைச் சாதாரணமாக வைத்துக் கொண்டாள்

என்றாலும் அது விஜயமோகனின் கூர்மையான
பார்வையில் படத் தவறியிருக்கவில்லை.

ஆனாலும் நமது சித்தி ஏன் இவனுக்கு இவ்வளவு
மரியாதை கொடுக்கிறார் என்று உதயாவால் நினைக்
காமல் இருக்க முடியவில்லை.

அது மட்டுமல்லாமல், இவன் வாங்கிக் கொடுக்கு
வேலையென்றால் அது நமக்குத் தேவையே இல்லை
வேண்டாமென்று ஒற்றை வார்த்தையில் மறுத்துவிட
வேண்டியதுதான் என்ற முடிவுக்கும் மனதிற்குள் வந்
விட்டிருந்தாள் உதயா.

# 3

உதயா நினைத்தது போல எதுவுமே நடந்திருக்
வில்லை.

தொடர்ந்து வந்த இரண்டு நாட்களிலேயே விஜய
மோகன் சொன்ன வேலைக்கு அவள் சென்று சேர்ந்
கொள்ளும்படி நேர்ந்தது.

அது மட்டுமல்லாமல், அவள் வேலையில் சே
நேர்ந்ததும் கூட விஜயமோகனிடமேதான்.

உன் படிப்புக்கு ஏற்ற பிரமாதமான வேலை என்
அவளுடைய சித்தப்பா தானே அழைத்துச் சொல்
விட்ட பிறகு உதயாவாலும் மறுத்து எதையும் சொல்
முடிந்திருக்கவில்லை.



சரிதான், எவனாக இருந்தால் என்ன, செய்யும் வேலைக்கு உரிய ஊதியத்தை வாங்கிக்கொண்டு பேசாமல் போய்க்கொண்டே இருக்க வேண்டியது தானே என்று மனதைத் தேற்றிக் கொண்டாள் உதயா.

அதோடு மட்டுமல்லாமல், முன்பின் தெரியாத எவனிடமோ சென்று வேலை செய்வதைவிட, தெரிந்த இவன் எவ்வளவோ மேலென்றும், அப்படி மிகவும் மோசமானவனிடமெல்லாம் சித்தப்பாவும் ஒன்றும் தன்னை அனுப்பிவிட மாட்டாரென்றும், தன்னைத் தானே சமாதானமும் படுத்திக் கொண்டாள்.

உதயா படித்திருந்தது எலக்ட்ரானிக்ஸில் பி.இ.

அவளுடைய படிப்புக்கு அந்தச் சென்னை சிட்டியில் நல்ல வேலைகள் இருக்கின்றன என்பது தெரிந்ததால் தான் அவள் வேலை தேடி அங்கு வந்ததே.

அப்படி வந்தவளுக்கு அவள் எதிர்பார்த்தது போலவே உடனே நல்ல வேலையும் கிடைத்து விட்டிருந்தது என்றாலும், அதற்காக அவளால் ஏனோ துளியும் சந்தோஷப் பட முடியவில்லை.

ஏனென்றால் அவள் வேலை செய்ய நேர்ந்ததும் கூட விஜயமோகனின் நேரடிப் பார்வையில். அதாவது அவனுக்கு நேர் கீழேதான்.

திட்டமிட்டே இப்படிச் செய்து விட்டானோ என்று உதயா மனதிற்குள் அதிர்ந்து போயிருக்க, மற்றவர்களோ உதயா நீ மிகவும் அதிர்ஷ்டசாலி என்றார்கள்.

"என்ன அதிர்ஷ்டமோ போ," என்று மனதிற்குள் விரக்தியாகச் சிரித்துக் கொள்வதைத் தவிர அப்போதைக்கு அவளால் வேறு எதையும் செய்ய முடிந்திருக்கவில்லை.

''குட் மார்னிங் ஸார்.''

''வெரி குட்மார்னிங்.''

வேலையில் மும்முரமாக இருப்பதைப் போலக்
காட்டிக் கொண்ட விஜயமோகனை என்ன நடிப்பு என்று
ஏளனமாகப் பார்த்தாள் உதயா.

ஆனால் உண்மையிலேயே அவனுடைய கவனம்
முழுவதும் வேலையில் தான் இருந்தது.

சில வினாடிகளில் நிமிர்ந்தவன், ''ஓ, வாங்க மேடம்,''
என்றான்.

ஆஹா! நடிப்பு பிரமாதமாகத்தான் இருக்கிறது
ஆனால் அதை நம்பத்தான் இவன் ஏமாந்தவள் எவளை
யாவது பிடிக்க வேண்டுமென்று மனதிற்குள் எரிச்
லுடன் நினைத்தாள்.

''முதல் நாள் வேலை, எனிவே கங்ராட்ஸ்.''

அடடா! மற்ற இடங்களிலேயே வழிபவன், அ
னுடைய இடத்தில். இனிச் சொல்லவும் வேண்டுமா?

பேசாமல் உன்னிடம் வேலை செய்ய எனக்கு விருப்
மில்லை என்றுவிட்டுப் போய் விட்டாலென்ன என்
கூடத் தோன்றி விட்டிருந்தது உதயாவிற்கு.

ஆனால் சித்தப்பாவுக்கு என்ன பதில் சொல்வது?

அவர் எதையும் அவ்வளவு எளிதில் விட்டு விடுபவ
கிடையாதே. என்ன, ஏதென்று தாண்டித் துருவி
கேட்பாரே.

வேண்டாம், எங்கே என்றாலும் நாம் வேலைக்கு
சென்றே ஆக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோ



அப்படி யிருக்கும்போது இவனையே சமாளித்துக்
கொண்டு போக வேண்டியது தான்...

''என்ன மேடம், திகைத்து நின்னுட்டீங்க?''

''இல்லையே, நான்...''

''இல்ல, வாய் பேசற அளவுக்கு ஸ்பீட் வேலைல
இருக்காதா?''

''முதல்ல வேலையக் குடுத்துட்டு, அதுக்கப்புறம்
கேள்வி கேட்டா நல்லாக்கும்.''

''குட். எனக்கும் வெட்டி நியாயம் பேசறதுல விருப்ப
மில்ல,'' என்றவன் தனக்கும் வேலை நடப்பது தான்
முக்கியம் என்பதை மறைமுகமாகச் சொன்னான்.

அதற்குப் பிறகு அவசியமற்ற பேச்சுகள் எதற்கும்
அங்கே இடமிருக்கவில்லை.

அந்த ஒரு நாளிலேயே விஜயமோகனைப் பற்றி
ஓரளவு தெரிந்து கொண்டு விட்டிருந்தாள் உதயா.

சித்தப்பாவே இவனிடம் தன்னை வேலைக்கு அனுப்பி
விட்ட பிறகும் இதை எப்படி நாம் எதிர்பார்க்காமல்
போனோம் என்றிருந்தது.

மிகவும் ஏழ்மையான சூழலில் வளர்ந்திருந்த உதயா
விற்கு, வாழ்க்கையில் அனைவரும் ஆச்சரியப்படும்
அளவிற்கு முன்னுக்கு வர வேண்டுமென்று வெறியா
கவே இருந்தது.

அதற்குச் சித்தப்பா சரியான இடத்தைத்தான்
தேர்ந்தெடுத்துக் கொடுத்திருக்கிறார் என்ற நம்பிக்கை
இப்பொழுது அவளுக்கு நிறையவே வந்து விட்டிருந்தது.

அதோடு மட்டுமல்லாமல் அவரின் மேலிருந்த மரி யாதையும் கூட மேலும் அதிகமாகியிருந்தது.

விஜயமோகனைப் பற்றியோ சொல்ல வேண்டியதே இருக்கவில்லை. ஒரு நாளிலேயே கூட ஒருவரின் மேல் நாம் வைத்திருக்கும் கருத்து அப்படியே தலைகீழாக மாற வாய்ப்பிருக்கிறதா என்று அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது.

உடனே மோசமான கருத்து வந்ததும்கூட ஒரு சில நிமிடங்களில் தானே என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள்.

ஒரு வாரம் சென்றிருந்தது.

விஜயமோகனின் மேலிருந்த மரியாதை அந்த ஒரு வாரத்தில் மேலும் பல மடங்கு அதிகமாகியிருந்தது உதயாவிற்கு.

அவனுடைய சிறு சிறு செயல்களிலும் கூட அவன் மேல் தனக்கிருக்கும் மதிப்பும் மரியாதையும் அதிகமாகிக் கொண்டே போவதை என்ன முயன்றும் உதயாவால் தடுக்க முடிந்திருக்கவில்லை.

அதிலும் அவன் சொல்லும் வேலைகளைச் செய்யும் ஒரு பெண் என்பதைத் தாண்டி அவனுடைய கவனம் தன் மேல் விழுந்திருக்காததில், அவளாலும் நிம்மதியாக வேலையில் கவனத்தைச் செலுத்தவும், வேலை நுணுக் கங்களை எளிதாகக் கற்றுக் கொள்ளவும் முடிந்தது.

அதிலும் நிறையக் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற தனது ஆர்வத்திற்கு மதிப்பளித்து விஜயமோகனும் முக்கியமானவற்றை அவ்வப்பொழுது விளக்கிச் சொன்



னதில் வேலையின் மீதிருந்த ஈடுபாடும் சுவாரஸ்யமும் உதயாவிற்கு மேலும் மேலும் அதிகமாகிக் கொண்டே போனதென்று கூடச் சொல்லலாம்.

அனைத்திற்கும் மேலாக விஜயமோகனின் நிறுவனம் அவ்வளவு பெரியதாக இருக்குமென்றும், அவனுடைய மெச்சும் பார்வை ஒன்றிற்கே அவன் தன் கண்ணசை வில் சொல்லும் வேலைகளைக் கூடச் சிரமேற்கொண்டு செய்து முடிக்கத் தயாராகப் பல நூறு பேர் சந்தோஷ மாகக் காத்துக் கொண்டிருப்பார்களென்றும் உதயா சிறிதும் எதிர்பார்த்திருக்கவில்லை.

அவனுடைய நிர்வாகத் திறமையும் அத்தகையதாக இருந்தது.

அதிலும் உதயா கற்றிருந்த கல்வி தொடர்பாகவே அவளுடைய வேலையும் அமைந்து விட்டிருந்ததில், அவள் மேலும் மேலும் தனது கல்வித் தகுதிகளையும், திறமைகளையும் வளர்த்துக் கொள்வதற்கு அந்த வேலை ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்து விட்டிருந்த தென்றும் கூடச் சொல்லலாம்.

விஜயமோகனுடையது ட்ரெட்மில், சைக்ளிங் என இன்னும் பல வகையான உடற்பயிற்சிச் சாதனங்களை உற்பத்தி செய்யும் ஒரு முன்னணி நிறுவனம்.

சந்தையில் அவர்களுடையது முன்னணிச் சாதனங் களாகவும் விலையிலும் அனைவரும் வாங்கக் கூடிய அளவிற்குக் கட்டுப்படியாகக் கூடிய விலையிலும் அவர்களுடைய தயாரிப்புகள் அனைத்தும் இருந்தன.

அதிலும் விஜயமோகன் தனது சாதனங்களின் உற் பத்தியை நாளுக்கு நாள் நவீன மயமாக்கிக் கொண்டே

சென்றதும், அதே சமயம் உடல் நலத்தின் மீதும் உடற்பயிற்சியின் மீதும் மக்களுக்கிருக்கும் ஈடுபாடும், முக்கியத்துவமும் அதிகமாகிக் கொண்டே வந்ததும் கூட அவன் தனது தொழிலை மேலும் மேலும் சிறப்பாகக் கொண்டு செல்வதற்கு மிகவும் உறுதுணையாக அமைந்தன என்று சொல்லலாம்.

தயக்கத்துடன் தனக்கு முன்னால் வந்து நின்ற உத யாவை நிமிர்ந்து என்னவென்பதைப் போலப் பார்த்தான் விஜயமோகன்.

''எனக்கொரு சின்ன உதவி வேணும்.''

தயக்கத்துடன் மெல்லிய குரலில் கேட்டவளை... ம் சொல்லு என்பதைப் போலப் பார்த்தான்.

..............

''இல்ல, பரவாயில்ல...''

''ம் என்ன?''

''இல்ல, ஒண்ணுமில்ல.''

''எதையோ கேக்க வந்துட்டு, அதுக்கப்புறம் எதுக்கு இவ்வளவு தயக்கம்? எதுவா இருந்தாலும் கேளு.''

''எனக்கு ஒரு பத்தாயிரம் பணம் வேணும்,'' என்று பெரிய மனப் போராட்டத்திற்கு இடையே ஒரு வழி யாகக் கேட்டே விட்டிருந்தாள் உதயா.

''அவ்வளவுதானா? ஈவினிங் போகும்போது வாங் கிக்கோ,'' என்று தனது வேலையில் கவனத்தைச் செலுத் தத் தொடங்கி விட்டிருந்தவன், மீண்டும் நிமிர்ந்து ''இல்ல, இப்பவே வேணுமா?'' என்று கேட்டான்.



''இல்ல ஸார், ஈவினிங் இருந்தாப் போதும்.''

''எதுவா இருந்தாலும் கேக்கறதுக்கே ஏன் இவ்வளவு தயங்கற? உங்கிட்ட நான் இத எதிர்பாக்கல,'' என்ற வனின் முகத்தில் என்ன இருந்தது?

ஏளனமா?....

இல்லையில்லை, சுவாரஸ்யமாகத்தான் ஏதோ தெரிந்த மாதிரி இருந்ததோ?

''ம், சொல்லு!''

மீண்டும் அப்படிக் கேட்டவனிடம், ''தங்கைக்கு உடனே காலேஜ் ஃபீஸ் கட்ட வேண்டியதாயிடுச்சு. அதான்,'' என்றவள்,

''என் முதல் மாசச் சம்பளத்துலயே அப்படியே எடுத் துக்கோங்க,'' என்றாள்.

''முதல்ல உன் சம்பளம் என்னன்னு தெரியுமா உனக்கு?''

கடவுளே! அப்படியானால் தனக்கு அவன் தரவிருக் கும் சம்பளம் பத்தாயிரத்திற்கும் குறைவோ, அப்படித் தான் என்றால் அவனுக்குத் தான் மீதிப் பணத்தைத் திருப்பிக் கொடுப்பதற்கான வழியென்ன?

ம்கூம், அவன் அந்த அர்த்தத்தில் கேட்டிருக்க மாட்டான்...

''என்ன?''

''இல்லன்னா, நான் வேணும்னா...''

முதலில் பணம் கேட்பதற்காகவும், பிறகு அதைக் கேட்டு விட்டும் உதயா படும்பாடு விஜயமோகனுக்கே பாவமாக இருந்தது.

தானும் ஒரு காலத்தில் குடும்பத் தேவைகளை நிறை வேற்ற எப்படியெல்லாம் சிரமப்பட நேர்ந்தது என்பதை அவனுக்கு நினைவுபடுத்தியது.

"இன்னும் கொஞ்சம் பணத்தேவை இருந்தாக் கூடத் தயங்காமக் கேளுன்னு சொல்றேன். அவ்வளவுதான்."

"தேங்க் யூ ஸார். ஆனா என் தேவை அவ்வளவு மட்டும்தான்."

"உண்மையாவா?"

'இதென்ன, இப்படிக் கேட்கிறான்,' என்று நினைத் தவள், விஜயமோகன் சொல்ல வருவது புரியாமல் அவனைப் பார்த்தாள்.

"இல்ல, உனக்கு வேற ஏதாவது தேவைகள் இருந்தாக் கூடக் கேளு," என்றவனின் பார்வை தனது உடையில் விழுந்து பிறகு நடப்புக்கு வந்ததோ என்று அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

தான் அணிந்திருக்கும் அந்த நடுத்தரமான சுடிதார் உதயாவைப் பொறுத்தவரை அதுவே புதியது போலத் தான் முள்ளாய் உடல் முழுக்கக் குத்துவதைப் போலக் கூனிக் குறுகிப் போனாள்.

ஆனாலும் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் தன்னால் இயன்ற மட்டும் நிமிர்ந்து நின்றாள்.

"இல்ல ஸார், தேங்க்ஸ்."

"சரிதான்," என்று அவன் தனது வேலையைப் பார்க் கத் தொடங்கியிருக்க, எப்படியோ ஒரு பெரிய பிரச்சனை தீர்ந்ததென்ற நிம்மதியுடன் தன்னிடத்திற்கு வருவதற் காகத் திரும்பியிருந்த உதயா மீண்டும் நின்றிருந்தாள்.



அதை உணர்ந்து நிமிர்ந்திருந்த விஜயமோகன் என்னவென்பதைப் போல உதயாவைப் பார்த்தான்.

"இல்ல, நான் உங்ககிட்ட பணம் கேட்டது எங்க சித்தி வீட்டுக்குத் தெரிய வேண்டாமே..."

"ஓ.கே."

அவன் தன்னைத் தவறாக ஏதும் எண்ணி விடு வானோ என்று அதற்கும் தயங்கியவள், "அப்புறம் தெரிஞ்சா நான் அவங்ககிட்டயே கேட்டிருக்கலாம் தானேன்னு சங்கடப்படுவாங்க," என்று மீண்டும் சொன் னாள்.

"ஏன், நீ சொல்ற மாதிரி உனக்காக என்ன வேணும் னாலும் செய்ய அவங்களும் தயாராதான இருக்காங்க. அப்படியிருக்கும்போது நீ அவங்ககிட்டயே..."

"கேட்டிருக்கலாம் ஸார், அவங்களும் சந்தோஷமா உடனே எடுத்துக் குடுக்கவும் செய்வாங்க," என்றவள்,

"ஆனா அவங்ககிட்ட என்னால திருப்பிக் குடுக்க முடியாது. அதாவது வாங்கிக்க மாட்டாங்க," எனறாள்.

...........

"அது மட்டுமில்லாம எங்க அம்மா அத விரும்பவும் மாட்டாங்க. எங்க சின்ன வயசிலிருந்தே அம்மா, யார்கிட்டிருந்தும் எந்த உதவியையும் வாங்கிக்கிட்டது கிடையாது. முக்கியமா சொந்தங்ககிட்டிருந்து... இப்ப கூட அவங்களே பணத்தை ரெடி பண்ணிக்கறேன்னு தான் சொன்னாங்க. ஆனா எனக்குதான் அவங்க சிரமப்படுவாங்களேன்னு ஒரு எண்ணம். அதான்."

தனது சிறிய வயதில் என்றோ ஒருமுறை தனது தாய்
சித்தியிடம் உதவி கேட்கப் போய் அதற்குச் சித்தப்பா
கோபமாக எதையோ சொல்லி விட்டாரோ என்று
ஒன்றும் புரியாத வயதில் நினைத்துக் கொண்டது போல
இப்பொழுதும் மனதிற்குள் நினைத்துக் கொண்டாள்
உதயா.

ஒரு சிறிய உதவிக்குக்கூட யாரிடமும் போய் நின்று
விடாமல் தன்னையும், தங்கையையும் இந்த அளவிற்கு
வளர்த்து ஆளாக்கியிருக்கும் தாயின் தன்மானத்திற்குத்
தன்னால் பங்கம் ஏதும் வந்துவிடக் கூடாது என்பதிலும்
அவள் உறுதியாக இருந்தாள்.

ஆனால் இதையெல்லாம் தனக்கு முன்னர் அமர்ந்
திருப்பவனிடம் சொல்ல முடியுமா என்ன? அப்படியே
சொன்னாலும் புரியுமா...?

''சொல்ல மாட்டேன், போதுமா?'' என்றவனிடம்
புன்னகையுடன், ''தேங்க்யூ ஸார்,'' என்றாள்.

''அடடா! என்ன அபூர்வமான சிரிப்பு, நீ ஏன் தினமும்
இதே மாதிரி ஏதாவது உதவி கேட்டுட்டே இருக்க
கூடாது?''

அந்த வினாடியே உதயாவின் முகத்திலிருந்த சிரிப்பு
முழுவதும் துணி கொண்டு துடைத்தாற்போலக் காண
மல் போய் விட்டிருந்ததைக் கண்டான் விஜயமோகன்.

''அடடா! முதலுக்கே மோசம் வந்துடுச்சே,'' என்று
அலுத்துக்கொண்ட விஜயமோகனின் பாவனையில்
மீண்டும் தோன்றிய சிரிப்பை முயன்று கட்டுப்படுத்திக்
கொண்டாள் உதயா.



# 4

அன்று ஞாயிறு விடுமுறை நாள் என்பதால், படுக்கையை விட்டே மெதுவாகத்தான் எழுந்தாள் உதயா.

அதற்குப் பிறகும் கூட அனைத்து வேலைகளுமே மந்த கதியில்தான் நடந்தன.

ஊரில் இதே நேரம் அம்மாவும், தங்கையும் என்ன செய்து கொண்டிருப்பார்களென்று நினைக்கத் தோன்றியது.

என்ன, அம்மா வேகமாகச் சமையலை முடித்து அனைத்தையும் எடுத்து வைத்து விட்டு, வித்யாவிடம் மேல் வேலைகளைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு, துணி எடுக்கும் வேலையைப் பார்க்கப் போயிருப்பாரென்று தோன்றியது.

தங்கள் இருவருக்காகவும் அம்மா எவ்வளவு சிரமப்பட்டு உழைக்கிறார் என்று நினைத்ததில் பெருமையாக இருந்தது.

வெறும் உழைப்பு மட்டுமென்றால் அது அனைவருமே செய்வது தான். ஆனால் அப்படிச் சம்பாதிக்கும் பணத்தில் தனக்கென்று எதுவுமே செய்து கொள்ளாமல் தானும் தங்கையும் படிக்க விரும்பியது போலப் படிக்க விரும்பிய கல்லூரியிலேயே பிரமாதமாகப் படிக்க வைத்திருக்கிறாரே என்றும்.

தங்கைக்கும் இது கடைசி ஆண்டு. அவளும் படிப்பை முடித்து விட்டால் தாய்க்குப் பாரம் ஓரளவு குறைய மென்று நிம்மதியுடன் நினைத்துக் கொண்டாள்.

வயிறு பசிக்க ஆரம்பித்திருக்க, நிமிர்ந்து சுவர் கடிகாரத்தில் நேரம் பார்த்தாள் உதயா.

ஒன்பது மணி ஆகியிருக்க, முதலில் கிச்சனுக்கு போய் டிஃபனை எடுத்து வந்து விடலாமென்று கிளம் னாள்.

உதயாவுடன் அறையைப் பகிர்ந்து கொள்ளு இனனொரு பெண் ஒவ்வொரு ஞாயிறன்றும் ஊருக்கு போய் விடுவாள் என்பதால் அன்று அறையில் உதய மட்டும் தான் இருந்தாள்.

மேலும் ஒரு மணி நேரத்தில் தனது சித்தியின் வீ டிற்குச் செல்வதற்காக அறையை விட்டுக் கிளம் யிருந்தாள் உதயா.

அங்கே ஊரில் சந்தோஷமாகவும் சுதந்திரமாகவு இருந்ததைப் போலவும் ஆனால் இங்கே கூண்டுக்கி ஆகி விட்டாற் போலவும் மனதிற்குள் ஒரு மாதிரிய உணர்ந்தாள் உதயா.

ஏனோ சித்தி வீட்டு வாசம் தான் பிடித்தும் இருந்த

ஒரு வேளை அங்கே ஊரில் தங்கையிடம் பே வதைப் போல, இங்கே அர்விந்த் அபிஷேக்குடன் மன விட்டுப் பேசலாம் என்பதால் இருக்குமென்று தனக்கு தானே நினைத்துக் கொண்டாள்.

வீட்டிற்குள் வந்த தன்னை வரவேற்ற சித்தியிட ''அர்விந்த், அபிஷேக் எங்க சித்தி?'' என்று கேட்டாள்



''உள்ள இருந்தாங்கமா. அப்புறம் வா, சமையல் வேலை நடந்துட்டிருக்கு. அப்படியே கிச்சனுக்குப் போய்ட்டே பேசலாம்,'' என்றவர்,

''ஹாஸ்டல்ல எல்லாம் சவுகர்யமா இருக்கா?'' என்று கேட்டார்.

''ஆமாம் சித்தி, எந்தப் பிரச்சனையுமில்ல.''

''சந்தோஷம். டிஃபன் சாப்புடு உதயா.''

''ஆச்சு சித்தி. மணி பாருங்க, பதினொன்னுக்கு மேல ஆயிடுச்சு.''

''அது சரிதான். சரி. இந்தா, ஸ்வீட்டாவது எடுத் துக்கோ,'' என்று சித்தி கொடுத்ததை வாங்கிக் கொண் டவள், அங்கு வந்த அர்விந்தை அவனுடைய பிறந்த நாளுக்காக வாழ்த்தினாள்.

''அப்புறம் உங்க ஃப்ரண்ட்ஸ் எல்லாரும் பார்ட்டிக்கு வரலீங்க இல்லையா, அர்விந்த்?''

''என்ன பார்ட்டிக்கு?''

''உன் பர்த்டே பார்ட்டிக்கு தான்,'' என்றவளிடம், ''அச் சச்சோ! நீங்க வேற உதயாக்கா. அந்த அளவுக்கு க்ரேண்டா சலிபரேட் பண்ணினதெல்லாம் சின்ன வயசுல தான். இப்ப ஈவினிங் ஒரு கேக் வெட்டுவோம். அவ்வளவு தான்,'' என்றான்.

''என்ன, மூனு வேளையும் ஸ்வீட், டிஃபன், சாப்பா ட்டெல்லாம் கொஞ்சம் ஸ்பெஷலா இருக்கும். அவ்வளவு தான்.''

''அடடா! நான் நிறைய எக்ஸ்பெக்ட் பண்ணினேனே,'' என்ற உதயாவிடம், ''அப்ப சொல்லுங்கக்கா, நீங்க

எப்படியெல்லாம் செய்யணும்னு நினைக்கறீங்களோ
அப்படியே...''

''நான் சும்மா கேட்டேன் அர்விந்த். அப்புறம் இந்தா
நீயும் ஸ்வீட் எடுத்துக்கோ.''

''அதெல்லாம் காலையிலிருந்து மூணு தட
சாப்டாச்சு!'' என்று அர்விந்த் சொல்லிக் கொண்டிருக்க

''எப்படியோ உண்மையை ஒத்துக்கறயே. அதுவே
போதுன்டா. அப்புறம் உதயாக்கா, எப்ப வந்தீங்க?'' என்
வந்தான் அபிஷேக்.

அதற்குப் பிறகு சுவாரஸ்யமாகப் பேசுவதிலேயே
மூவருக்கும் நேரம் செல்ல, இடையிடையே தன
சித்திக்கும் சமையலில் உதவி செய்து கொடுத்தா
உதயா.

மதிய உணவிற்குப் பிறகும் சிறியவர்கள் மூவ
தங்களுடைய சிறு வயதில் எடுத்துக் கொண்ட ஃபோ
டோக்கள் அடங்கிய ஆல்பங்களை எடுத்து வைத்
கொண்டு தங்களை மறந்து பழங்கதைகளைப்
ஆரம்பித்து விட்டிருந்தனர்.

அதிலும் அவர்களுடைய சிறிய வயதில் ஒவ்வொ
வரும் செய்த குறும்புகளையும், ரகளைகளை
வேண்டுமென்றே சற்று மிகைப்படுத்திச் சுவாரஸ்ய
மூவரும் சொல்லிச் சிரித்துக் கொண்டிருந்தனர்.

அதிலும் ஒருமுறை விடுமுறைக்கு அபிஷேக்
அர்விந்த்தும் உதயாவின் ஊருக்குச் சென்றிருந்த போ
பக்கத்துத் தோட்டத்து மாம்பழம் ருசியாக இரு
மென்று சிறியவர்கள் நால்வரும் திட்டம் போட்



கொண்டு போய்ப் பறித்ததைப் பற்றியும், பிறகு மாட்டிக் கொண்டு விழித்ததைப் பற்றியும், சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டிருந்தனர்.

''அதுலயும் உதயாக்கா, நீங்க மாட்டிக்கிட்டு அப்படிப் புலம்பி அழுததுமில்லாம எல்லாரையும் வேற போட்டுக் குடுத்தீங்களே. அப்பப்பா! அத இப்ப நினைச்சாலும்...'' என்று வயிற்றைப் பிடித்துக் கொண்டு விழுந்து விழுந்து சிரித்தான் அபிஷேக்.

''பின்ன திருட்டு மாங்கா பறிச்சா என்னாகுமாம்?'' என்ற குரலில் மூவரும் ஒரு சேரத் திரும்பிப் பார்த்தனர்.

விஜயமோகன் உள்ளே வந்து கொண்டிருக்க, அனைவரும் அவனை சந்தோஷமாக வரவேற்றனர்.

அதாவது உதயாவைத் தவிர. உள்ளே இருக்கையில் வந்து அமர்ந்திருந்த விஜயமோகனைப் பார்த்து ஒரு சிறு புன்னகையை மட்டும் உதிர்த்தாள் அவள்.

''அப்புறம் மீதிக் கதயச் சொல்லுங்க.''

''அதெல்லாம் பழைய கத விஜயண்ணா,'' என்று அர்விந்த் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, ''ஆனா ரொம்ப ரொம்ப சுவாரஸ்யமான கதையாக்கும்,'' என்று அப்பொழுது நடந்தது போல அனைத்தையும் கண் முன்னே கொண்டு வந்து சொல்லவே ஆரம்பித்திருந்தான் அபிஷேக்.

சில வினாடிகளில் அர்விந்த்தும் அபிஷேக்குடன் சேர்ந்து கொண்டு அவன் சொல்வதில் இருக்கும் சிறு சிறு விஷயங்களையும் வெகு மும்முரமாகத் தெளிவுபடுத்திச் சொல்லிக்கொண்டே வர, கடைசியில் உதயா தான் நெளிய வேண்டியதாயிற்று.

ஏனென்றால் அந்தப் பழங்கதைக்கான வெகு

முக்கியமான கதாபாத்திரமும் உதயாதான்.

ஏழெட்டு வருடங்களுக்கு முன்பு வரை விடுமுறை

என்றாலே சிறியவர்கள் நால்வரும் ஒன்றுகூடி விடுவது

வழக்கம்.

அந்த மாதிரியான ஒரு விடுமுறை நாளில்தான்

அபிஷேக், அர்விந்த், உதயா, அவளுடைய தங்கை

வித்யா என அவர்கள் நால்வரும் ஒன்று சேர்ந்து விஜய

மோகன் சொன்னது போலத் திருட்டு மாங்காய் பறிக்க

சென்றது.

அப்படிச் சென்று ஆளுக்கு ஒவ்வொன்றாவது பறித்து

விடவேண்டுமென்று அனைவரும் வெகு மும்முரமாக

செயலில் இறங்கியிருந்தபோது, யாரோ நடந்து வரும்

அரவம் கேட்க, உதயாவைத் தவிர மற்ற மூவரும்

அங்கிருந்து காணாமல் போய் விட்டிருந்தனர்.

கடைசியில் தோட்டத்துக்காரரின் கையில் மாட்டி

கொண்டது உதயா.

அந்தத் தோட்டத்துக்காரருக்கும் பல நாட்களாகவே

இந்த மாங்காய்த் திருடர்களைப் பிடிப்பது ஒரு

சவாலாகவே இருந்து வந்ததாலோ என்னவோ, கையில்

அகப்பட்டு விட்டிருந்த உதயாவிடம், உன் மற்ற கூட்

டாளிகளை வரச்சொல். இல்லையென்றால் இதே மர

தில் கட்டி வைத்துத் தோட்டத்து வேலையாட்களையெ

லாம் வரச்சொல்லி சினிமாக்களில் வருவது போல உரு

டுக் கட்டையால் அடிப்போமென்று மிரட்டியிருக்கிறார்.

ஏற்கெனவே இந்தத் திருட்டு மாங்காய் பறிக்கு

வேலைக்கெல்லாம் நான் வர மாட்டேன், அது தவ



என்றெல்லாம் சொல்லி மிகவும் மறுத்திருந்த உதயா,

இப்பொழுது ஓவென்று அழவே தொடங்கி விட்டிருக்

கிறாள்.

அது மட்டுமல்லாமல் என்ன நடந்தது, எத்தனை பேர்

உடன் வந்தார்கள், என்ன திட்டம் என்பதையெல்லாம்

விலாவாரியாகச் சொல்லியும் விட்டிருந்தாள்.

அதில் இன்னொரு சிறப்பு என்னவென்றால் அந்தத்

தோட்டத்துக்காரருக்கும், உதயாவின் குடும்பத்திற்கும்

எப்பொழுதும் ஆகாது என்பதும்.

அதற்குப் பிறகு அந்தத் தோட்டத்துக்காரர் வீட்டிற்கே

கிளம்பி வந்து சண்டை போட்டுவிட்டுச் சென்றது வரை

நடந்திருந்தது.

அபிஷேக் சொல்லச் சொல்லச் சிறு வயதில் மாட்டிக்

கொண்ட போது அனுபவித்ததை விடவும் அதிகமாக

இப்பொழுது கூனிக் குறுகிப் போனாள் உதயா.

அந்த அவஸ்தை அவளுடைய முகத்தில் அப்படியே

தெரிய, ''சரிதான், விடப்பா. உங்க சின்ன வயசுல

திருட்டு மாங்காய்னா எங்க சின்ன வயசுல இன்னும்

என்னென்னவோ ரகளை யெல்லாம் பண்ணியிருக்கோம்,''

என்று அபிஷேக் சொன்னதெல்லாம் தனக்கு அனாவசியம்

என்பதைப் போலக் காட்டிச் சூழ்நிலையை எளிதாக்கி

னான் விஜயமோகன்.

ஆனால் அதற்கு அபிஷேக்கோ, ''அப்படி என்ன நடந்

திருந்தாலும் எங்க உதயாக்கா மாதிரி யாருமே மாட்

டிக்கிட்டு அழுதிருக்க மாட்டாங்க. அரிச்சந்திரனோட

தங்கச்சி மாதிரி பயந்துக்கிட்டு அப்படியா போட்டுக்

கொடுக்கறது?'' என்றான் அவன்.

''அதுதான, உங்க அக்காவாச்சே!'' என்றவன்,

''அதுதான, உங்க அக்காவா இருந்துட்டு இ...

''ஆனாலும் உங்களுக்கு அக்காவா இருந்துட்டு இ... வளவு நல்லவளா எப்படி... என்னால நம்பவே முடியல... என்று அந்த உங்களுக்கு என்ற வார்த்தைக்கு அழுத்... கொடுத்துச் சொன்னான் விஜயமோகன்.

''அண்ணா, வேண்டாம்...''

''அது சரிதான். உங்களுக்குத் தான் உண்மையை... உண்மை பேசறவங்களையும் பாத்தாலே பிடிக்காதே... என்றவன், ''சரிதான். அதுக்கப்புறமாவது இந்தத் திருட்... மாங்கா பறிக்கற வேலைகளையெல்லாம் விட்டிங்க... இல்லையா?'' என்று கேட்டான்.

''என்னது, அதுக்கப்புறம் மாங்கா சாப்புட்ற பழக்... தையே விட்டுட்டோம்னா பாத்துக்கோங்க,'' என்ற அ... ஷேக்கின் பாவனையில் முயன்று சிரிப்பைக் கட்டு... படுத்திக் கொண்டாள் உதயா.

''ஏன், பக்கத்துத் தோட்டத்துக்காரன் உன்ன சொ... மாதிரியே மரத்துல கட்டி வெச்சு அடிச்சுட்டானா?''

''ஐயாவையா? சான்ஸே இல்லண்ணா,'' என்று அ... ஷேக் சொல்ல, ''யாருக்குத் தெரியும்?'' என்று பாவ... யுடன் சொன்னான் விஜயமோகன்.

அதே நேரம், ''வாங்க விஜயன்,'' என்று சித்த... ஹாலுக்கு வர, தான் எழுந்து கொண்டாள் உதயா.

''என்னமா, உக்காரு,'' என்றவரிடம், ''இதோ வர்... சித்தப்பா,'' என்று சமையலறைக்கு வந்திருந்தாள்.

''வாடாம்மா, நானே உன்னக் கூப்புடணும்னு நின... சேன். எல்லாருக்கும் டிஃபன் கொண்டு போ...



குடுக்கறியா?'' என்று கேட்ட சித்தியிடம், ''குடுங்க,'' என்று வாங்கிக் கொண்டு போனாள்.

ஹாலுக்கு வந்தவள், மாயா வந்திருப்பதைக் கண்டாள்.

அவளுடன் இன்னொரு ஆணும். ஜாடையை வைத்துப் பார்த்தால் அவளுடன் பிறந்தவனாகத்தான் இருக்க வேண்டுமென்று தோன்றியது.

அது சரிதான் என்பதைப் போல, ''உதயாக்கா! இவரு மதன். மாயாக்காவோட அண்ணன்,'' என்று அறிமுகப் படுத்தினான் அபிஷேக்.

பதிலுக்கு ஒரு புன்னகையை உதிர்த்தவளை, ''இவங்க உதயா. என் அக்கா,'' என்று உதயாவையும் அந்த மதனுக்கும் அறிமுகப்படுத்தினான்.

ஏனோ விழுங்கி விடுவதைப் போலத் தன்னைப் பார்த்த அந்த மதனின் பார்வையையும், ஏன் அவனையுமே சுத்தமாகப் பிடிக்கவில்லை உதயாவிற்கு.

ஆனாலும் முயன்று மற்றவர்களுக்காகத் தன்னை இயல்பாகக் காட்டிக் கொண்டாள்.

தொடர்ந்து சிறிது நேரத்தில் பிறந்த நாள் கேக் வெட்டப்பட்டது.

அனைவருடைய வாழ்த்துக்களையும், பரிசுகளையும் புன்னகையுடன் ஏற்றுக் கொண்டான் அர்விந்த்.

அனைவரையும் தொடர்ந்து, தானும் தனது பிறந்த நாள் பரிசை ஆசையுடன் கொண்டு போய்க் கொடுத்தாள் உதயா.

''இதெல்லாம் எதுக்கு உதயாக்கா?'' என்று மற்றவர்களிடம் போலவே, அவளிடமும் உணர்ந்து கேட்ட

அர்விந்த், உதயா கொடுத்த பரிசையும் அப்பொழுதே பிரித்தான்.

மாயா, மதன், விஜயமோகன், அர்விந்த், அபிஷேக்கின் தோழர்கள் இருவர் என வந்திருந்த அனைவருமே விலை மதிப்பு மிக்க பரிசுகளைக் கொடுத்திருந்ததைக் கண் டவள், கடவுளே! தானும் சற்றுச் சிரமப்பட்டேனும் ஒரு நல்ல பரிசை வாங்காமல் போனோமே என்று அவ ளுடைய மனம் அடித்துக் கொண்டது.

அவள் மனதிற்குள் எண்ணிப் பயந்தது போலவே, "இது என்ன..." என்று தனது பரிசைப் பார்த்து ஏளனமாகச் சிரிக்கத் தொடங்கி விட்டிருந்த மாயாவைச் செய்வ தறியாது பார்த்தபடி நின்று விட்டிருந்தாள் உதயா.

மனம் ஏனோ மிகவும் பாரமாகி விட்டிருக்க, "வாவ், சூப்பர்ப்! உண்மையிலேயே இது நீங்க வரைஞ்சதா?" என்பன போன்ற வார்த்தைகளெல்லாம் அவளுடைய காதுகளுக்குள் கூடச் சென்றிருக்கவில்லை.

அனைவருக்கும் முன்னிலையில் தான் ஏதோ மிகவும் தாழ்ந்து விட்டதைப் போல மனதிற்குள் கூனிக் குறுகிப் போனாள்.

ஆனால் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் முகத்தை இயல்பாகக் காட்டிக் கொண்டு அங்கிருந்து நகர்ந்து சென்றிருந்தாள்.

அர்விந்த்துக்கு உதயா பரிசாகக் கொடுத்தது அவள் தானே வரைந்த ஒரு ஓவியத்தை.

அவளும் ஒன்றும் ஒரே நாளில் அதை வரைந்து முடித்திருக்கவில்லை. கடந்த வாரம் முழுவதும் விடு தியில் இரவு வெகு நேரம்வரை தூங்காமல் அமர்ந்து



நேற்று இரவுதான் வரைந்தே முடித்திருந்தவள் அன்று காலையில் கிளம்புவதற்குச் சற்று முன்னர் தான் அதற்குச் சட்டமிட்டும் முடித்திருந்தாள்.

மிகுந்த தயக்கத்துடன் நிறைய முறை யோசித்து, ஏனோ அதில் எந்தக் குறையுமே சொல்ல முடியாத அளவிற்குப் பிரமாதமாக வந்திருப்பதைப் போல மன திற்கும் தோன்றவும் தான் அவளும் அதைப் பரிசளிக்க எடுத்து வந்ததும்.

பூத்துக் குலுங்கும் பல வண்ண மலர்கள் அடங்கிய ஒரு அழகிய சோலைவனத்திற்கு நடுவே அதிகாலைக் கதிரவன் தனது செந்நிறக் கதிர்களை அள்ளி வீசிக் கொண்டு மெதுவாகத் தலையை நீட்ட, பல வகையான பறவைகளும் உற்சாகத்துடன் சிறகை அடித்துக் கொண்டு அந்த ரம்மியமான காலை வேளையை சந் தோஷமாக வரவேற்பதைப் போலத் தத்ரூபமாக வந்திருந்தது உதயாவின் அந்த ஓவியம்.

நேரில் கூட இந்த அளவிற்குப் பிரமாதமாகக் காண முடியுமா என்று ஆச்சரியமாகப் போயிற்று விஜயமோக னுக்கு.

வரைவதிலேயே இந்த அளவிற்குக் கொண்டு வந் திருக்கிறாள் என்றால்...

"என்ன விஜயண்ணா, உதயாக்காவோட கிஃப்ட் எப்படி இருக்கு?"

"பணத்தக் குடுத்து நாங்க வாங்கிட்டு வந்த பரி சுகளெல்லாம் இந்த மாதிரி அபூர்வமான பரிசுக்கு முன்னாடி நிக்கக்கூட முடியாது அர்விந்த்," என்று உணர்ந்து சொன்னவனுக்கும் உதயாவின் பரிசு... ம்கூம்... ஓவியம்

என்றும் நீங்கா ஓவியமாய் மனதில் ஆழமாகப் பதிந்
விட்டிருந்தது.

# 5

''குட் மார்னிங் ஸார்.''

உதயா சொல்ல, ''வெரி குட்மார்னிங்,'' என்று நிமி
தான் விஜயமோகன்.

''அப்புறம் உதயா...''

''சொல்லுங்க ஸார்.''

''நேத்தே சொல்லணும்னு நினைச்சேன் ஆனா தி
பவும் பாக்க முடியல, உன் ஓவியம் பிரமாதம்!'' என்றா

''தேங்க்யூ ஸார்.''

''எப்படிச் சின்ன வயசிலிருந்தே இப்படி வரைவிய
இல்ல, க்ளாஸ் போய்க் கத்துக்கிட்டியா?''

''அப்படியெல்லாம் எதுவுமில்ல ஸார். எனக்கா தோனு
போதெல்லாம் வரைஞ்சுட்டே இருப்பேன். இது
அப்படி வரைஞ்சு பாக்கலாமேன்னு வரைஞ்சதுதான்

தான் ஏதோ ஒன்றுமே இல்லாததை மிகைப்படுத்
சொல்லி விட்டதைப் போல வெகு இயல்பாக உ
விடமிருந்து வந்த பதில் விஜயமோகனுக்குப் பி
திருந்தது. கூடவே அவளுடைய தன்னடக்கத்தையு



முடிஞ்சா அதே போல இன்னொன்று வரைஞ்சு
கூடேன் என்றவனிடம், ''ஷ்யூர் ஸார்,'' என்று புன்னகை
யுடன் சொல்லிவிட்டுத் தன்னுடைய இடத்திற்கு
வந்திருந்தாள்.

உணர்ந்து கேட்டிருந்த விஜயமோகனின் வார்த்தை
களில், சரிதான், இன்னொரு வாரத்திற்குத் தன்னுடைய
தொலைதூரக் கல்விப் படிப்பைத் தள்ளிப்போட வேண்
டியது தானென்று மனதிற்குள் நினைத்துக் கொண்டாள்.

அப்படியே என்றாலும் முன்பு போலவே தத்ரூபமாக
வருமா என்று யோசனையாக இருந்தது.

சரிதான், முடியுமென்று நினைத்ததால்தானே அப்
பொழுது முடிந்தது. இப்பொழுதும் அப்படியே நினைப்
போமென்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள்.

தனது மொபைல் அழைக்க, இது என்ன இந்த நேரத்
தில் என்று தயக்கத்துடன் அட்டெண்ட் செய்து காதில்
வைத்து மெதுவாகப் பேசினாள்.

தான் அனுப்பிய பணத்தைப் பெற்றுக் கொண்ட
தாகவும், எப்படியோ தப்பித்தேனென்று ஒரு பெரிய பிரச்
சனையிலிருந்து மீண்டு விட்டாற்போல மிகவும் சந்
தோஷமாகத் தங்கை சொன்னதும் உதயாவின் மனதிற்
குள் சந்தோஷத்தையும், உற்சாகத்தையும் அளிப்பதாக
இருந்தது.

அந்தப் பணத்தைக் கேட்டதும் எடுத்துக் கொடுத்த
விஜயமோகனை நன்றியுடன் மனதிற்குள் நினைத்துக்
கொண்டாள்.

சரிதான், இனி வேலையைப் பார்க்கலாமென்று கவ
னத்தைத் திசை திருப்பியிருந்தவள், பத்து நிமிடங்கள்

கூட வேலையைப் பார்த்திருக்க மாட்டாள். அதற்குள் அவளுடைய மொபைல் மீண்டும் ஒலிக்க, அதைக் கையிலெடுத்தாள்.

கடவுளே! வேலை நேரதில் மீண்டும் யாரென்று யோசித்துக் கொண்டே அவசரமாக அட்டெண்ட் செய்து காதில் வைத்தாள்.

எதிர்முனையில் பேசியவர்கள் யாரென்றே புரியாது போக, சில வினாடிகளில் ராங் நம்பர் என்று போனை வைத்திருந்தாள்.

கடவுளே! விஜயமோகன் தன்னைப் பற்றி என்ன நினைப்பானென்று ஒரே யோசனையாக இருந்தது. முடிந்தவரை வேலை நேரத்தில் போனில் பேசுவதைத் தவிர்த்துக் கொண்டால் நல்லதென்று வேறு ஏற்கெனவே சொல்லி விட்டிருந்தவன் ஆயிற்றே.

மேலும் ஒரு மணி நேரம் சென்றிருந்தது.

தன்னை விஜயமோகன் அழைக்க, எழுந்து சென்றாள் உதயா.

''சொல்லுங்க ஸார்.''

''ஒரு கொட்டேஷன் உடனே ரெடி பண்ணனும். அதுக்கான டீடெய்ல்ஸ்,'' என்று விஜயமோகன் கொடுத் ததை வாங்கிக் கொண்டாள்.

''இங்க வேலை கொஞ்சம் குறைவா இருக்கறப்ப, இல்லன்னா... தினமும் ஒரே மாதிரி ஏதோ ஒரு ரெண்டு மணி நேரம் நீ ஃபேக்டரிக்குப் போய் பிராக்டிகலா வேலை கத்துக்கணும்னாலும் போய்ட்டு வா,'' என்ற விஜயமோகனிடம்,



''தேங்க் யூ ஸார். நானே உங்ககிட்ட கேக்கணும்னு இருந்தேன். நெக்ஸ்ட் மந்தல இருந்து நான் அப்படிச் செஞ்சுக்கறேன்,'' என்றாள் உதயா.

மேலும் மேலும் நிறையக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதிலும், தொடர்ந்து படிக்க வேண்டுமென்பதிலும் உறுதியாக இருந்தாள் உதயா. தான் சொல்லி அதைத் தனது சித்தி வீட்டினர் விஜயமோகனிடம் சொல்லி விட்டிருக்கிறார்கள் என்பதும் அவள் அறிந்ததே.

கொட்டேஷன் தயார் செய்வதில் நிறையச் சந்தேகங்கள் வர, விஜயமோகனே சொன்னது போல, அவனுடைய டேபிளில் வைத்தே வேலை செய்யத் தொடங்கி விட்டிருந்தாள் உதயா.

இன்னும் சில நிமிடங்கள் இருந்திருந்தால் தயாரித்தே முடித்திருப்பாள்.

ஆனால் அதற்குள் யாரோ அந்த அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வரும் அரவம் கேட்கத் தானும் திரும்பிப் பார்த்தாள் உதயா.

மாயா.

கடவுளே! இவள் எங்கே இங்கே?

ஆனால் அதே நேரம், ''வாங்க மேடம்,'' என்று வரவேற்றான் விஜயமோகன்.

''பரவாயில்லையே, போன்னு சொல்லாம வான்னு கூப்புடக் கூடச் செய்யறீங்க?''

''அப்ப போன்னு சொன்னாப் போயிடுவியா?''

அப்படிக் கேட்டவனைக் கோபத்தைத் தனக்குள் மறைத்துக் கொண்டு பார்த்தாள் மாயா.

கேவலம் இந்த உதயாவிற்கு முன்பு தன்னை இப் படியெல்லாம் பேசுகிறானே என்று மாயாவின் நெஞ்ச கொதித்தது.

ஆனாலும் தன்னுடைய உணர்ச்சிகளெல்லாம் இவனிடம் நூறில் ஒரு பங்காகக் கூட எடுபடாதே என்று ஆற்றாமையுடன் நினைத்துக் கொண்டவளுடைய கோபமெல்லாம் இப்பொழுது உதயாவின் மீது திரும்பி யிருந்தது.

''என்ன விஜய், நான் எனக்கு வேண்டிய ஒருத்தங் களுக்கு வேலையொன்னு வேணும்னு உங்ககிட்ட கேட்டிருந்தேனே. என்னாச்சு?''

''அப்படியா, போன வருஷம் ஏதோ அப்படிக் கேட் டதா ஞாபகம் வருது. அப்ப அவங்களுக்கு இன்னுமா நீ வேல வாங்கிக் குடுக்கல?''

என்ன ஏளனம்!

''அவங்கெல்லாம் வேலைக்குப் போய்ட்டுதான் இருக்காங்க. அதே சமயம் நல்ல வேலைக்காக முயற்சி பண்ணிட்டும் இருக்காங்க.''

''ஓ, சரி. சொல்றேன்.''

''எப்ப?''

''அதாம்மா, நல்ல வேலை வரும்போது!''

''அதெங்க வரப் போகுது. அப்படியே வந்தாலும் அதுக்குதான் கண்டவங்கெல்லாம் கிளம்பி வந்துட்றாங் களே.''

மாயா குறிப்பிட்டுச் சொன்னது உதயாவையே.



அது மற்றவர்களுக்கும் புரியவே செய்தது.

மாயாவின் குணம் தெரிந்ததாலோ என்னவோ, உதயா விற்கு ஒன்றுமே தோன்றியிருக்கவில்லை.

ஆனால் விஜயமோகனுக்குத் தான் மிகுந்த கோபம் வந்து விட்டிருந்தது.

ஆனால் அதைத் தான் அப்பொழுது வெளிப்படுத் தினால் மாயா அதைக் கொச்சைப்படுத்திப் பேசுவ தோடு, தன்னால் இயன்ற மட்டும் அதற்குத் தவறான சாயங்கள் பூசி, அதை வெளியே பரப்பவும் செய்வாள் என்பதால் அப்போதைக்கு முயன்று தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டான்.

ஆனால் அதே சமயம் மாயாவோ இன்னும் ஒரு படி மேலேயே போய் விட்டிருந்தாள்.

''எதுக்கும் கொஞ்சம் தள்ளியே நிறுத்துங்க, இல்லன் னாக் காணாததக் கண்ட மாதிரி மேலயே வந்து விழுந் தாலும் விழுந்துடுவாங்க,'' என்ற மாயாவின் வார்த்தை களில் நிமிர்ந்தாள் உதயா.

என்ன வார்த்தை சொல்லி விட்டாள், இப்படியெல் லாம் கூட மற்றவர்களின் மனதைப் புண்படுத்த இவ ளால் எப்படி முடிகிறது...

அதுவும் விஜயமோகன் தன்னைப் பற்றி என்ன நினைப்பான்.

இனிமேல் நாம இயல்பாகவே நடந்து கொண்டாலும் கூட அவனுக்கு அப்படித்தான் தோன்றுமோ?

ஏற்கெனவே கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண் டிருந்த விஜயமோகனோ, ''போதும், கிளம்பு,'' என்று

அடிக்குரலில் அந்த வார்த்தைகளுக்கு அழுத்தம் கொடுத்[...]
சொன்னான்.

அதற்கு மேலும் வெகு தீவிரமாக எதையோ சொல்[...] தற்காக வாயைத் திறந்திருந்த மாயா அதற்குப் பிற[...] தான் விஜயமோகனின் சீறலையும், அவன் அப்ப[...] நடந்து கொண்டதும் தன்னிடம் தான் என்பதைய[...] புரிந்து கொண்டாள்.

இந்த அளவிற்குக் கடுமையாக நடந்து கொள்[...] மளவிற்கு அப்படி என்ன சொல்லி விட்டோமென்[...] நினைக்கத் தோன்றியது.

இதற்கு முன்னரும் வேலை நேரத்தில் தொந்த[...] செய்ய நேரும்போது விஜயமோகன் கோபப்பட்டி[...] கிறான் தான் என்றாலும், இந்த அளவிற்கு அது[...] இந்தப் பெண்ணிற்கு முன்னிலையில்...

இன்னும் முகத்திலடித்தாற்போலக்கூட எதையா[...] சொல்லி விடுவானோ என்று மனதிற்குள் ப[...] வந்துவிட, பேசாமல் அங்கிருந்து உடனே கிளம்பி வ[...] டிருந்தாள் மாயா.

ஆனால் அவள் சென்ற பிறகும் கூட விஜயமோ[...] னுக்குக் கோபம் தணிந்திருக்கவில்லை.

தனக்குக் கீழ் வேலை செய்யும் ஒரு பெண்ணை[...] பற்றி இப்படியெல்லாம் அதுவும் வேலை நேரத்[...] வந்து எப்படிப் பேசலாமென்று நினைத்தவன், [...] சலையும் கோபத்தையும் முயன்று கட்டுப்படுத்[...] கொண்டான்.

தனக்கு எதிரே இருந்தவளின் மனநிலையைப் [...] றியோ அவனால் நினைத்துக் கூடப் பா[...]



[...]முடியவில்லை, ஆனால் பார்ப்பதற்கு உதயா வெகு [...]மும்முரமாக வேலை செய்து கொண்டிருந்ததைப் [...]போலத்தான் தோன்றியது.

''ஸார்! இந்த மெஷினோட கெப்பாஸிட்டி, பவர் [...]கன்சம்ப்ஷன் டீடெய்ல்ஸ் சொல்ல முடியுமா?''

விஜயமோகன் சொல்லச் சொல்ல எழுதிக் கொண் [...]டாள் உதயா.

''மாயா பேசினதத் தப்பா எடுத்துக்க வேண்டாம். [...]த்தவங்களோட உணர்ச்சிகளைப் பத்தி அவ என்னைக் [...] யோசிக்கறது கிடையாது.''

''தெரியுது ஸார், எங்கிட்டயும் ஒரு ஹேபிட் பாருங்க. [...] நல்லதுன்னு சொல்ல வரல. எனக்குப் பிடிக்காத [...] என்ன டிஸ்டர்ப் பண்ற மாதிரியான எந்த எண் [...]ங்களுக்கும் நான் துளிக்கூட இடம் கொடுக்கறதில்ல. [...] இன்னும் எவ்வளவோ தூரம் முன்னேறிப் போக [...]டியிருக்கு. எனக்கு அதுதான் முக்கியம்.''

''கரெக்ட். அப்படித்தான் இருக்கணும்,'' என்றவனுக் [...] நாமும் ஒரு காலத்தில் எத்தனை எத்தனையோ [...]களையும் ஏளனப் பேச்சுகளையும் துச்சமென [...] ஒதுக்கிவிட்டுத் தானே இன்று இந்த நிலையை [...]த்திருக்கிறோமென்று நினைக்கத் தோன்றியது.

இப்பொழுது அப்படிப் பேசியவர்களெல்லாம் தானே [...] மனப்பான்மையுடன் செய்வதறியாது தள்ளி [...] பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும்.

[...]த்தட்ட தன்னைப் போலவே அதாவது முன் [...] துடிக்கும் உதயாவின் மீது தனக்கிருக்கும் மதிப்பு

அதிகமாவதை ஒருவித சந்தோஷத்துடன் உணர்ந்தான் விஜயமோகன்.

உதயா பெருமைக்காக அதைச் சொல்லவில்லை என்பது அவள் வெகு கவனத்துடன் வேலையைப் பார்த்துக் கொண்டிருப்பதிலிருந்து தெரிந்தது.

''அன்னைக்கு அதாவது ஃபர்ஸ்ட் டே கூட மாய ஏதோ சொல்லியிருப்பா போல?''

''சரிதான். இப்ப உளறின மாதிரியே, அன்னைக் முதன் முறையாப் பாத்ததுமே கொஞ்சமும் சம்பந் மில்லாம ஏதேதோ பேசினதுல எனக்கும் கோப வந்துடுச்சு.''

அன்றைக்கும் மாயா தன்னைச் சம்பந்தப்படுத்தி தான் பேசினாள் என்பதும் நினைவுக்கு வந்தது விஜ மோகனுக்கு.

''மாயா உங்களுக்குச் சொந்தமா? எப்படி...?''

''ஆமா. தூரத்து உறவு முறைல அத்த பொண்ண ணும். அதோட மாயாவோட ஃபேமிலிக்கும் உ சித்தியோட ஃபேமிலிக்கும் நல்ல பழக்கம்.''

சரிதான் இருந்துவிட்டுப் போகட்டும். அதற்காக இ மாதிரியெல்லாம் கூடவா பேசலாம் என்றிருக்கிறது

என்னதான் இதெல்லாம் எனக்கு அனாவசியமெ விஜயமோகனிடம் சொல்லி விட்டிருந்தாலும் தொட அவள் இப்படியே கீழ்த்தரமான எண்ணத்துடன் பே கொண்டிருந்தால் தன்னாலும் அதை இயல்பாக ஒத விட்டுப் போய்விட முடியுமென்று உதயாவிற் தோன்றவில்லை.



சற்று முயன்று மனதை வேலையில் திசை திருப்பி யிருந்த உதயா, அதற்குப் பிறகு மாயாவைப் பற்றி மறந்துகூடப் போயிருந்தாள்.

# 6

நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வையென பாரதி கண்ட புதுமைப் பெண்ணாகவும், எப்பொழுதும் தனது வேலையொன்றே குறியென்பதைப் போலக் கருமமே கண்ணாகவும் இருந்த உதயாவின் மேலிருக் கும் மதிப்பு தனக்கு நாளுக்கு நாள் அதிகமாவதை ஒருவித ஆவல் கலந்த திருப்தியுடன் உணர்ந்தான் விஜயமோகன்.

வாழ்க்கையில் எந்த அளவிற்கு அடிபட நேர்ந்திருந் தால், இந்த அளவிற்குப் பண்பட்டிருப்பாளென்றும்.

இப்பொழுதெல்லாம் உதயாவின் தோற்றத்தில் இருந்த வேறுபாடு தெரிகிறதோ என்றும் விஜயமோக னால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

அதாவது இருக்கும் அழகை எடுத்துக் காட்டத் தெரியாதவளைப் போல முன்பு இருந்தவள், இப் பொழுது மிகவும் அழகாகத் தன்னை அலங்கரித்துக் கொள்ள ஆரம்பித்திருக்கிறாளோ என்று.

அப்படியே என்றாலும் அது சற்றும் அலட்டிக் கொள் ளும் விதமாகவோ அல்லது அதிகப்படியாகவோ இருக்க வில்லை என்பதும்.

உதயா என்னதான் இயற்கையிலேயே அழகான பெண்ணே என்றாலும், லேசான ஒப்பனை அவளை இந்த அளவிற்குப் பேரழகியாக்கி இருக்கிறதே என்று தனக்குள் வியந்து போனான் விஜயமோகன்.

இடியே விழுந்தாலும் கூட கருமமே கண்ணாக இருக்கும் தன்னை இந்தச் சிறு பெண் அவளையறியாமலேயே அசைத்துப் பார்க்கிறாளோ என்றும்.

''ஸார்! நீங்க கேட்ட ஃபைல்.''

தனக்கு முன்பாக வந்து நின்றிருந்த உதயாவிடம், ''எங்க இருந்தது?'' என்று கேட்டான் விஜயமோகன்.

''ஸாரி ஸார், என் டேபிள்லதான்.''

''ஸாரி வேண்டாம். ஃபைலை மட்டும் குடு,'' என்று வாங்கிக் கொண்டவன், ''உக்காரு,'' என்று தனக்கெதிரே இருக்கும் இருக்கையைக் காட்டினான்.

''பரவாயில்ல ஸார்.''

''நான் சொல்லச் சொல்ல நீ எழுதணும், உக்காந்து கொஞ்சம் ஸ்பீடா எழுதலாம்,'' என்று அவன் சொல்லி முடிப்பதற்குள் அமர்ந்தே விட்டிருந்தாள் உதயா.

''என்ன, சொல்லு?''

''ஸார்! எனக்கு இன்னைக்கு ஈவ்னிங் ஒன் அவர் பர்மிஷன் வேணும்.''

''சரி, எடுத்துக்கோ.''

''வேலையில்லேன்னா வேணும்னா...''

''ம், என்ன?''

''போய்க்கறேன், இல்லன்னா வேண்டாம்.''



''ஏதோ முக்கியமான வேலை இருக்கப் போகத்தான கேக்கற,'' என்றவன், ''இல்ல, திருட்டுப் பழம் எதையாவது பறிக்கப் போகவா?'' என்று கேட்டான்.

சற்றும் சிரித்து விடாமல் விஜயமோகன் கேட்க, உதயாவால் தான் சிரிப்பைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

''அச்சச்சோ! ஒரு தடவ பட்டதே போதும் ஸார்,'' என்றாள்.

''நீ துணிச்சலான பொண்ணாச்சே! இந்த ஒண்ணுக்கே இப்படி பயந்து போயிட்றதா?''

''யார் ஸார் சொன்னது? ரொம்ப நாள் அந்தத் தோட்டத்து வழியா வீட்டுக்கு வராம ரெண்டு கிலோ மீட்டர் சுத்தி வந்தது எனக்குத்தான தெரியும்.''

''அட, ஏன்?''

''பயம் தான். அந்தத் தோட்டத்துக்காரர் ரொம்பவும் முசுடு. எப்பவுமே எல்லார் கூடவும் சண்ட போட்டுட்டே தான் இருப்பார். அதனால அவரு தோட்டத்துல மாங்காய் திருட்டுப் போறதும் சகஜம்...''

''ஓ, அதனால எங்க திரும்பவும் உன்னையே புடிச்சுக்கிட்டா என்ன பண்றதுன்னு... இல்லையா?''

''ம்,'' என்று சிரித்தவளைத் தானும் புன்னகையுடன் பார்த்தான் விஜயமோகன்.

''இந்தப் பயமெல்லாம் திருடறதுக்குப் போறதுக்கு முன்னாடியல்ல இருந்திருக்கணும்.''

''என்ன ஸார் பண்றது. சில விஷயங்கள பட்டா தான புத்தி வருது!'' என்று பாவனையுடன் சொன்னவளைப் பார்த்தான் விஜயமோகன்.

"என்ன ஸார்?"

"அது சரிதான்," என்றவனின் குரலில் வித்தியாசமா
ஏதோ இருந்ததோ என்று தோன்றியது உதயாவிற்கு.

அதற்குப் பிறகு விஜயமோகன் சொல்லச் சொல்
அதைக் குறிப்பெடுத்துக் கொள்வதில் கவனத்தை
செலுத்தத் தொடங்கி விட்டிருந்தாள் உதயா.

கடந்த மூன்று ஆண்டுகளில் கம்பெனி அடை
திருந்த அபரிமிதமான வளர்ச்சியை ஆச்சரியத்துட
கண்டாள்.

வெகு இயல்பாகச் சாதாரணமாகத் தன்னைக் காட்டி
கொள்ளும் விஜயமோகன் அதற்காக எந்த அளவிற்
உழைத்திருக்கிறான் என்பதையும்.

அதிலும் அந்த வாரத்தில் இரண்டு முறை உத
அவனுடன் ஃபேக்டரி முழுக்க ரவுண்ட்ஸ் செல்
நேர்ந்தது.

ஒவ்வொரு சிறிய விஷயத்திலும் அவன் எடுத்
கொள்ளும் அபரிமிதமான அக்கறை, அதே பே
ஊழியர்களின் மீது காட்டும் அன்பு பரிவு, கண்ண
படும் ஒரு சிறு குறையைக் கூடப் பரவாயில்ல
போனால் போகிறதென்று விட்டு விடாமல் கவனி
உடனே சரி செய்யும் விதம், என இன்னும் சொல்
கொண்டே போகலாம் போல. இப்படி எத்தனை
தனையோ. மற்றது எது எப்படியானாலும் நினை
மாதிரி வேலை சரியாக நடந்தே ஆக வேண்டும்
பதில் மட்டும் மிகவும் கடுமையாக நடந்து கொண்ட

அல்லது தனக்குத்தான் அப்படித் தோன்றுகிற
என்று நினைத்தாள் உதயா.



ஆனால் வேலை எவ்வளவு இருந்தாலும் அதை
ஈடுபாடுடன் செய்வதற்குத் தயாராக இருப்பவர்கள் ஏன்
சொல்லும் வேலையைச் செய்யாமல் போகப் போகி
றார்கள்.

எம்.டி.யின் பி.ஏ. என்பதாலோ அல்லது எப்பொழுதும்
எம்.டி.யுடனே கம்பெனி முழுக்க ரவுண்ட்ஸ் செய்வ
தாலோ ஆரம்ப கட்ட வேலைகள் முதல், சாதனங்களை
உற்பத்தி செய்து அவற்றை வெளியே அனுப்பத் தயா
ராக வைப்பது வரையிலான அனைத்து வேலை
நுணுக்கங்களையும் அந்தந்தக் கட்டத்தில் இருப்பவர்கள்
சொல்லித் தரத்தரப் பிரமாதமாகக் கற்றுக் கொண்டாள்
உதயா.

அதாவது வாழ்க்கையில் முன்னேறத் துடித்துக்
கொண்டிருக்கும் ஒரு பெண்ணாக மனதைத் திறந்து
வைத்துக் கொண்டு சென்றவளுக்கு மேலும் மேலும்
கற்றுத் தெளிய விஷயங்கள் நிறைய இருந்தன.

அன்றோடு உதயா வேலையில் சேர்ந்து ஒரு மாதம்
முடிந்திருந்தது.

அந்த ஒரு மாதத்திலேயே அவள் பிரமாதமாக
அனைத்து வேலைகளையும் கற்றுக் கொண்டிருந்த
விதம் விஜயமோகனையே வியப்பில் ஆழ்த்தியிருந்தது.

மிகவும் சரியாகச் சொல்ல வேண்டுமென்றால் உத
யாவை, அவளுடைய சித்தி வீட்டினருக்காகத்தான்
அதாவது சொல்கிறார்களே, போனால் போகிறது என்று
தான், அவன் தன்னுடைய கம்பெனிக்கு வேலைக்கே
எடுத்திருந்தான்.

அப்பொழுது தான் மட்டும் யோசித்திருந்தால் தனக்கு
இப்படியொரு திறமையான பி.ஏ. கிடைக்காமலே

போயிருப்பாளே என்று இப்பொழுது சில நாட்களாகத் தனக்குள் நினைத்துக் கொள்ளத் தொடங்கியிருந்தான்.

திறமை மட்டுமா? ஏனோ இப்பொழுதெல்லாம் அவளைப் பார்க்காத நாள் சரியாகச் செல்வதில்லையோ என்றெல்லாம் கூடத் தோன்றி அவனை ஒரு வழி செய்ய ஆரம்பித்திருந்தது.

கூடவே ஆறடி உயரத்துடன் கம்பீரமாக வெகு அலட்சியத்துடன் அனைவரையும் ஒருமுறை திரும்பிப் பார்க்க வைத்துவிடும் தன்னுடைய தோற்றம், உதயா விடம் ஏன் ஒரு சிறு சலனத்தைக் கூட ஏற்படுத்த வில்லையே என்றும்.

அன்று ஏனோ வழக்கத்தை விடவும் கூட சற்று நன் றாகவே தன்னை அலங்கரித்துக் கொண்டு வந்திருந்தாள் உதயா.

அதற்குக் காரணம் வேறு யாருமல்ல, அவளுடைய அறைத் தோழிதான்.

தன்னையும், தன்னையொத்த பெண்களையும் பார்த்துப் பொறாமைப்படும் பெண்களைத்தான் உதயா அன்றுவரை பார்த்து வந்திருக்கிறாள்.

ஆனால், அவளுடைய அறைத் தோழியான வாணியைச் சற்று வித்தியாசமாகக் கண்டாள். மேலும் அவளை உதயாவிற்குப் பிடித்தும் போனது.

அதற்காக உதயாவும் பெரிதாக எதையும் செய்து விட வில்லை.

தனது இயற்கையான குணத்திற்கு ஏற்றாற் போல இனிமையாகவும், கேட்கட்டும், பிறகு பார்க்கலாமென்று



இருந்து விடாமல், அவசியப்படும் சிறுசிறு உதவிகளை அவசியப்படும் நேரத்திற்குச் செய்து கொடுத்துக் கொண் டும், இயல்பாக நடந்து கொண்டாள். அவ்வளவே.

ஆனால் அவளுடைய அறைத் தோழியான வாணிக்கோ அதுவே பேருதவியாகப் பட்டது.

அதிலும் முன்பு தன்னுடன் அறையைப் பகிர்ந்து கொள்ள வந்த பெண்களைப் போல இரவெல்லாம் தூங்க விடாமல் கண்ட நேரத்தில் மொபைலில் பேசிக் கொண்டும், நாங்களும் தான் பணம் கொடுக்கிறோம், எங்களுடைய இஷ்டத்திற்குத் தான் நடந்து கொள்வோம், என்பதைப் போலெல்லாம் தொல்லை கொடுக்காமல், தான் இருக்கும் சுவடே தெரியாமல் அடக்கமாக நடந்து கொண்ட உதயாவை வாணிக்கு மிகவும் பிடித்துப் போனது.

அவளுடைய முழுப் பெயர் வாணிஸ்ரீ.

அவள் ஒரு பியூட்டிஷியன். அவளே சொந்தமாக ஒரு பியூட்டி பார்லரையும் வைத்து நடத்திக் கொண்டிருந் தாள்.

அந்த இனிமையான பெண் உதயா தனக்கு மட்டும் எத்தனை உதவிகளைச் செய்கிறாள். தானும் அவளுக்கு ஏதாவது செய்தே ஆக வேண்டுமென்று கிளம்பி விட்டிருந்தாள் வாணிஸ்ரீ.

அப்படி நினைத்தவளுக்கு முதலில் தென்பட்டது உதயாவின் அழகு.

இவள் மட்டும் தன்னை இன்னும் கொஞ்சம் மாற்றிக் கொண்டால், அதாவது அலங்கரித்துக் கொள்ள ஆரம்

பித்தால், அவளுடைய அழகிற்குப் பிறகு சொல்லவும் வேண்டுமா என்று தோன்றியது.

அதிலும் பெரிதாகக் கூட ஒன்றும் அவசியமில்லையே, சிறுசிறு திருத்தங்களே போதுமே, உதயா பேரழகியாகி விடுவாளே என்றும்.

ஏற்கெனவே தன்னுடைய தோற்றத்தைக் கொஞ்சம் கொஞ்சமென்ன, நிறையவே மாற்றிக் கொள்ள வேண்டுமே. அதற்கு என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து நின்று விட்டிருந்த உதயாவிற்கு, சரியான நேரத்தில் வாணியின் உதவி கிடைத்தது பேருதவியாக

முன்பு கிராமத்தில் இருந்தபோது எந்த ஒப்பனையுமே செய்து கொள்ளாமல், ஏன்... அதற்கே தன்னை அழகி யென்று எத்தனை பேர் சொல்லிக் கொண்டிருந்தார் களென்று நினைத்துப் பார்த்தாள்.

அதிலும் தனது தாயிடம் உங்களுடைய பெண்களின் அழகிற்கு, முக்கியமாக உதயாவின் அழகிற்குப் பார் பவர்கள் சும்மா பெண்ணைக் கொடுத்தாலே போது மென்று கட்டிக் கொண்டு போய் விடுவார்கள். அப்ப யிருக்கும்போது நீங்கள் ஏன் இவ்வளவு சிரமப்பட் எந்நேரமும் உழைத்துக் கொண்டே இருக்க வேண் மென்று கூடக் கேட்டதும்.

அவர்கள் மட்டும் இப்பொழுது தன்னைப் பார்த்தா என்று நினைத்த உதயாவிற்கு அவளையறியாமலேயே சிரிப்பு வந்து விட்டிருந்தது.

அட, உதயா! நீதானா என்று ஆச்சரியப்பட்டுக் கூட போவார்களென்று நினைத்துக் கொண்டவள், உடனே அப்படியே பார்த்தாலும் தானும் ஒன்றும் பெரித



எதையும் செய்து கொண்டு விடவில்லையே என்றும் தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள்.

எப்படியோ முன்பு சென்னைக்கு வந்த புதிதில் இருந்த தோடு ஒப்பிடும்போது இப்பொழுது சற்று மாறியிருக் கிறோம், அவ்வளவே என்றும்.

ஆனால் அந்த மாற்றம் மனதிற்குள் ஒருவிதப் பயத்தை ஏற்படுத்தியிருந்ததையும் உதயாவால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

ஒருவேளை நாம் போகும் பாதை தவறோ என்றும்.

இல்லை, நிச்சயமாக இல்லை.

அப்படியென்றால் தன்னுடைய மாற்றத்தைப் பார்த்து விட்டுச் சித்தி ஏன் அந்த அளவிற்குப் பாராட்ட வேண் டும்.

குட்... இனிமேல் நீ எப்பவுமே இப்படித்தான் இருக் கணும் என்று தொடர்ந்து ஊக்கப்படுத்த வேறு செய் தாரே.

"என்ன உதயா, இப்படித் திகைச்சு நின்னுட்ட?"

தான் நினைத்ததை அப்படியே வாணியிடம் சொல்லி விட்டிருந்தாள் உதயா.

அந்த வாணிஸ்ரீ உதயாவைவிட மூன்று வயது பெரி யவள்.

அதனால் உதயா அவளை அக்கா என்றுதான் அழைப்பது.

"அடே, இப்படிக்கூட யாராவது பயப்படுவார்களா? நீ ரொம்ப ஸாஃப்ட் உதயா. வெகுளியும் கூட. உன் னோட குணத்துக்கும் அழகுக்கும் நான் மட்டும்

பையனா இருந்திருந்தா நிச்சயம் உன்ன விரும்பிக் கூட
இருப்பேன்.''

''போங்க வாணிக்கா.''

''அடடா, வெட்கப்படும்போது இன்னும் கூட அழகாத்
தெரியறயே. ஆமா, உங்கூட வேலை செய்யறவங்க... ஒ
நீதான் அந்தக் கம்பெனியோட எம்.டி.க்கு பி.ஏ.வாச்சே
ஆமா, அவரு எப்படி உன்னோட மாற்றத்தப் பாத்து
அப்படியே திகைச்சுப் போய் நின்னுட்டாரா?''

''அதெல்லாம் எதுவுமில்ல,'' என்று பட்டென்று
சொல்லி விட்டிருந்த உதயாவிடம், ''நான் கேட்டது
தப்புன்னா ஸாரிமா!'' என்றாள் வாணிஸ்ரீ.

''அச்சச்சோ! என்ன வாணிக்கா நீங்க?'' என்றவள், ''அப்
புறம் நீங்க என்ன இன்னைக்கு ஜாலி மூட்ல இருப்பீங்க
போலிருக்கு?'' என்று கேட்டாள்.

''ஒருவிதத்துல பாத்தா அப்படித்தான் உதயா. சரி,
உனக்கு டயூட்டிக்கு லேட்டாச்சே. நீ கிளம்பலையா?''
என்று அத்துடன் பேச்சை முடித்துக் கொண்டு விட்
டிருந்த வாணிஸ்ரீயிடம், ''ஆமாம். லேட்டாச்சு. நான்
கிளம்பறேன்கா,'' என்று ஹேன்ட் பேக்கைக் கையில்
எடுத்திருந்தாள் உதயா.

கம்பெனிக்குச் சென்று சேரும்வரை உனது இந்த
மாற்றத்தை உன்னுடைய எம்.டி. கண்டு கொள்ளவில்
லையா என்று வாணிக்கா கேட்டதுதான் அவளுடைய
காதுகளில் மீண்டும் மீண்டும் ஒலித்துக் கொண்டே
இருந்தது.



# 7

கம்பெனிக்குள் வந்திருந்த உதயா, எம்.டி. தன்
னுடைய இருக்கையில் இல்லாததைக் கண்டாள்.

நேரே தன்னுடைய இடத்திற்குச் சென்று அவள்
ஹேன்ட் பேக்கை வைக்கவும் இன்டர்காம் ஒலிக்கவும்
சரியாக இருந்தது.

எடுத்துக் காதில் வைத்தவள், ''குட்மார்னிங் ஸார்,''
என்றாள்.

எதிர்முனையில் விஜயமோகன் சொன்னதைக் கேட்டுக்
கொண்டவள், ''சரி ஸார். நீங்க வர்றதுக்குள்ள உங்க
டேபிள் மேல தயாரா எடுத்து வைக்கறேன்,'' என்று ரிசீ
வரை வைத்திருந்தாள்.

அன்று ஏனோ வழக்கத்திற்கு மாறாக விஜயமோக
னின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்தாள் உதயா.

வாணிக்கா கேட்டது தான் மீண்டும் அப்பொழுது
நினைவிற்கு வந்தது.

அது எப்படி அவனுடைய கூர்மையான பார்வையில்
விழாமலும் கூட ஏதாவது தப்பிவிட முடியுமா?

அப்படியானால்...

''அடடா! அந்த ஃபைல் மட்டும் நானா இருந்தா எவ்
வளவு நல்லாக்கும்!'' என்ற குரலில் துள்ளி விழுந்து
திரும்பினாள் உதயா.

மார்பிற்குக் குறுக்கே கைகளைக் கட்டியவாறு நின்று கொண்டிருந்தவனைச் சற்றே அசடு வழியப் பார்த்த உதயா, ''வாங்க ஸார்,'' என்றாள்.

''அதெல்லாம் வந்தே ரொம்ப நேரமாச்சு,'' என்ற விஜயமோகனின் இயல்பான குரலில் தான் முழுமையாக நடப்புக்கு வந்தாள் உதயா.

அவன் சுற்றிக் கொண்டு வந்து தனது இருக்கையில் அமர, ''ஸார்! நீங்க கேட்ட ஃபைல்,'' என்று தனது கையி விருந்ததை அவனுக்கு முன்பாக வைத்தாள்.

ஆனால் அதைக் கண்டு கொள்ளாமல் தன்னைப் பார்த்தவனை உள்ளம் படபடக்கப் பார்த்தாள்.

''அப்புறம் என்ன விசேஷம்?''

என்ன திடீரென்று இப்படிக் கேட்கிறான் என்று நினைத்தவள், ''ஸார்...'' என்றாள்.

''இல்ல, ரொம்ப நல்லாக் கிளம்பி வந்திருக்கியே, அத னால கேட்டேன்,'' என்றான்.

அப்படியானால் இன்று தான் முதன் முறையாகத் தனது மாற்றத்தைக் கவனிக்கிறானோ?

ஆனாலும் சற்று முன்னர் உள்ளே வந்ததும் ஏதோ சொன்னானே.

ஏதோ ஃபைலாக அவனை...

ஃபைலைத் தனது மார்போடு அணைத்து வைத்துக் கொண்டு அப்படியே யோசித்தபடி தான் நின்று வி டிருந்ததற்காகத் தான் அப்படிச் சொன்னானோ?

அந்த வினாடியே முகம் குப்பென்று சூடாகிச் சிவந்த விட, அதை வெளியே தெரிந்து விடாமல் மறைப்ப



தற்குள் போதும் போதுமென்றாகி விட்டிருந்தது உதயா விற்கு.

ஓரளவு மறைத்திருந்தாள் என்றாலும், முழுமையாக முடிந்திருக்கவில்லை.

அந்த நிலையில் உதயாவைக் கண்ட விஜயமோக னாலும் என்ன முயன்றும் தனது பார்வையை அவளிட மிருந்து விலக்கிக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

ஆனால் உதயா நிமிர்ந்து தன்னைப் பார்ப்பதற்குள் சகஜ நிலைக்கு வந்திருந்தான்.

''உக்காரு.''

''பரவாயில்ல ஸார்.''

''இன்னைக்கு ஈவினிங் நான் கிளம்பும்போது உன்ன என்கூடக் கூட்டிட்டு வரச் சொன்னாங்க, உன் சித்தி.''

அப்படிச் சொன்னவனை எதற்காக இருக்குமென்று யோசித்துக் கொண்டே பார்த்தாள் உதயா.

''உங்க சித்தப்பா புதுசா வீடு கட்டிட்டிருக்காரே, அதுக் கான கிரஹப் பிரவேசத்துக்கு உனக்கு டிரஸ் எடுக்கப் போகணும்னு ஏதோ சொன்ன மாதிரி இருந்தது.''

ஓ, ஏற்கெனவே சித்தியும் சொல்லிக் கொண்டிருந் தார்களே என்று அதற்குப் பிறகுதான் நினைவிற்கு வந்தது உதயாவிற்கு.

ஏன், அதற்குத் தனக்கே மொபைலில் அழைத்துச் சொல்லியிருந்தால் ஆகாதாமா?

''என்ன யோசனை? வேற ஏதாவது முக்கியமான வேலையிருக்கா?''

''இல்ல, நானே வேணும்னா பஸ்ல போய்க்கறேனே. உங்களுக்கு எதுக்கு வீண் சிரமம்?''

''எனக்கா? என் காருக்குன்னு சொல்லு. அதுகூட சிரம மில்ல. உன்ன மாதிரி இன்னும் பத்துப் பேரக்கூட என்னோட கார் தாங்கும்.''

அதற்குப் பிறகு மாலை வரை வேறு எதைப் பற்றி யுமே யோசிக்கக் கூட முடியாத அளவிற்கு இருவருக்கும் வேலையே சரியாக இருந்தது.

''என்ன, கிளம்பலாமா?'' என்று விஜயமோகன் கேட்டதற்குப் பிறகுதான் நேரம் ஐந்தரைக்கு மேல் ஆகி விட்டிருந்ததையே உணர்ந்தாள்.

''நான் வேணும்னா நாளை...''

''இன்னைக்கு எல்லாருக்கும் டிரஸ் பர்ச்சேஸ் பண் வேலைய முடிச்சாகணும்னு பேசிட்டிருந்தாங்க. மத்தப உன்னிஷ்டம்.''

''சரி ஸார், கிளம்பலாம்.''

சில வினாடிகளில் ஹேண்ட் பேக்குடன் வந் நின்றிருந்தாள் உதயா.

ஏனோ விஜயமோகனுடன் தான் காரில் செல்ல வேண் மென்ற எண்ணமே உதயாவை ஒரு வழி செய் ஆரம்பித்திருந்தது.

சில நிமிடங்களில் இருவரும் காரை அடைந்திரு டிரைவர் ஸீட்டில் தான் ஏறி அமர்ந்து கொண்டு தனக் பக்கவாட்டில் இருந்த முன் பக்கக் கார் கதவை உத விற்காகத் திறந்து விட்டான்.



நான் வேண்டுமானால் பின்னால் அமர்ந்து கொள் ளட்டுமா என்று கேட்க நினைத்தவள், பிறகு வேண்டா மென்று, பேசாமல் ஏறி அமர்ந்து கொண்டாள்.

விஜயமோகனின் அருகாமையும், ஸ்டியரிங்கைப் பிடித்திருந்த அவனுடைய வலிய கரங்களும் தன்னை என்னவோ செய்ய, வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டு வருவதைப் போலத் திரும்பிக் கொண்டாள்.

உதயாவின் முயற்சி விஜயமோகனுக்கும் புரியவே செய்தது.

''வேணும்னா கார நிறுத்தறேன், இறங்கிக் கூட கொஞ்சம் நேரம் நின்னு பாக்கறியா?''

அப்படிக் கேட்டவனைச் சட்டென்று திரும்பிப் பார்த்த உதயாவிற்கு, அதற்குப் பிறகுதான் கேலியாகக் கேட்டிருக்கிறான் என்பது புரிந்தது.

''ஃப்ரீயா உக்காந்துட்டு வா,'' என்றவனின் வார்த்தை களில் இதற்குப் பிறகும் நாம் வெகு மும்முரமாக வெளியே பார்த்துக்கொண்டு வந்தால் நன்றாக இருக்காதென்று இயல்பாக அமர்ந்து கொண்டு வந்தாள்.

அதாவது முயன்று தன்னை அப்படிக் காட்டிக் கொண் டாள்.

''அப்புறம் ஊருக்கு எல்லாம் போகலையா?''

''இல்ல ஸார்.''

''ஃப்ரீயூட்டி டைம்ல வேணும்னா ஸார் மோரெல்லாம் வச்சுக்கோ. மத்த டைம்ல வேண்டாமே.''

''அப்புறம் நான் எப்படிக் கூப்புட்றதாம்?'' என்று கேட்டவள், அதற்குப் பிறகுதான் தான் அவசரப்பட்டுக் கேட்டு விட்டதையே உணர்ந்தாள்.

''பேர் சொல்லித்தான்.''

அது எப்படி முடியுமாம்...

''என்ன பாக்கற?''

''ஒண்ணுமில்ல ஸார்,'' என்று விட்டிருந்தவ
அடுத்த வினாடியே, ''ஓ.கே. ஓ.கே. ஸார் வாபஸ்,''
என்றாள்.

''அப்புறம் என்ன பேசிட்டிருந்தோம்... ம், ஏன் ஊரு
குப் போகல?''

''சித்தி வீட்டு கிரஹப் பிரவேசத்துக்கு அம்மாவு
தங்கையும் இங்க வர்றாங்க. அதான்.''

''ஓ. ஹாஸ்ட்டல்ல சவுகர்யமெல்லாம் எப்ப
யிருக்கு?''

''ரொம்ப நல்லார்க்கு ஸா...'' என்று சொல்ல வ
தவள், உடனே மேலே பேச முடியாது பேச்சை நிறுத்தி
கொண்டு விட்டிருந்தாள்.

''நினைச்சேன்.''

அப்படிச் சொன்னவனைப் புரியாமல் பார்த்த
உதயா.

''அதான் ரொம்ப சேஞ்ச் ஆயிட்டயே, அதன
சொன்னேன்.''

.............

''எங்க ஸார் இந்த வழியா...'' என்று ஆரம்பித்தி
தவள், விஜயமோகனின் பார்வையில், ''எங்க வி
இந்த வழியா?'' என்று கேட்டாள்.

''குட்,'' என்று புன்னகை செய்தவன், ''உன்னக் க
திட்டுப் போறேன்,'' என்றான்.



''சரிதான். போலாம்.''

''அட, முரண்டு பிடிச்சு கத்தி அழ வேண்டாமா? போ
...னக்குக் கடத்திட்டுப் போற இன்ட்ரஸ்ட்டே போயி
டுச்சு.''

இப்பொழுது நன்றாகவே சிரித்த உதயா, ''உங்க கூட
தான் சந்தோஷமாவே வருவேனே,'' என்றாள்.

''அப்படியா! சரிதான். அப்ப நினைச்ச காரியம் சுலபமா
முடியும்.''

''அப்படி என்ன நினைச்சீங்க?''

''வேறென்ன, உன்ன மாதிரி அழகான வயசுப்
பொண்ண எதுக்குக் கடத்திட்டுப் போவாங்களாம்? யாரு
மில்லாத ஒரு தனிமையான இடத்துக்குக் கூட்டிட்டுப்
போய் உன்னக் க...''

''பல்ல உடைப்பேன்,'' என்றவள், ''அப்படியெல்லாம்
கடத்துக்கிட்டிங்கன்னாதான். பயப்படாதீங்க,'' என்று
சிரித்துக்கொண்டே சொன்னாள்.

''அடடா! அப்ப ரொம்ப இன்ட்ரஸ்ட்டிங்கா இருக்கும்
போலிருக்கே,'' என்றவனாலும், இப்பொழுது புன்ன
கையைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

''என்னது உங்க பல் உடைஞ்சு போறதா?''

''நீ பல்ல உடைக்கற வரைக்கும் நான் என்ன
பார்த்துட்டு, ஐ மீன் உனக்குப் பல்லக் காட்டிட்டுப் பேசாம
உக்கார்ந்துட்டிருப்பேன்னு நினைச்சியா?''

''யாருக்குத் தெரியும்? அந்த மாதிரி ஒரு நிலைமை
வரும்போது தான் சொல்ல முடியும்...'' என்று ஏதேதோ
சொல்லிச் சமாளித்தவளிடம், ''சரி, இந்தா சாப்பாடு,''

என்று சூடான ஒரு டிஃபன் ப்ளேட்டைக் கையில் கொடுத்திருந்தான் விஜயமோகன.

அதற்குப் பிறகுதான் ஒரு ட்ரைவ் இன்னில் கார் நின்று வெகுநேரம் ஆகி விட்டிருந்ததையே உணர்ந்தாள் உதயா.

விளையாட்டாகத்தான் என்றாலும், என்னவெல்லாம் பேசி விட்டோமென்று அவள் லேசாகத் தயங்க, "ஐயோ! அடிச்சுடாதீங்க மேடம்! நானில்ல," என்று பயந்தவன் போலச் சொன்னான் விஜயமோகன்.

அவனுடைய பாவனையில், "அது உங்க கைலதான் இருக்கு," என்று சிரித்தாள் உதயா.

அதற்குப் பிறகு அவர்களுக்கிடையே இருந்த ஏதோ ஒரு தடை அகன்று விட்டாற் போல இருவருமே சற்று மனம் விட்டுப் பேசிக் கொள்ள ஆரம்பித்திருந்தனர்.

# 8

கடந்த ஒரு மாதமாகவே தனது மொபைலுக்கு ஏதேதோ புது எண்களிலிருந்து அழைப்பு வந்து கொண்டே இருக்க, எரிச்சலுடன் பெரும்பாலான நேரங்களில் மொபைலை ஸ்விட்ச் ஆஃப் செய்து வைக்கத் தொடங்கி விட்டிருந்தாள் உதயா.

முக்கியமாக வேலை நேரங்களில் அப்படி வரும் அழைப்புகளை உதயா நிறைய முறை அட்டெண்ட் செய்து பேசியும் இருக்கிறாள்.



ஒன்று, எதிர்முனையிலிருந்து பேச்சே வராது. அதற்கு மேல் வந்தாலும், உருப்படியாக எதுவும் இருக்காது.

அதற்குப் பிறகு தான் அது பேச வேண்டுமென்ற நோக்கத்துடன் வரும் அழைப்புகளே அல்ல என்பதைப் புரிந்து கொண்டாள்.

யாரோ வேண்டுமென்றே விளையாடுகிறார்கள் என்பது மட்டும் புரிந்தது.

ஆனால் அதற்கும் ஒரு வரைமுறை இருக்கிறதல்லவா? இரண்டு மூன்று நாட்களுக்கு ஒருமுறை என் றிருந்தது போய் இப்பொழுது தினமும் அந்த மாதிரியான அழைப்புகள் வந்து கொண்டே இருந்ததில் கோபத்தின் எல்லைக்கே சென்றிருந்தாள் உதயா.

இன்னும் அந்த ராஸ்கலுக்குப் பயந்து கொண்டு ஆஃப் செய்து வேறு வைக்காமல் இருந்தாள்.

இனியொரு முறை வரட்டும், பார்த்துக் கொள்கிறே னென்று மனதிற்குள் கோபத்துடன் நினைத்துக் கொண் டாள்.

ஆனாலும் வேலை நேரத்தில் வேண்டாமென்று மொபைலை ஆஃப் செய்து கைப்பையில் போட்டுக் கொண்டு கிளம்பினாள்.

தனது இடத்திற்குச் சென்று கைப்பையை வைத்து விட்டு வந்தவளுக்கு, எம்.டி. ரவுண்ட்ஸ் கிளம்பி விட் டிருந்தது தெரிந்தது.

அன்றைக்குத் தான் முதலில் செய்து முடிக்க வேண் டிய வேலைகளில் மும்முரமாக இருந்தவள், குட்மார்னிங் மேடம் என்ற குரலில் திரும்பினாள்.

"குட் மார்னிங் ஸார்."

தன்னிடத்தில் வந்து அமர்ந்த விஜயமோகன், "ஏன்
சிரிக்கற?" என்று கேட்டான்.

"ஒண்ணுமில்ல."

"அப்ப நிச்சயம் என்னவோ இருக்கு.'

"உங்களுக்கு போன் வந்தது."

"அது தினமும் வர்றதுதான, குடு. யார் யார் கூப்
புட்டா?"

"இது பர்ஸனல் போன்."

"புரியற மாதிரி சொல்லு," என்ற விஜயமோகனிடம்
"மாயா கூப்புட்டிருந்தாங்க," என்றாள்.

"என்னவாம்?"

எரிச்சலுடன் கேட்டவனைப் பார்த்த உதயாவால்
ஏனோ அவனிடம் மாயா சொன்னதை அப்படியே
சொல்ல முடிந்திருக்கவில்லை.

"ம், சொல்லு."

"கூடிய சீக்கிரம் உங்களுக்கும் மாயாவுக்கும் மேரே
ஃபிக்ஸ் ஆகப் போகுதாம். அதனால... அதனால முடி
அளவுக்கு, இல்லில்ல... ஒரேயடியாவே என்ன இங்கிரு
கிளம்பச் சொல்லிட்டா. வேற வேல வேணும்னா அ
வாங்கித் தர்றாளாம். இல்லன்னா நடக்கறதே வேற
கோபமா இன்னும் ஏதேதோ பேசிட்டு போன வெ
சுட்டா."

அவள் இன்னும் அந்த எண்ணத்தை மாற்றிக் கொள்
தாகவே இல்லையாமா?



"என்ன ஸார்?"

"அவ விட்டா இன்னும் என்ன வேணும்னாலும் சொல்
லுவா. முதல்ல வேல நேரத்துல... அதுவும் உனக்குக்
கூப்புட்டிருக்கா..."

நிச்சயம் இதை அவள் நாகரிகமான வார்த்தைகளைப்
பயன்படுத்திச் சொல்லியிருக்கவே மாட்டாள் என்பதை
விஜயமோகனாலும் யூகிக்க முடிந்தது.

இன்னும் உதயாவை என்ன மாதிரியெல்லாம் பேசி
னாளோ?

முதலில் இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தே ஆக
வேண்டும்.

"நீங்க முதல்ல மாதிரி இல்லையாம். இப்பவெல்லாம்
உங்ககிட்ட பேசறதுக்கே ரொம்ப பயமா இருக்காம்.
இனியொரு முறை என்னப் பேச வைக்க வேண்டாம்னு
கேட்டுக்கிட்டா."

"வேலையப் பாக்கலாமா?"

விஜயமோகனின் கடுமையான வார்த்தைகளில்
செய்வதறியாது அவனைப் பார்த்தாள் உதயா.

"இத இப்ப நான் உங்ககிட்ட சொல்லாமக் கூட விட்
டிருக்கலாம். ஆனா மாயா இப்படி என்னக் கூப்புட்டுப்
பேசறது இது நாலாவது முறை."

என்ன திமிர்! இனி அவளுடைய பெற்றவர்களிடம்
தான் பேசியாக வேண்டும். பிறகு தனது தாயிடம்.
அவளை மணந்து கொள்வதைவிட வாழ்க்கை முழுக்கத்
திருமணம் செய்து கொள்ளாமலே இருந்து விடலாமே.

"நான் வேணும்னா வேற வேலய..."

"மூட்டப்பூச்சிக்குப் பயந்துட்டு வீட்ட எரிச்ச கதையா இல்ல பேசிட்டிருக்க. ஒரு வருஷத்துக்கு முன்னாடி மாயாவோட பேரண்ட்சும் எங்க அம்மாவும் பேச்சுவாக் குல பேசியிருக்காங்க.

"முதல்ல தங்கச்சி கல்யாணம் முடியட்டும்னு நான் அப்ப அந்தப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வெச்சிருந்தேன். எது எப்படியோ உலகத்துல வேற பொண்ணுங்களே இல்லேன்னாக்கூட நான் மாயாவக் கல்யாணம் பண் ணிக்கறது கஷ்டம். ஏன், முடியாது அவ்வளவுதான்."

அதைத் தன்னிடம் சொல்கிறானா அல்லது தனக்குத் தானே சொல்லிக் கொள்கிறானா?

"சரி. நான் சொல்ற வேலைகளை நோட் பண்ணிக்கோ," என்ற விஜயமோகனைப் பார்த்தவள், "அப்ப இன்னொரு முறை மாயாகிட்..."

"நாம வேணும்னா ஒண்ணு பண்ணலாமா?" என்ற வனை, அவள் பேசாமல் பார்க்க, "நாம ரெண்டு பேரு ஒருத்தருக்கொருத்தர் விரும்பறதா சொல்லிட்றேன் எல்லாமே சரியாயி..."

உதயாவிற்கு எங்கிருந்து அவ்வளவு கோபம் வந்த தென்றே தெரியவில்லை.

"என்ன மிஸ்டர், எல்லாரும் ஒண்ணு சேர்ந்துட்டு விளை யாட்றீங்களா? இல்ல, நீங்கதான் அவகிட்ட சொல்லி குடுத்து இப்படியெல்லாம் போன் பண்ணச் சொன்னீ களா?

"இதெல்லாம் எவ்வளவு புனிதமான விஷயங்க தெரியுமா? இதுல எல்லாம் கூட இப்படி விளையாட அ வும் உங்களால எப்படி முடியுது? முதல்ல அந்த மாதி



த்தரமான பொண்ணு நான் கிடையாதுங்கறதை நீங்க தெரிஞ்சுக்கோங்க..."

"கூல் டவுன் மேடம், கூல் டவுன். அதெல்லாம் எனக்குப் பிடிக்காது. விருப்பமில்லன்னு சிரிச்சுக்கிட்டே டிச்சுட வேண்டியதுதான. இப்ப எதுக்கு இவ்வளவு டென்ஷ...."

"ம் கேக்க மாட்டிங்க? எல்லாப் பொண்ணுங்களையும் ரே மாதிரி நினைச்சுட்..."

"மாயாவக் கழிச்சுட்டா, அதுக்கப்புறம் நான் இவ்வளவு ம் தினமும் பாத்துப்பேசற பொண்ணு நீ ஒருத்திதான். ரி. அதவிடு. இனி வேலையப் பாக்கலாம்."

"தாராளமாப் பாக்கலாம் ஸார். ஆனா இன்னொரு றை மாயாகிட்டிருந்து எனக்கு போன் வரக் கூடாது. துக்கு நீங்க..."

"நான் கியாரண்டி. போதுமா?"

சரி என்பதைப் போலத் தலையை ஆட்டிய உதயா, சில வினாடிகளிலேயே இயல்பு நிலைக்கும் திரும்பி விட்டிருந்தாள்.

"அப்பாடா! ஒருவழியா மேடம் எப்படியோ பெரிய பண்ணிட்டிங்க," என்ற விஜயமோகனும் அதற்குப் வேலைகளைக் கொடுத்துக் கொண்டே இருக்க, ஆசுவாசமாக நின்று மூச்சு வாங்கக்கூட உதயா முடியாது போய் விட்டிருந்தது.

அதைத்தான், அதாவது அந்த மாதிரி ஒரு நிலையைத் அவள் எப்பொழுதும் விரும்புகிறவளும் கூட என்பதால் காலையில் நடந்தவற்றையெல்லாம் விடு

திக்குச் சென்று சேரும்வரை மறந்தும்கூடப் போயிரு
தாள்.

ஆம், விடுதிக்குச் செல்லும்வரை மட்டும்தான்.

அன்று விடுதியில் அவள் மட்டும் தனியாகத்தா
இருந்தாள். வாணிஸ்ரீ வீட்டில் ஏதோ விசேஷமென்
கிளம்பிச் சென்று மூன்று நாட்கள் ஆகி விட்டிருந்தன

செய்ய வேலையென்று ஒன்றுமில்லாமல் அமர்ந்
விட்டிருந்தவளுக்கு, அன்று காலையிலிருந்து நடந்த
தான் ஒவ்வொன்றாக நினைவிற்கு வந்தது.

மாயா பேசியதையெல்லாம் நினைத்துப் பார்த்
வளுக்கு, என்ன பெண் அவள், இப்படியெல்லாம் கூ
உலகத்தில் மனிதர்கள் இருப்பார்களா என்று காலையி
வந்தது போலவே அப்பொழுதும் கோபம்தான் வந்த

மாயா பேசியதாக விஜயமோகனிடம் அவள் சொன்
தெல்லாம் பத்தில் ஒரு பங்கு மட்டும்தான்.

அப்பப்பா. என்னென்ன வார்த்தைகள், எவ்வள
கீழ்த்தரமான எண்ணம் அவளுக்குத் தன்னைப் பற்றி

சில வினாடிகள்தான், உடனே அவளையெல்ல
கூட ஒரு பொருட்டாகத் தான் மதிப்பதா என்றிருந்த

அதோடு தன்னை விரட்டியடிப்பது ஒன்று மட்டு
குறியாக அவள் தன்னிடம் நடந்து கொள்வதை
உதயாவால் புரிந்து கொள்ள முடிந்தது.

ஆனால் இனிமேல் அதைப் பற்றி யெல்லாம் ந
யோசிக்கத் தேவையே இருக்காது. அதுதான் விஜயமோ
னிடமே சொல்லி விட்டோமே என்று நிம்மதியுட
நினைத்துக் கொண்டாள்.



ஆனால் அதற்கு அவன் தன்னிடம் கேட்டது,

ஒருவேளை தன்னை உளவு பார்க்கத்தான் திடீரென்று அப்படிக் கேட்டானோ?

அவனுடைய முகத்திலும், கண்களிலும் அப்பொழுது தெரிந்த அந்தப் புன்னகை அப்படித்தான் என்று சொல் வதைப் போலத்தானே இருந்தது.

இன்னும் எதையெதையோ எண்ணிப் பார்த்த வளுக்கு, நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது.

அப்படியானால்...

இல்லையில்லை. விஜயமோகன் சும்மா விளையாட் டிற்குத்தான் அப்படிக் கேட்டிருப்பான். அன்றைக்குக் கூட காரில் அவனுடன் சித்தி வீட்டிற்குப் போகும்போது அவன் இதே போலத்தானே ஏதேதோ சொன்னான்.

ஆம், அப்படித்தான் இருக்க வேண்டும்.

அதிலும் அவனுக்கும், நமக்கும் ஏணி வைத்தாலும் கூட எட்டுமா? அவனுடைய ஸ்டேட்டஸ் என்ன! அடுத்த வேளை உணவிற்கே வேலை செய்தாக வேண்டிய தன்னுடைய நிலை என்ன!

முட்டாள்தனமான கற்பனைகளை வளர்த்துக் கொண்டு, இருப்பதையும் கெடுத்துக் கொள்ளாமல் இருக்க முதலில் முயற்சி செய்ய வேண்டும்.

ஆனால் அதற்கு விஜயமோகன் விடுவானா? தனது எண்ணம் போகும் போக்கை நினைத்துத் தனக்குத்தானே சிரித்துக் கொண்டாள் உதயா.

தன்னிடம் மட்டுமா அவன் நகைச்சுவையாகப் பேசு கிறான், அவனுடைய சுபாவமே அல்லவா அப்படி இருக்கிறது.

தொடர்ந்து நடந்ததையெல்லாம் யோசித்துக் கொண்டே சென்றவளுக்கு, நிச்சயம் தான் மாறித்தான் ஆ... வேண்டுமென்று தோன்றத் தொடங்கி விட்டிருந்தது.

# 9

''வா உதயா.''

''வரலாம் சித்தி, அப்புறம் எல்லாரும் எங்க?''

''அக்காவையும், வித்யாவையும் ரிஸீவ் பண்றதுக்கா... அர்விந்தும், அபிஷேக்கும் கார எடுத்துட்டு ரயில்வே ஸ்டேஷன் போயிருக்காங்க.''

''அட, கொஞ்சம் முன்னாடி வந்திருந்தா நானும் கூட... போயிருக்கலாம் போலிருக்கே.''

''அது சரிதான் உதயா, அப்புறம் திரும்பவும் உ... னோட டியூட்டி டைம் கணக்குப் போட்டுப் பாத்துட்டு லேட்டாயிடும்னு கிளம்பிட்டாங்க. சரி, வாடாம்மா. வந்... சாப்பிட ஏதாவது எடுத்துக்கோ.''

''எடுத்துக்கலாம் சித்தி. அப்புறம் நாளைக்கு மறுநா... கிரஹப் பிரவேசமாச்சே. அதுக்கு வேலைகள் நிறை... இருக்குமே. சொன்னீங்கன்னா செய்யலாம்.''

''அதெல்லாம் பெரிசா ஒண்ணுமில்லமா, ஃபுட்க்... கேட்டரிங் டிபார்ட்மெண்ட்டுக்குச் சொல்லியாச்... நாளைக்கு ஒரு நாள் முன்னாடியே வர்றவங்களுக்கு...



தான் எல்லாத்தையும் பாத்துச் செய்யணும். அவ்வளவு தான். அதுக்குக் கூட அக்கா வர்றாங்களே. அப்புறம் நீ, வித்யா.''

''அது சரிதான் சித்தி,'' என்றவளுக்கும் தாயையும், தங்கையையும் எப்போது பார்ப்போமென்று ஆவலாக இருந்தது.

அதே நேரம் வீட்டிற்குள் வந்தவர்களைத் தனது சித்தியோடு சேர்ந்து தானும் வரவேற்றாள் உதயா.

சித்தியிடம் இரண்டு வார்த்தைகள் பேசியிருந்த வித்யா, உடனே, ''வாவ் அக்கா!'' என்று தன்னை நோக்கித் திரும்பியிருக்க, ''அட வித்யா என்ன இப்படி ஊதிட்ட?'' என்று கேட்டாள் உதயா.

''ஆனா நீ ரொம்ப க்யூட் ஆயிட்டயேக்கா.''

''அப்படியா?''

''ம், எப்படி இந்த அளவுக்கு?'' என்றவள்,

''அது சரிதான். நீ தான் எப்பவுமே அழகாச்சே.'' என்று உடனே மீண்டும் சொன்னாள்.

ஆனால் அதற்குள் உதயா திரும்பித் தனது தாயுடன் பேச ஆரம்பித்து விட்டிருக்க, ''எனக்கென்னமா? அப்புறம் உனக்கு இங்க எல்லாம் சவுகர்யமா இருக்கா? வேலை பரவாயில்லையா?'' என்று தனது பெரிய மகளையும், அவளுடைய அழகான மாற்றங்களையும் ஆசையாகப் பார்த்தார் வத்சலா.

''எல்லாமே சவுகர்யமா இருக்குமா,'' என்றவள்,

''என்ன, இப்படி இளைச்சுட்டீங்க?'' என்று கேட்டாள்.

''ஹலோ, அதெல்லாம் அம்மாவும் ஒண்ணும் இளைக்கல, நானும் ஒண்ணும் ஊதல. உன் கண்ணுல தான்

ஏதோ பிரச்சன. மேடம் முதல்ல போய் செக் பண்ணுங்க,'' என்று வந்தாள் வித்யா.

''அதே நேரம் உதயாக்கா சொல்றது சரிதான். நீ நல்லா தின்னு தின்னு கொழுத்துதான் போயிருக்க!'' என்று அர்விந்த் வர,

''டேய், அவ என்னைக்கிடா உதயாக்கா மாதிரி ஸ்லிம்மா அழகா இருந்தா? அவ என்னைக்குமே எருமமாடு தான...'' என்றான் அபிஷேக்.

''பாருங்கம்மா இவனுகள...'' என்று வித்யா தனது தாயிடம் கைகாட்ட,

''சரிதான். போங்கடா, அவங்க இப்பதான வந்திருக்காங்க. முதல்ல வயித்துக்கு எதையாவது எடுத்துக்கட்டும்,'' என்று டிஃபன் ப்ளேட்டுகளுடன் வந்தார் வனஜா.

''அட இன்னுமா?'' என்று அபிஷேக் பாவனையுடன் சொல்ல, ''நீ எதுவும் சொல்லாதடா தடியா,'' என்று அவனைப் பார்த்து ரோஷத்துடன் சொன்னாள் வித்யா.

அப்படிச் சொன்ன வித்யாவும் உதயா அளவிற்கு இல்லாவிட்டாலும் பார்ப்பதற்கு அழகாகவே இருந்தாள்.

அதே சமயம் தனது சித்தப்பாவும் அவரைத் தொடர்ந்து விஜயமோகனும் உள்ளே வர,

அதை முதலில் கவனித்தது உதயா.

''வாங்க வாங்க,'' என்று சித்தப்பா தனது தாயுடன் பேச ஆரம்பித்திருக்க, அதே சமயம் விஜயமோகனை வரவேற்ற வனஜா தனது உடன்பிறந்த அக்காவையும் அக்காவின் சிறிய மகளையும் அவனுக்கு அறிமுகப் படுத்தினார்.



அதே போல அவர்களுக்கும்.

தோற்றத்தில் எளிமையாக இருந்தாலும் பார்ப்பதற்கு வனஜா ஆன்ட்டியை விடவும் கூட நன்றாக இருந்த உதயாவின் தாயிடம் தானும் சில வார்த்தைகள் பேசினான் விஜயமோகன்.

உதயா யாரைப் போல என்பதும் புரிந்தது.

''அப்புறம் யாரெல்லாம் ஸைட்டுக்கு வர்றீங்க, வர்றவங்க சீக்கிரம் கிளம்புங்க,'' என்ற வாசுதேவனின் வார்த்தைகளில், நான் நீ எனக் கிட்டத்தட்ட சிறியவர்கள் அனைவருமே கிளம்பி விட்டிருந்தனர்.

''வாங்க உதயாக்கா.''

''இல்ல அர்விந்த், நான் வரல.''

''அட வாக்கா,'' என்று வித்யாவும் அழைக்க, இல்லை, நான் வரவில்லையென்று ஒரேயடியாக மறுத்து விட்டிருந்தாள், அவள்.

டிஃபன் எதுவும் வேண்டாமென்று விட்டு டீயை மட்டும் குடித்து விட்டு அனைவரும் கிளம்பி விட்டிருந்தனர்.

தனது தாயும், சித்தியும் பேசிக் கொண்டே சமையலறையில் ஏதோ வேலையைப் பார்த்துக் கொண்டிருக்க, பின்னாலிருந்த மல்லிகைக் கொடியில் பூக்களைப் பறிப்பதற்காகக் கூடையுடன் வந்திருந்தாள் உதயா.

அவளுடைய எண்ணங்களும் விஜயமோகனைச் சுற்றித்தான் ஓடிக் கொண்டிருந்தன.

நேற்றுக் காலைக்குப் பிறகு அவன் தன்னிடம் முகம் கொடுத்துப் பேசவில்லையோ என்று நூறாவது

முறையாக அப்பொழுதும் தோன்றிய எண்ணத்தை
மண்டையில் ஒரு கொட்டு வைத்து அடக்கினாள்.

நல்லதென்று நிம்மதியுடன் நினைத்துக் கொண்டு
போகாமல், இதென்ன மனம் இப்படி முரண்டு பிடிக்கி
தென்று எரிச்சலுடன் நினைத்தாள்.

ஒருவேளை அவன் இனிமேல் எப்பொழுதுமே த
னிடம் இப்படித்தான் நடந்து கொள்வானோ?

மனம் வலிக்க, அப்படித்தான் என்ற முடிவுக்கு வந்
விட்டிருந்தாள் உதயா.

*

இல்லையென்றால் அன்று போல இன்றும் தன்னை
உடன் அழைத்துக் கொண்டு வந்திருப்பானல்லவா?

தனது கையிலிருக்கும் மொபைல் ஒலிக்க, ஏதே
கனவிலிருந்து விடுபட்டாற்போல நடப்புக்கு வந்தா

அவள் அப்போதிருந்த மனநிலைக்கு அந்தப்
எண்ணிலிருந்து வந்த அழைப்பைப் பார்த்ததும் கோப
தான் வந்தது.

அதே மனநிலையுடன் அட்டெண்ட் செய்து கா
வைத்தவள், ''ஹலோ,'' என்றாள்.

எப்பொழுதும் போல எதிர்முனையில் மௌனம்.

''டேய், உம்மனசுல நீ என்னடா நினைச்சுட்டிருக்
என்று கேட்டவள், அவன் கூலாக, ''உன்னைத்தா
என்று சொல்வானென்று சற்றும் எதிர்பார்க்கவில்லை

சில வினாடிகளில தன்னைச் சமாளித்துக் கொண்
உதயா மீண்டும் பேசத் தொடங்குவதற்குள் அ
அழைப்பைத் துண்டித்திருந்தான்.



கோபத்துடன் அவள் மீண்டும் அழைத்தும் பல
னில்லை, நாட் ரீச்சபிள் என்ற பதில் தான் வந்தது.

நாளை மறுநாள் கிரஹப்பிரவேசம் என்பதால், நாளை
அவசியமிருந்தால் விடுமுறை எடுத்துக்கொள் என்று
தான் விஜயமோகனும் சொல்லியிருந்தான்.

ஆனால் வீட்டில்தான் வேலையென்று பெரிதாக
ஒன்றும் இருக்கவில்லை.

சித்தியிடம் கேட்டதற்கு அவரும் அவசியமில்லாமல்
எதற்கு விடுமுறை, கிளம்பு என்றுவிட, மனதிற்குள் சற்று
நிம்மதியாகக் கூட உணர்ந்தாள்.

முதலிரண்டு நாட்களைப் போலவே அன்றும் அவ
சியத்திற்குத் தவிர விஜயமோகன் எதையும் பேசாததில்
மனதிற்குள் ஏமாற்றமாக உணர்ந்தாள்.

மாலை கிளம்பும் வரையும் கூட அதே நிலைதான்
தொடர்ந்தது.

ஆனால் என்ன, வழக்கத்தை விடவும் சற்று முன்ன
தாகவே கிளம்பிக் கொள்ளச் சொன்னான்.

மேலும் ஏதாவது சொல்வானா என்று சில வினாடிகள்
நின்று பார்த்துவிட்டு அதற்குப் பிறகே கைப்பையை
எடுப்பதற்காகத் தன்னுடைய இடத்திற்கு வந்தாள்
உதயா.

உதயாவின் நிலை புரிய மனதிற்குள் புன்னகை செய்து
கொண்டான் விஜயமோகன்.

உன் மனதை உனக்குப் புரிய வைக்க இதைத் தவிர
வேறு சிறந்த வழி எனக்குத் தெரியவில்லையென்று
தனக்குத் தானே சொல்லிக் கொண்டான்.

சில வினாடிகளில் கைப்பையுடன் விடைபெற்று கொள்ள வந்தவளிடம் தலையை மட்டும் லேசாக அசைத்து விடை கொடுத்தாள்.

## 10

புதுமனை புகு விழாவிற்காகத் தனது சித்தி எடுத்துக் கொடுத்திருந்த அந்த விலையுயர்ந்த பட்டுச்சேலையில் அதற்குத் தகுந்தாற் போன்ற ஆபரணங்களை அணிந்து பார்க்கவே தேவதையைப் போலிருந்தாள் உதயா.

அப்படியும் அவளொன்றும் அதிகப்படியான ... பனைகள் எதையும் செய்து கொண்டிருக்கவில்லை.

சொந்தங்கள், வாசுதேவனின் தொழில் நண்பர்கள் அறிந்தவர்கள், தெரிந்தவர்களென விசேஷத்திற்கு ... திருந்தவர்களில் பெரும்பாலோரின் பார்வை உதயாவின் மீதுதான் இருந்தது.

''உதயா.''

தனது சித்தி அழைப்பது கேட்க, அருகில் செ...

''சொல்லுங்க சித்தி,'' என்றாள் உதயா.

''ஒரு சின்ன உதவிமா, அபிஷேக்க கூட்டிட்டு கொஞ்சம் நம்ம வீடு வரைக்கும் போய்ட்டு வர... யுமா?''

''சரி சித்தி, சொல்லுங்க,'' என்று அவர் சொ... தனைத்தையும் கேட்டுக் கொண்டவள்,



''இதோ, உடனே கிளம்பிடறேன் சித்தி,'' என்று தனது தம்பிகளைத் தேடினாள்.

''என்னக்கா, யாரத் தேட்ற?'' என்ற தங்கையிடம், ''அபிஷேக், அர்விந்த் யாரையும் காணல. எங்க போய்ட்டாங்க?'' என்று கேட்டாள்.

''அவங்க ரெண்டு பேரும் தனித்தனியா வெளிய போயிருக்காங்க. அபிஷேக் ஒருத்தங்கள ட்ராப் பண்ணவும், அர்விந்த் யாரையோ கூட்டிட்டு வந்துட்றதாவும் சொல்லிட்டு இப்பதான் போனாங்க.''

''ஓ.'' என்றவள் என்ன செய்வதென்று தனது சித்தியிடமே கேட்கலாமென்று திரும்பப் போனாள்.

ஆனால் அதே நேரம், ''ஆன்ட்டி சொன்னாங்க, வா,'' என்று தன்னை நோக்கி வந்திருந்த விஜயமோகனிடம், ''பரவாயில்ல, நான் வேணு...'' என்று முழுமையாகச் சொல்ல முடியாமல் மென்று விழுங்கினாள் உதயா.

''யோசிச்சுட்டிருக்கறதுக்கெல்லாம் டைமில்ல. அதோட நானும் உன்ன ஒண்ணும் அப்படியே கடிச்சுத் தின்னுடமாட்டேன். கிளம்பு.''

அப்படிச் சொன்னவனின் குரலில் எரிச்சல் இருந்ததோ என்று உதயாவால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

அந்த வினாடியே அவனுடன் கிளம்பி விட்டிருந்தவளுக்கு அனைவரும் தங்களையே பார்ப்பதைப் போன்ற ஒரு உணர்வு தோன்றியிருந்தது.

அவன் ஏறிக்கொண்டு அவனுக்குப் பக்கவாட்டிலிருந்த முன் பக்கக் கார் கதவைத் திறந்துவிடத் தானும் ஏறி அமர்ந்து கொண்டாள் உதயா.

''உள்ள போய் ஃபைவ் மினிட்ஸ்ல எடுத்துட்டு வந்துடு. எனக்கு வேற முக்கியமான வேலையிருக்கு.''

''இல்ல, அது லாஃப்ட் மேல இருக்கு. நீங்க வந்து எடுத்துத் தந்தீங்கன்னா பரவாயில்ல...''

''வர்றேன்.''

ஏன் இப்படி எரிந்து விழுகிறானென்று நினைத்த உதயாவிற்கு மனம் மிகவும் பாரமாகி விட்டிருந்தது.

சிறிதாகி விட்டிருந்த உதயாவின் முகத்தைப் பார்த்த விஜயமோகனுக்கும் பாவமாகத்தான் இருந்தது.

நன்றாகப் பேசத் துடித்த மனதை, வேண்டாம், இன்னும் சில நாட்கள் போகட்டுமென்று முயன்று கட்டுப்படுத்திக் கொண்டான்.

அதற்குப் பிறகு வீடு வந்து சேரும்வரை இருவருமே பேசிக் கொள்ளவில்லை.

உதயா கேட்டுக் கொண்டது போல இறங்கி அவளுடன் வீட்டிற்குள் வந்திருந்தவன்,

''எத எடுக்கணும்? சீக்கிரம் சொல்லு,'' என்றான்.

''இங்க ஸ்டோர் ரூம்ல இருக்கற இந்தப் பெட்டி தான்'' என்று உதயா அவனை அழைத்துக் காட்ட, ''தள்ளு'' என்று அருகிலிருந்த ஸ்டூலை இழுக்கப் போனான்.

அதே நேரம் ஒரு பெரிய பூரான் தனது காலடியிலேயே வந்திருக்க, பயமும் அருவருப்பும் போட்டி போட வேகமாக இரண்டடி பின்னால் வந்திருந்தாள் உதயா.



அதாவது அவனையறியாமலேயே விஜயமோகனின் மேல் வந்து மோதியிருந்தாள்.

ஆனால் அதே நேரம் தன் மேல் வந்து மோதிக் கொண்டு நின்றவளிடமிருந்து, அனிச்சைச் செயலாகச் சட்டென்று விலகிக் கொண்டிருந்தான் விஜயமோகன்.

அதற்குள் அந்தப் பூரானும் எங்கோ இடுக்கில் சென்று மறைந்திருந்தது.

தீப்பட்டாற் போலத் தன்னை விலக்கித் தள்ளி விட்டதோடு, தன்னிடமிருந்து விலகியும் விட்டிருந்த விஜயமோகனின் செய்கையில் உதயாவின் கண்கள் அவளையறியாமலேயே கலங்கி விட்டிருந்தன.

கூடவே தான் ஏதோ மிகவும் கீழ்த்தரமாக நடந்து கொண்டு விட்டதைப் போல உதயாவின் மனமும் சேர்ந்து குறுகிப் போனது.

அவனுடைய உயரத்திற்கு ஸ்டூலின் உதவியே தேவைப்படாது போக, மேலிருந்து அந்தப் பெட்டியை அப்படியே தூக்கிக் கீழே அந்த ஸ்டூலின் மீதே வைத்திருந்தான்.

''என்ன எடுக்கணுமோ எடு,'' என்ற விஜயமோகனின் வார்த்தைகளில் குனிந்து தனது சித்தி சொல்லியிருந்த கவரைத் தேடத் தொடங்கினாள் உதயா.

ஆனால் கண்களை மறைத்துக் கொண்டிருந்த கண்ணீர் அதற்குத் தடையாக இருக்க, கையிலிருந்த கைக்குட்டையால் நாசுக்காகக் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

பூக்குவியல் போல மிருதுவாகத் தன்மேல் வந்
விழுந்த உதயாவை அப்படியே அள்ளி அணைத்து
கொள்ள வேண்டும் போல மனம் துடித்ததில் லேசா
அதிர்ந்து கூடப் போனான் விஜயமோகன்.

அதற்கும் மேல் அவள் முழுமையாகத் தன் மேலே
வந்து விழுந்து விடாமல் பிடித்து நிறுத்த நேர்ந்தது
அவளிடமிருந்து விலக நேர்ந்ததும், அவனை மேலு
ஒரு மாதிரியாக்கி விட்டிருந்தது.

அனைத்திற்கும் மேலாக உதயாவின் கண்ணீரை
பார்க்க நேர்ந்ததில், எங்கே அங்கேயே நின்றா
தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாது போ
விடுமோ என்று வெளியிலேயே வந்திருந்தான்.

ஒரு வழியாகச் சித்தி சொன்ன கவரை எடுத்
கொண்டு நிமிர்ந்த உதயா, அதற்குப் பிறகுதான் வி
மோகன் அங்கு இல்லாததையே கவனித்தாள்.

இன்னும் சிறிது நேரம் இங்கிருந்தால் எங்கே த
மேல் வந்து அட்டையாக ஒட்டிக் கொண்டு விடுவா
என்று பயந்து கொண்டு வெளியே சென்று விட்டா
அப்போதிருந்த மனநிலையில் அப்படித்தான் இரு
மென்ற முடிவுக்கு மனதில் ஒரு வலியுடன் வந்திருந்
உதயா.

''என்ன, எடுத்தாச்சா?'' என்ற குரலில் திரும்பிய
ஆமாம் என்பதைப் போலத் தலையை ஆட்டினாள்.

அடுத்த சில வினாடிகளில் அங்கிருந்து கிள
மிருந்த இருவரும், பத்து நிமிடங்களில் புதுமனை
அடைந்திருந்தனர்.



விஜயமோகனுடன் அதுவும் அவனுக்கு இணையாக
முன் பக்கமாகக் காரிலிருந்து இறங்கிய உதயாவை எரித்து
விடுவது போலப் பார்த்தாள் மாயா.

என்ன திமிர், இந்த அன்றாடங்காய்ச்சிக்குக் கார்
சவாரியா, அதுவும் விஜயமோகனுடன் என்று நெஞ்சு
கொதித்தது.

அதுவும் எப்படியெல்லாம் அலங்கரித்துக் கொண்டு...
அதிலும் இப்பொழுது சில நாட்களாக இருக்கின்ற அழகை
மிகைப்படுத்திக் காட்டும் வித்தையை வேறு பழகிக்
கொண்டு விட்டிருக்கிறாளே.

அவள்தான் காணாததைக் கண்டதால் ஆவென்று
வாயைப் பிளந்து கொண்டு வருகிறாளென்றாலும் இந்த
விஜயமோகனுக்குப் புத்தி எங்கே போயிற்று?

அவர்களுடைய நெருக்கம் கார் சவாரியோடு மட்டும்
தான் நிற்கிறதா, இல்லை... அதற்கு மேலும்...

சொல்வதற்கில்லை...

எப்பாடுபட்டேனும் அந்த உதயாவை அப்புறப் படுத்
தியே தீர வேண்டும். இல்லையென்றால் அனைத்தும்
கைமீறிக் கூடப் போய்விடலாம்.

ஆனால் அதுவரை பேசாமல் இருந்தால் அல்லவா?

விஜயமோகனுடன் தன்னால் மோத முடியாதுதான்.
ஏன், யாராலுமே.

ஆனால் அந்த உதயாவிடம் எளிதாக முடியுமே.

மோதுவது மட்டுமா, இருக்கும் இடம் தெரியாமல்
நசுக்கித் தூக்கித் தொலைவில் வீசி விடவும் வேண்டும்.

அதுவும் எவ்வளவு விரைவில் முடியுமோ, அவ்வளவு
விரைவில்.

# 11

வழக்கமில்லாத வழக்கமாக அன்று ஏனோ வேலைக்குச் செல்வதை நினைத்தாலே மனதிற்குள் மிகவும் பயமாக இருந்தது உதயாவிற்கு.

தாயும் தங்கையும் அன்று அதிகாலை ட்ரெயினுக்கு ஊருக்குக் கிளம்பியிருக்க, தானும் அப்படியே சித்தி வீட்டிலிருந்தே வேலைக்குக் கிளம்பி விட்டிருந்தாள்.

வழக்கத்தை விடவும் பதினைந்து நிமிடங்கள் முன்ன தாகவே கம்பெனியை வந்து அடைந்திருந்தவள் எம்.டி விஜயமோகனும் வந்து அவனுடைய இருக்கையில் அமர்ந்து ஏதோ முக்கியமான வேலையில் மும்முரமாக இருப்பதைக் கண்டாள்.

திடீரென்று இரண்டு நாட்களுக்கு முன்பு அவன் ஒரு பெரிய ஆர்டரைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தது நினைவிற்கு வர, வேகமாகச் சென்று கைப்பையை வைத்துவிட்டு, குறிப்பேடு, பேனா மற்றும் இதர ஃபைல்களுடன் அவனுடைய இடத்திற்கு வந்து சேர்ந்தாள்.

அவனுடைய கவனத்தைக் கலைக்க வேண்டாமென்று பேசாமல் நின்றவள், அவன் நிமிர்ந்ததும், ''குட்மார்னிங் ஸார்,'' என்றாள்.

''ம், மார்னிங்,'' என்று கம்ப்யூட்டரில் எதையோ செய்தவன் அடுத்த சில வினாடிகளில் நன்றாகவே திரும்பி அமர்ந்திருந்தான்.



விஜயமோகனைப் பார்த்தவளுக்கு அன்று கடைசியாக ஸ்டோர் ரூமில் நடந்ததுதான் நினைவிற்கு வந்தது.

கடவுளே! தொடர்ந்து அப்படியே கடுமையாக நடந்து கொண்டால் அதைத் தன்னால் தாங்கிக் கொள்ள முடியுமா?

முதலில் எதற்காக அப்படியெல்லாம் நடந்து கொள்ள வேண்டும்?

அதுவும் காரணமே இல்லாமல்.

ஒருவேளை மூன்று நாட்களுக்கு முன்பு மாயா போன் செய்ததற்காகத் தான் ஏதோ சொன்னோமே, அதற்காக இருக்குமோ?

ஏன், அவன் மட்டும் ஏதேதோ கூறவில்லை...

''என்ன இவ்வளவு சீக்கிரம் வந்துட்ட? அம்மா, தங்கை கூட இருக்கலையா?''

''அவங்க காலைல நேரத்துலயே கிளம்பிட்டாங்க.''

''ஓ, சரி. நீ வந்ததும் நல்லதாதான் போயிடுச்சு. கிளம்பு. இன்னைக்கு முழுக்க வெளிய சுத்த வேண்டிய வேலையிருக்கு,'' என்று தானும் எழுந்து கார் சாவியைக் கையிலெடுத்திருந்த விஜயமோகனைப் பார்த்தாள் உதயா.

வெளியே செல்ல வேண்டுமாமா, அதற்குத் தான் எதற்கு..?

''என்ன யோசனை? ஈவினிங் வர்றதுக்கு லேட்டானாலும் ஆயிடும். அதனால் பேக்கையும் எடுத்துக்கோ.''

''நான் எதுக்கு ஸார்...?''

''ஏன் நீதான என் பி.ஏ. போற இடத்துக்கு எடுத் துட்டுப் போக வேண்டியது, எடுத்துக் குடுக்க வேண் டியது, சொல்லச் சொல்ல நோட் பண்ண வேண்டிய துன்னு...''

அவன் முடிப்பதற்குள், ''சரி ஸார், கிளம்பலாம்,'' என்று சொல்லி விட்டிருந்தாள் உதயா.

சொன்னதோடு நின்று விடாமல் ஓடிச்சென்று அடுத் சில வினாடிகளில் கைப்பையுடன் அவனுக்கு முன்பா வும் வந்து நின்றிருந்தாள்.

''இதையெல்லாம் எடுத்துக்கோ,'' என்று அவன் கா டிய ஃபைல்களை எடுத்துக் கொண்டவள், அவனை பின் தொடர்ந்தாள்.

அவனுடைய வேக நடைக்கு ஈடு கொடுக்க, உதய சற்றுச் சிரமப்பட்டுத்தான் போனாள்.

முதலில் நேராக அவர்கள் சென்றடைந்திருந்த இட அவனுடைய வீடு.

''இறங்கி வா,'' என்றவனுடன் தானும் இறங்கி ந தாள்.

இது நாள்வரை அவனுடைய வீடென்றால் அ சித்தியின் வீட்டிற்குப் பக்கத்தில் இருப்பதென்று உதயா நினைத்துக் கொண்டிருந்தாள்.

ஆனால் ஏன் சம்பந்தமில்லாமல் இங்கு அழைத்து

உதயாவின் யூகத்தை அறிந்து கொண்டவன் பே ''இதுவும் நம்ம வீடுதான்,'' என்றான்.

''அப்ப அங்க சித்தி வீட்டுக்குப் பக்க...''



''அதுவும்தான். அதுதான் தாத்தா காலத்துலிருந்து பரம்பரையா இருக்கற வீடு. அங்க இருந்தா அப்பாவோட ஞாபகத்துல அம்மா ரொம்பவும் கவலைப்பட்டு ஹெல்த்த ஸ்பாயில் பண்ணிக்கறாங்க. அதனால போன வருஷம் இந்த வீட்டை விலைக்கு வாங்கி அம்மாவ இங்க கூட் டிட்டு வந்துட்டேன்.''

வெகு தூரம் வரை இருமருங்கிலும் புல்வெளிக்கு இடையே வந்த அந்தப் பாதையில் நடந்தவர்கள், அதற் குப் பிறகே வீட்டு வராந்தாவை அடைந்திருந்தார்கள்.

வீட்டின் பிரமாண்டம் உதயாவைத் திகைக்க வைத்து விட்டிருந்தது.

இதை எப்படி வீடு என்று சொல்ல முடியும்?

''அப்ப அந்த வீடு?''

''அதுவும் அப்படியேதான் இருக்கு. தங்கச்சிங்க ரெண்டு பேரும் வரும்போது அப்பப்ப நான் அம்மான்னு மாசத்துல நாலஞ்சு நாள் அங்கயும் இருப்போம்.''

அதற்குள் இருவரும் ஹாலுக்குள் வந்திருக்க, இந்த ஹாலின் பரப்பளவில் சித்தியின் முழு வீடும் அடங்கி விடுமோ என்று உதயாவால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

''உக்காரு,'' என்று விஜயமோகன் சோஃபாவைக் காட்டிச் சொல்ல, பேசாமல் சென்று அமர்ந்து விட்டிருந் தாள் உதயா.

அவனுடைய தாயைப் பார்க்க ஆவலாக இருந்தது.

''இதோ வர்றேன்,'' என்று அவன் உள்ளே சென்று விட்டிருக்க, அவள் வீட்டின் உள் அலங்காரங்களையும்,

அதன் பிரம்மாண்டத்தையும் ரசிக்க ஆரம்பித்து விட்டிருந்தாள்.

சித்தி வீட்டினர், மாமா என அனைவருமே விஜயமோகனிடம் அவ்வளவு மரியாதையாக நடந்து கொள்கிறார்கள் என்றால் பிறகு சொல்லவும் வேண்டுமா என்று நினைக்கத் தோன்றியது.

சில நிமிடங்கள் சென்றிருக்கும். யாரோ வரும் அரவம் கேட்கத் திரும்பினாள் உதயா.

''டிஃபன் சாப்பிடலாம். வாங்கமா.''

வேலைக்காரப் பெண் என்பது புரிய, ''இல்ல, நான் சாப்டாச்சு,'' என்று முடித்து விட்டிருந்தாள்.

''சரி. ஐயா கூப்புட்றாங்க. வாங்க.''

தன்னை எதற்காக அழைக்கிறானென்று நினைத்துக் கொண்டே இருக்கையை விட்டு எழுந்திருந்தவள், தயக்கத்துடன் உள்ளே சென்றாள்.

டைனிங் டேபிள் மேல் இருந்த அனைத்துப் பதார்த்தங்களையும் மற்றொரு முறை சரி பார்த்துவிட்டு. அந்த வேலைக்காரப் பெண்ணும் அங்கிருந்து சென்று விட்டிருந்ததைக் கண்டாள் உதயா.

அதே நேரம், ''வாங்கமா,'' என்று சற்று வயதான தனது தாயைக் கைத்தாங்கலாக அழைத்துக் கொண்டு டைனிங் ஹாலுக்குள் வந்தான் விஜயமோகன்.

''என்ன, உக்காரு. ஏன் நின்னுட்டே இருக்க?''

''பரவாயில்ல ஸார். நான் வேணும்னா ஹால்ல உக்காந்திருக்கேன்...''



''லைட்டா சாப்பிடலாம். வந்து உக்காரு,'' என்று சற்று அழுத்தத்துடன் சொன்னவன், அப்படியே தனது தாயையும் அழைத்து வந்து டைனிங் டேபிள் சேரில் அமர வைத்திருந்தான்.

சற்று நன்றாகப் பார்த்ததில் தான், விஜயமோகனின் தாய்க்கு அப்படி வயது ஒன்றும் அதிகமாகி யிருக்கவில்லை என்பது தெரிந்தது.

விஜயமோகனே சொன்னது போல, கவலைதான் அவரது தோற்றத்தில் முதுமையைக் கொண்டு வந்திருக்கிறது போலும்.

''வா, உக்காரு,'' என்று விஜயமோகன் மீண்டும் அழைக்க, லேசான தயக்கத்துடன் சென்று அமர்ந்தாள் உதயா.

''அம்மா,'' என்று தனது தாயை அவளுக்கு அறிமுகப் படுத்தியவன், அவரிடமும் உதயாவை அறிமுகப்படுத்தினான்.

''ஓ! வனஜாவோட அக்கா பொண்ணா?'' என்றவரின் பார்வையின் கூர்மையில் விஜயமோகனைக் கண்டாள் உதயா.

விஜயமோகன் தானே மூவருக்கும் பரிமாற, மிகுந்த தயக்கத்துடன் இருக்கையின் விளிம்பில் வந்து அமர்ந்திருந்தாள் உதயா.

''என்னமா, ஃப்ரியா உக்காந்து சாப்பிடு.''

வாசுகி - விஜயமோகனின் தாய் - சொல்ல, சரியென்பதைப் போலத் தலையை ஆட்டினாள் உதயா.

''பொண்ணு ரொம்ப லட்சணமா இருக்க,'' என்றவரை லேசான புன்னகையுடன் பார்த்துக் கொண்டே, அல்வாவைச் சிறிது எடுத்து வாயில் வைத்தாள்.

''அட எனக்கெதுக்கு கண்ணா ஸ்வீட்?'' என்றவர், ''முதல்ல நீங்க ரெண்டு பேரும் சாப்புடுங்க. உங் களுக்குப் பரிமாறிட்டு நான் அப்புறமா சாப்பிடறேன்,'' என்று எழப்போன தாயைத் தடுத்து விட்டிருந்தான் விஜயமோகன்.

''அதெல்லாம் வேண்டாம். எங்ககூடவே உக்காந்து சாப்புடுங்க.''

''இப்பதான்பா ஒரு பெரிய டம்ளர் நிறைய ஹார் லிக்ஸ் குடிச்சேன்.''

''அது சரிதான்மா. ஆனா இப்ப எங்ககூட உக்காந்து சாப்பிடுங்க,'' என்று இட்லியைப் பரிமாறிய மகனிடம், ''அடப் போதுன்டா. விட்டா ஊட்டியே விட்ருவ போலி ருக்கு,'' என்று அதட்டலாகக் கேட்டார் வாசுகி.

''அதுல என்னமா இருக்கு, நீங்க மட்டும் வயிறு நிறை யச் சாப்பிடுவீங்கன்னா சொல்லுங்க. நான் இப்பவே ஊட்டி விட்றேன்.''

''அது சரி,'' என்றவர், ''பாருமா, இவன் எனக்கு ஊட்டி விட்றானாம். கொழுப்புதான இவனுக்கு?'' என்று உதயா விடம் முறையிட்டார்.

ஏற்கெனவே தாய் மகனுக்கிடையே தன்னை அதிகப் படியாக உணர்ந்த உதயா இப்பொழுது நெளியவே ஆரம்பித்து விட்டிருந்தாள்.

''அட என்ன, உன் ப்ளேட் காலியா இருக்கு. நீ எடுத்து வெச்சுக்கோம்மா,'' என்றவர், உதயாவுக்குப் பரிமாற வதற்கு எத்தனிக்க, ''நீங்க உக்காருங்க ஆன்ட்டி,'' என்று தானே எடுத்து வைத்துக் கொண்டாள் உதயா.



''நீங்க இன்னொரு இட்லி வெச்சுக்கோங்கமா.''

''அடப் போதுன்டா, நீ முதல்ல உன் வயித்துப் பாட டப் பாத்துட்டுக் கிளம்பு. நீ ஒருத்தன் குடும்பத்துக்காக எவ்வளவு உழைக்கற கண்ணா! முதல்ல நீ உன்னைப் பாரு...''

''சரியா சொன்னீங்கமா, நீங்க உங்கள நல்லபடியா வெச்சுக்கிட்டிங்கன்னா தான் என்னாலயும் நிம்மதியா இருக்க முடியும். டாக்டர் பாருங்க, இந்த மாசத்துல உங் களுக்கு இரத்த அழுத்தம் கூட ரொம்பவும் அதிகமா இருக்கறதா சொல்றார்...''

''அதெல்லாம் அப்படித்தான்டா இருக்கும். நானும் உங்க அப்பாகிட்டயே போகப் போறேன்...'' என்று கண் கலங்கிய தாயை எழுந்து வந்து, ''அம்மா! இங்க என்னப் பாருங்க,'' என்று அவரது தோள்பட்டைகளில் கை வைத்து அழைத்தான் விஜயமோகன்.

தொடர்ந்து வந்த சில வினாடிகளில் தன்னை நன் றாகவே சமாளித்துக்கொண்டு நிமிர்ந்த வாசுகி, ''என்ன மன்னிச்சுடுப்பா. போய் நீ உக்காந்து சாப்புடு,'' என்று மகனைப் பார்த்துச் சொன்னார்.

அப்படிச் சொன்ன தாயை ஆதங்கத்துடன் பார்த்த விஜயமோகன், ''பாருங்க, மனசுக்குள்ள எப்பவும் இப் படியே தான் உருகிட்டிருக்கீங்க. நீங்க எப்பப் பாத்தாலும் இந்த மாதிரியே கவலைப்பட்டுட்டிருந்தீங்கன்னா, என் னாலயும் எப்படி நிம்மதியாத் தொழிலப் பாக்க முடியும், சொல்லுங்க?''

''சரிப்பா. இனி இல்ல, நீ உக்காந்து சாப்புடு. நிஜமா தான் சொல்றேன் கண்ணா, போ, உக்காந்து சாப்புடு.''

..............

''என்னப்பா, நானும் முன்னாடி இருந்ததுக்கு இப்ப மாறித்தான் இருக்கேன். போகப்போக இன்னும் சுத்தமா நல்லா ஆயிடுவேன். கவலைப்படாத.''

..........

''என்னப்பா?''

''நீங்க சொல்றத நம்பலாமில்லையா?''

''அப்படியே முழுமையா நம்பலாம்.''

''அப்ப சரி.'' விஜயமோகன் மீண்டும் வந்து சாப்பிட அமர்ந்திருக்க, அவனுக்குத் தேவையானதை அருகில் நகர்த்திக் கொடுத்தாள் உதயா.

''அப்புறம் இந்து போன் பண்ணியிருந்தாமா.''

''என்ன சொன்னா?''

''குழந்தைகளுக்கு இங்க வெச்சு முதல் பிறந்த நாளை கொண்டாடலாமான்னு கேட்டா.''

''நிஜமாவா சொல்ற?''

''ஆமாம்மா. என்னாலயும் முதல்ல நம்ப முடியல எதுக்கும் முடிவா அங்கிருந்து எப்பக் கிளம்பறது, எத்தனை நாள் இருக்கப் போறாங்கன்னு எல்லாத்தையும் இ... னைக்கு நைட் கூப்பிட்டுச் சொல்றேன்னா.''

அதே நேரம் உதயாவைப் பார்த்த விஜயமோகன் ''சாப்புட்டு முடிச்சிருந்தா நீ எழுந்து கை கழுவிக்கோ'' என்றான்.

அதற்காகவே காத்துக் கொண்டிருந்தாற்போல, உதயா தானும் உடனே எழுந்து கொண்டாள்.



தாயும், மகனும் - பாவம்! சற்று நேரம் தடையின்றிப் பேசட்டுமே என்றிருந்தது.

தொடர்ந்து வந்த சில நிமிடங்களில், ''உன்ன போர டிக்க வெச்சுட்டேன்,'' என்று விஜயமோகன் ஹாலுக்கு வர, ''அப்படியெல்லாம் இல்ல ஸார்,'' என்று அவசரமாக மறுத்தாள் உதயா.

அதே நேரம் வாசுகி தானும் ட்ரேயில் காபி கப்களுடன் ஹாலுக்கு வந்திருந்தார்.

''நீங்க ஏம்மா, உக்காருங்க முதல்ல.''

''ஏன்டா, எனக்கென்ன?'' என்றவர், சிறியவர்கள் இருவருக்கும் காபியைக் கொடுத்தார்.

# 12

அடுத்த பத்து நிமிடங்களில் இருவரும் வீட்டை விட்டுக் கிளம்பியிருக்க, ''வீட்ல தனியா இருக்கறது ரொம்ப கொடுமை. பாவம், ஆன்ட்டி!'' என்றாள் உதயா.

''அது சரிதான். ஆனா அவங்க நினைச்சா எங்க போயிட்டு வர முடியாது. வீட்ல கார் இல்லையா, டிரைவர் இல்லையா?''

''ஆனா தனியா வெளிய போகப் பிடிக்கணுமே.''

''அப்ப ஒரு ஆளக் கொண்டு வந்துட வேண்டியதுதான்,'' என்று விஜயமோகனைப் பார்த்தவள், ''புரியல,'' என்றாள்.

"அவருக்கு மருமகளா, எனக்கு மனைவியா."

"ம், இது கரெக்ட். அதுதான் மாயாவும் உங்களுக்காகத்
தயாரா இருக்காளே."

"நீ சொல்றதப் பாத்தா எனக்கு மாயாவ விட்டா வேற
பொண்ணுங்களே கிடைக்க மாட்டாங்கன்ற மாதிரியல்ல
இருக்கு."

"அச்சச்சோ! நான் அப்படிச் சொல்ல வரல..."

"எப்படியானாலும் அவள இழுத்துப் பேசறது எனக்கு
பிடிக்கல."

"ஸாரி."

"இதுக்கெதுக்கு ஸாரியெல்லாம்?" என்றவன்
பாதையில் கவனமாகக் காரைச் செலுத்த ஆரம்பி
திருக்க, ஏதோ சொல்வதற்காக வாயைத் திறந்து விட்டு
பிறகு வேண்டாமென்று திரும்பிக் கொண்டு விட்டிரு
தாள் உதயா.

"என்ன, சொல்லு."

"எது எப்படியோ ஆன்ட்டி இந்த அளவுக்கு ஆயிரு
காங்கன்னா அதுக்குக் காரணம் கவலைதான். நீ
சொல்ற மாதிரி அதுக்கான தீர்வு வீட்டுக்கு ஒரு...
களுக்கு... நீங்க கல்யாணம் பண்ணிக்கறதுதான். அ
யேன் நீங்க உடனே செஞ்சுடக் கூடாது?"

யோசிக்காமல் கேட்டு விட்டிருந்தவள், அதற்
பிறகு உனக்கு எதற்கு இந்த அதிகப் பிரசங்கித்
மெல்லாம் என்று எதையாவது கேட்டு விடுவானோ
என்று பயந்து கூடப் போய் விட்டிருந்தாள்.

ஆனால் அவனோ அதற்கு நேர் மாறாகக், "கரும்பு
னக் கூலியும் கிடைச்சா கசக்குமா?" என்று கேட்



புரியாமல் தன்னைப் பார்த்தவளிடம், "உடனே ஒரு
பெண்ணுக்கு நான் எங்க போவேன் சொல்லு. அப்புறம்
ஏதாவது வத்தலையோ, தொத்தலையோதான் நான்
கல்யாணம் பண்ணிக்கிட்டாகணும்," என்றான்.

அப்படி என் ஆகப் போகிறது என்று நினைத்தவளால்
அதை அப்படியே கேட்க முடியவில்லை.

"முதல்ல எனக்கும் ஒரு நல்ல வாழ்க்கைத் துணையா,
அதே சமயம் அம்மாகிட்டயும் அன்பா நடந்துக்கற மாதிரி
ஒரு பொண்ணு கிடைக்கணுமே."

............

"இந்தக் காலத்துல அப்படி எல்லா விதத்துலயும்
அன்பா நடந்துக்கற மாதிரி ஒரு பொண்ணு கிடைக்
கணும்னு எதிர்பாக்கறது கூடப் பேராசைதான்."

ஏனோ விஜயமோகனின் வார்த்தைகளை உதயாவால்
சத்தமாக ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

இவன் பிரதிபலன் பாராத அன்பைச் செலுத்தினால்,
பெறுகிறவளிடமும் அதற்கு மதிப்பு இல்லாமல் எப்படிப்
போகுமாம்?

அதோடு இவனிடமும் தான் ஒரு ஆணாகக் கம்பீரம்,
அழகு... பணம் என என்ன இல்லாமல் இருக்கிறது?

நினைத்ததை உதயா அவனிடம் அப்படியே கேட்க,
சிரித்தான். ஆனா அது எல்லாத்துக்கும் முன்னாடி அப்படி
வர்றவள எனக்கும் ரொம்பப் பிடிச்சிருக்கணும். அவ
இல்லாத வாழ்க்கைல எனக்கும் எதுவுமே இல்லேங்கற
மாதிரி நான் ஃபீல் பண்ணணும்," என்றான் விஜய
மோகன்.

அவனுடைய பெற்றவர்களைப் போல, அதாவது கணவனின் மறைவுக்குப் பிறகு தனக்கு உயிர் வாழவே பிடிக்கவில்லையென்று சொல்லும் அவனுடைய தாயைப் போல இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறானோ?

அதே சமயம் உதயாவைப் போலவே விஜயமோகனும் அதையேதான் எண்ணிக் கொண்டிருந்தான்.

அப்படி விஜயமோகன் விரும்பும் பெண்ணாகத் தன்னை எண்ணிப் பார்த்தாள் உதயா.

ஏதோ இனம் புரியாத பரவசமொன்று நாடி நரம்பெல்லாம் பாய்வதைப் போலத் தனக்குள் சிலிர்த்துப் போனாள்.

ஏனோ அவளையறியாமலேயே அந்த நிமிடங்களை மனதிற்குள் மிகவும் ரசித்தாள்.

ஆனால் அடுத்த வினாடியே நடப்புக்கு வந்திருந்தவளுக்கு அதற்குப் பிறகுதான் அவளுடைய முட்டாள்தனம் புரிந்தது.

எப்போதிருந்து இப்படியெல்லாம் - அதாவது விஜயமோகன் சொன்னது போல - பேராசைப்பட ஆரம்பித்தேனென்று மனதில் ஒரு வலியுடன் நினைத்துப் பார்த்தாள்.

எது எப்படியோ, விஜயமோகனுக்கு மனைவியாக அந்தப் பெண் உண்மையிலேயே மிகவும் அதிர்ஷ்டம் செய்தவளாகத் தான் இருக்க வேண்டுமென்று தோன்றியது.

''என்ன யோசனை?'' என்றவனின் குரலில் தான் மீண்டும் நடப்பிற்கு வந்திருந்தாள் உதயா.



''ஒண்ணுமில்லயே.''

''அப்ப என்னவோ இருக்கு, சரி விடு.'' என்றவன்,

''ஆமா, மேரேஜ்ல உன்னுடைய எக்ஸ்பெக்டேஷன்ஸ் என்ன?'' என்று கேட்டான்.

''தெரியல.''

பட்டென்று உதயாவிடமிருந்து அப்படியொரு பதில் வருமென்று விஜயமோகன் துளியும் எதிர்பார்த்திருக்கவில்லை.

''புரியல.''

''நான் அந்த மாதிரியான கற்பனைகள் எதையும் மனசுக்குள்ள வளத்துக்கிட்டதில்ல.''

''ஆச்சரியமா இருக்கு. இப்படியும் அதாவது உன்ன மாதிரி கூட ஒரு பொண்ணு இருக்க முடியுமா? இல்ல, சும்மா சொல்றியா?''

''உண்மையத்தான் சொல்றேன்.''

''மனசோட அடி ஆழத்துல எனக்கும் ஒரு பிரகாசமான வாழ்க்கை காத்துட்டிருக்கற மாதிரியான ஒரு எண்ணம் மட்டும் எப்பவுமே இருக்கும். அவ்வளவுதான்.''

''அதுக்கு மேல உனக்கு வரப்போற வாழ்க்கைத் துணையப் பத்தி யெல்லாம்?''

''இது வரைக்கும் அப்படி...''

''பொய் சொல்லாத, மனசத் தொட்டுச் சொல்லு.''

ஆமாம், என் மனதைப் புரிந்து கொண்டு என்னைக் கண்ணுக்குள் இமையாக வைத்துக் காப்பாற்றும் ஒருமறியா கம்பீரமான ஆறடி மனிதனுக்காகத்தான் நான்

காத்துக் கொண்டிருக்கிறேனென்று உதயாவால் எப்படிச் சொல்ல முடியும்?

மனதிலிருப்பதை அப்படியே சொன்னால் தன்னை மனதிற்குள் வைத்துக் கொண்டுதான் சொல்கிறாளென்று கூட இவன் நினைத்து விடக் கூடுமே.

"என்ன, பேசு?"

"நான் என்ன சொல்லணும்னு நீங்க எதிர்பார் கறீங்க?"

"உண்மைய."

சில வினாடிகளின் தயக்கத்திற்குப் பிறகு தனது மனதிலிருப்பதை அப்படியே சொல்லி விட்டிருந்தா உதயா.

அதற்குப் பிறகு சில நிமிடங்கள் அங்கே மௌன நிலவியது.

உதயா மனதிற்குள் நினைத்துப் பயந்தது போல அவள் தன்னை எண்ணித்தான் சொல்கிறாள் என்றெ லாம் விஜயமோகனும் ஒன்றும் நினைத்துக் கொண் விடவில்லை.

ஆனால் தன்னைப் போலவே உதயாவும் என்ன யிருக்கிறாளே என்று மனதிற்குள் ஆச்சரியப்பட்டு போனான்.

இத்தனை நாளும் தனது மனப் பெட்டகத்திற்கு பூட்டி வைக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வரும் இ மையே உருவான அந்த அழகிய பெண் இவள் இ உதயா தான் என்ற முடிவுக்கும் மனதிற்குள் சந்தோச வந்திருந்தான்.



அதை அவளிடம் சொல்லப் போகும் அந்த இனிய நாளை அந்த வினாடியிலிருந்தே எல்லையற்ற ஆவ டன் எதிர்பார்க்கவும் தொடங்கி விட்டிருந்தான்.

விஜயமோகனின் மௌனத்தில் எங்கே அவன் தான் நினைத்தது போலவேதான் எண்ணிக் கொண்டு விட் டானோ என்று அதிர்ந்து போய் விட்டிருந்தாள் உதயா.

ஆனால் அந்த வினாடியே, "நீ எதிர்பாக்கற மாதிரி மணாளன் கிடைக்க வாழ்த்துக்கள்," என்று புன்னகை டன் உதயாவைத் திரும்பிப் பார்த்தான் விஜயமோகன்.

அதைத் தானும் ஒரு அழகிய புன்னகையுடன் ஏற்றுக் கொண்டவளுக்கு, அதற்குப் பிறகுதான் மீண்டும் இயல்பாக மூச்சு விட முடிந்தது.

ஏனோ அதற்குப் பிறகு இருவருக்குமே மனம் மிகவும் லேசாகித் தங்களைச் சுற்றியிருக்கும் உலகம் முழுவதுமே மையமாகத் தோன்றத் தொடங்கி விட்டிருந்தது.

அதே மனநிலையுடன் தான் அவர்களுக்கு அன்றைய நாள் முழுவதுமே கழிந்தது.

நினைத்து வந்த வேலைகள் அனைத்துமே சிறப்பாக வும், வெற்றிகரமாகவும் நடந்து முடிந்தன.

ன் தனது காதலை உதயாவிடம் இன்றே சொல்லி விடக் கூடாதென்று கூடத் தோன்றி விட்டிருந்தது விஜயமோகனுக்கு.

ஒரு சில வினாடிகள் தான்.

உடனே அந்த நாள் இன்னும் வரவில்லையென்று என்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

அனைத்து விதங்களிலுமே மிகவும் சிறப்பாகத் தனது மனதைக் கவர்ந்து விட்டிருந்த உதயாவை எப்பொழுதும் தன் அருகிலேயே வைத்துக் கொள்ள வேண்டும், உடனே தன்னவளாக்கிக் கொள்ள வேண்டும் என்றெல் லாம் மிகவும் தீவிரமாகத் தோன்றத் தொடங்கி விட் டிருந்தது விஜயமோகனுக்கு.

உதயாவிற்கும் அதே போலத்தான் இருந்ததென் றாலும், விஜயமோகனைப் போல அவளால் சந்தோஷப் பட முடியவில்லை.

மாறாகக் கடவுளே! நான் ஏன் இப்படியாகிப் போனே னென்று மனதிற்குள் மிகவும் கவலைப்படத் தொடங்கி விட்டிருந்தாள்.

எதிர்காலமே இல்லாத இந்த அன்பு எப்படி வந்தது இதிலிருந்து நான் இனி முழுமையாக மீளவே முடியாது என்று மனதிற்குள் ஊமையாய் அழத் தொடங்கி வி டிருந்தாள்.

நேரம் இரவு ஏழாகியிருக்க, நேராகக் காரை ஒரு ஹோட்டலுக்குள் விட்டிருந்தான் விஜயமோகன்.

தன்னைப் பேசாமல் பார்த்தவளிடம், டின்னர் முடி சுட்டுப் போயிடலாம் என்றான்.

''வேண்டாமே, நான் ஹாஸ்டலுக்கே...''

''இன்னும் கொஞ்ச நேரம் பக்கத்துலயே வெச்சு உ அழகான முகத்தப் பாத்துட்டிருக்கலாமேன்னு ஆசை பட்டேன்... அச்சச்சோ! முறைக்காதீங்க மேடம்.''

என்ன இவன், இப்படியெல்லாம் சொன்னால்...

''பசி வயித்தக் கிள்ளுதுமா, உனக்கென்ன நே ஹாஸ்டலுக்குப் போனதும் சாப்பிடப் போயிடுவ. ஆ



நான் இன்னும் எத்தன வேலைகளை முடிச்சுட்டு வீட்டுக்கு...''

''ஓ.கே. விஜய், ஆர்டர் குடுங்க. சாப்பிடலாம்.''

''அட, பேரெல்லாம் திடீர்னு தடபுடல் படுது.''

''ஆமாம் பின்ன, நீங்கதான ஸார் மோரெல்லாம் பியூட்டி நேரத்துக்கு மட்டும் போதும்னு சொன்னீங்க.''

''அப்ப நான் என்ன சொன்னாலும் கேட்டுக்குவ இல்லயா?''

அதே நேரம் ஆர்டர் செய்திருந்த உணவு வந்துவிட் டிருக்க, ஒரு ப்ளேட்டை உதயாவிடம் நகர்த்திக் கொடுத்து விட்டு, மற்றொன்றைத் தான் எடுத்துக் கொண்டான்.

''என்ன, அப்படித்தான?''

''ம்கூம், எனக்குப் பிடிச்சத மட்டும்தான் கேட்டுக்கு வேன்.''

''அப்ப என்ன பேர் சொல்லிக் கூப்புட்றது பிடிச் சிருக்குங்கற?''

விஜயமோகனின் பார்வை தன்னை என்னவோ செய்ய, மும்முரமாகச் சாப்பிடுவது போலக் குனிந்து கொண்டாள் உதயா.

''என்ன, சொல்லு?''

திடீரென்று அவன் தனது கையைப் பிடிப்பானென்று உதயா கனவிலும் எதிர்பார்க்கவில்லை.

நல்லவேளையாக அந்த ஸ்பெஷல் ஏ.சி. அறைக்குள் அவர்கள் மட்டும்தான் அமர்ந்திருந்தார்கள்.

''கைய விடுங்க,'' என்று மெல்லிய குரலில் உதயா சொல்ல, ''ம்கூம், நீ பதில் சொல்ற வரைக்கும் விட

மாட்டேன்,'' என்று தனது பிடியை மேலும் சற்று இறுக்கியிருந்தான் விஜயமோகன்.

''நீங்க விட்ற வரைக்கும் நான் சொல்ல மாட்டேன்.''

''சரிதான். நீயா, நானா... பாத்துடலாம்.''

கதவு திறக்கப்படும் ஓசை கேட்பது போலிருக்க, தனது இடது கையை நீட்டி ஒரு நிமிஷம் என்று யாரையோ அழைத்தாள் உதயா.

அப்பொழுது விஜயமோகன் தானும் திரும்பிப் பார்க்க, அந்த இடைவெளியில் முழுப் பலத்தையும் கொடுத்து தனது கையை இழுத்துக் கொண்டு விட்டிருந்தாள் அவள்.

''என்ன தப்பிச்சுட்டதா நினைப்பா, கார்ல எங்கூட தான் வந்தாகணும்.''

''சரி, அதுக்கென்ன?''

''இப்பவாவது கையப் புடிச்சேன், அப்ப என்ன வேணும்னாலும்...''

''சொல்றவங்க எதையும் செய்யறதில்ல.''

''வேண்டாம், என்னையும் எல்லார மாதிரியும் நினை கூடாத.''

''நீங்க மட்டும் அப்படியென்ன வித்தியாசமாம்?''

''சரி, காருக்கு வா, எப்படின்னு காட்றேன்.''

''சரிதான். பாக்கலாம்.''

அதற்குப் பிறகு சாப்பிட்டு முடித்து எழும்வரை கூட இருவருமே சரிக்குச் சரிதான் பேசிக் கொண்டிருந்தார்கள்.

ஏன், இருவருக்குமே அதுதான் பிடித்தும் இருந்தது



''என்ன தைரியமா கூட வர்ற?'' என்று கேட்டவனிடம், ''ஏன், நானென்ன உங்ககூட உங்க வீட்டுக்கா வர்றேன்? போற வழில அப்படியே ஹாஸ்டல்ல இறங்கிக் கறதுக்காகத்தான்,'' என்றாள்.

அவன் எதற்காக அப்படிக் கேட்கிறானென்பது புரிந்தாலும், வேண்டுமென்றே இடக்காகப் பதில் சொன்னாள் உதயா.

''நீ கார்ல ஏறினதுக்கப்புறம் நான் எதுக்கு ஹாஸ்டலுக்குப் போகப் போறேனாம்.''

''பின்ன?''

''அப்படியே நேரா...''

''ம், நேரா...''

''லாட்ஜ்க்குப் போய்...''

அதற்குள் இருவரும் காரை அடைந்து உள்ளே ஏறி அமர்ந்தும் இருக்க, ''சரி, வாங்க. அங்கயே போலாம்,'' என்றாள் உதயா.

''என்ன, இன்னைக்கு மேடம் ரொம்ப ஜாலி மூட்ல இருப்பீங்க போலிருக்கு?''

''ஏன் நீங்க மட்டும் தான் ஜாலி மூட்ல இருப்பீங் களாக்கும்?''

தன்னைப் பார்ப்பவனின் கண்களில் என்ன இருக்கிறது?

அந்த வினாடியில் அவனுடைய கை மீண்டும் தனது கையைப் பிடித்திருக்க, அவளையறியாமலேயே உடல் சிலிர்த்துப் போனாள் உதயா.

''கைய எடுங்க.''

''எடுக்க முடியாது.''

''முதல்ல கைய...''

''சொல்றவங்க செயல்ல இறங்க மாட்டாங்கன்னு என்னவோ சொன்ன...''

அதே நேரம் அவன் தனது மற்றொரு கையையும் பிடித்திருக்க, ''வேண்டாம்,'' என்று எச்சரிப்பது போலச் சொன்னாள் உதயா.

''என்ன வேண்டாம்?''

திடீரென்று உதயாவின் கண்கள் கலங்கி விட்டிருக்க, ''ஏய் என்னாச்சு...'' என்றவன் தனது கைகளையும் எடுத்துக் கொண்டான்.

''இவதான, நம்ம இஷ்டத்துக்கு யூஸ் பண்ணிக்கலாம்னு முடிவு பண்ணிட்டிங்க இல்ல?''

''இஷ்டத்துக்குன்னா?''

''உங்க ஆசைய நான் நிறைவேத்தி வெக்கரேன், வாங்க, லாட்ஜ்க்குப் போக...''

திடீரென்று அவன் அவ்வளவு வேகமாகக் காரை ஸ்டார்ட் செய்வானென்று உதயா துளியும் எதிர்பார்த்திருக்கவில்லை.

எங்கும் நிற்காமல் நேராக அவன் வந்து சேர்ந்த இடம் உதயாவின் ஹாஸ்டல்.

சுத்தமாக உணர்ச்சி துடைக்கப்பட்டு விட்டிருந்த அவனுடைய முகத்தைப் பார்க்க ஏனோ அவளுக்கும் ஒரு மாதிரியாகி விட்டிருந்தது.



தான் இறங்குவதற்காக அவன் காத்திருப்பது தெரிந்தது.

''நான்....''

மேலே பேச முடியாமல் தன்னைத் தயக்கத்துடன் பார்த்தவளை ஒரு விரக்தி கலந்த புன்னகையுடன் பார்த்தான் விஜயமோகன்.

''கேவலம் உடம்புக்காக... என்ன நீ அவ்வளவு சீப்பா நினைச்சுட்டிருக்க?''

''இல்ல....''

''இறங்கிக்கோ, நான் கிளம்பணும்.''

''ப்ளீஸ் நான் சொல்றதையும் கொஞ்சம் கேளுங்களேன்.''

அவனுடைய மௌனத்தையே சம்மதமாக ஏற்று மேலே தொடர்ந்தாள் உதயா.

''நான்... நான் இந்த மாதிரியெல்லாம் யார்கிட்டயும் பேசிப் பழகினதில்ல. நீங்க சர்வ சாதாரணமா பேசிடறீங்க. ஆனா அதையெல்லாம் எப்படி எடுத்துக்கறதுன்னு தெரியாம நான் பட்ற கஷ்டம்... நானும் எல்லா உணர்வுகளும் கலந்த ஒரு சராசரிப் பொண்ணுதான் விஜய். எந்த ஆண் பிள்ளையையும் நான் நேருக்கு நேரா நின்னு பார்த்தது கூடக் கிடையாது. அவசியமே இருந்தாக் கூட அதையெல்லாம் நூத்துக்கு நூறு சதவிகிதம் தவிர்த்திடுவேன். ஆனா உங்ககிட்ட என்னால அந்த மாதிரியெல்லாம் கடினமா நடந்துக்க முடி...''

''இறங்கிக்கறியா?''

''என்னத் தப்பா...''

விஜயமோகன் காரை ஸ்டார்ட் செய்து விட்டிருக்க, அதற்கு மேல் எதையும் பேச முடியாமல் உடனே இறங்கிக் கொண்டாள் உதயா.

கல்லைப் போல இறுகியிருந்த அவனுடைய முகத்தைப் பார்க்கவே மனம் கனத்துப் போனது.

விஜயமோகனுடைய கோபமும் கடினமும் தன்னை இந்த அளவிற்குப் பாதித்து நிம்மதியை இழக்கச் செய்து விடுமென்று உதயா கனவிலும் எதிர்பார்த்திருக்க வில்லை.

இனி எப்பொழுதுமே தன்னிடம் அப்படித்தான் நடந்து கொள்வானா?

கடவுளே! கையருகில் வந்த சொர்க்கத்தை நாமே காலால் உதைத்துத் தள்ளி விட்டோமோ?

அதிலும் விஜயமோகன் வேறு மிகவும் தன்மானம் பார்ப்பவனாயிற்றே.

இனி அவ்வளவுதான், தன்னையெல்லாம் ஒரு பொருட்டாகக் கூட மதிக்கமாட்டான்.

ஏன் பேசமாட்டான், சிரிக்கமாட்டான். தனக்கு விஜய மோகன் யார்?

அவன் தன்னிடம் பேசாவிட்டால், சிரிக்கா விட்டால், ஏன், தன்னை ஒரு பொருட்டாகக் கூட மதிக்காவிட்டாலும்தான் என்ன?

அவன் அப்படியெல்லாம் இருந்துவிட மாட்டான் என்று தானே சில நாட்களுக்கு முன்பு வரை நாமும் மிகவும் எதிர்பார்த்தோம்.

இப்பொழுது மட்டும் நமக்கு என்ன ஆயிற்று?

ஏதேதோ முரண்பாடான எண்ணங்களுக்கிடையே சிக்கித் தவித்து, இரவு முழுக்க ஒரு வினாடி கூட கண்ணயர முடியாமல் மனதளவில் துடித்துப் போய் விட்டிருந்தாள் உதயா.



# 13

"குட் மார்னிங் ஸார்."

லேசாகத் தலையை மட்டும் அசைத்தவனைக் குற்ற மனப்பான்மை மேலிடப் பார்த்தாள் உதயா.

குழப்பத்தில் ஒரு வழியாகி விட்டிருந்த உதயாவின் நிலை விஜயமோகனுக்குப் புரியவே செய்தது.

பாவம் என்று இளகத் தொடங்கியிருந்த மனதை முயன்று மீண்டும் கல்லாக்கிக் கொண்டான்.

என்ன வார்த்தை சொல்லி விட்டாள்.

படட்டும்.

அப்பொழுதுதான் நேரான பாதையில் யோசிக்கத் தொடங்குவாள். தான் தன் மனதை வெளிப்படுத்தும் போது அதைப் புரிந்து கொள்ளவும் முயலுவாள்.

அன்று முழுக்க இருவருக்குமே வேலைகள் கழுத்தை நெரித்தன.

அவசியமின்றிப் பேசியிருக்கா விட்டாலும், விஜய மோகனின் அருகாமையும், அவனைத் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருக்க நேர்ந்ததுமே, உதயாவின் மனதிற்கு மிகுந்த நிம்மதியைக் கொடுத்தது.

மிகவும் இதமாகவும் உணர்ந்தாள்.

இந்த நிலை மட்டுமே எப்பொழுதும் வாய்த்தாலும் கூடப் போதுமே என்றிருந்தது.

விஜயமோகன் இருக்கும் நிலைமைக்கு, அவன் தன்னை இந்த அளவிற்குப் பிரமாதமாக நடத்துகிறானே, இதைவிட வேறென்ன வேண்டுமென்றும் நினைக்கத் தோன்றியது.

விஜயமோகனே ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண் டிருந்த அந்தப் பெரிய ஆர்டர் கிடைத்து விட்டிருந்ததில், அவனைப் போலவே உதயாவும் மிகவும் சந்தோஷப் பட்டுப் போனாள்.

ஏதோ தனக்கே அனைத்தும் கிடைத்து விட்டாற் போலப் பெருமையாகவும்.

ஏனென்றால் அவன் தனது சுயமுயற்சியால் புதிதாகத் தயாரித்திருந்த இரண்டு சாதனங்களுக்காக வந்திருந்த ஆர்டர் அது.

எங்கே தனது முயற்சிக்கு வரவேற்பு இனி எந்த அளவில் இருக்குமோ என்ற யோசனையுடன் பெரும் பணத்தை முதலீடு செய்து செயலில் இறங்கி விட்டிருந்தவனுக்குக் கைமேலேயே பலன், அதுவும் மிகப் பெரிய அளவில் கிடைத்திருக்கிறதென்றால் பிறகு சொல்லவும் வேண்டுமா

முகம் முழுக்கப் புன்னகையுடன் தன்னைப் பார்த்த உதயாவிடம் என்னவென்று கேட்டான் விஜயமோகன்.

''வாழ்த்துக்கள் ஸார்.''

............

அவன் தன்னைப் பார்க்க, ''உங்க முயற்சிக்குப் பெரிய வெற்றி - அதுவும் கைமேல கிடைச்சதுக்காக,'' என்றாள்.



''அதுக்கு நீயும்தான் ஒருவிதத்துல காரணம்.''

''நானா?''

''ம். நீதான இன்வெஸ்ட் பண்ணுங்க. நான் என்ன சொன்னாலும் நடக்கும், என்னுடையது கருநாக்கு, பலிக்கும்னு சொன்ன.''

''அப்ப நான் என்ன சொன்னாலும் நடந்துடும்னு சொல்றீங்களா? இல்ல ஸார். உங்க முயற்சி தான் இதுக்கு முழுமையான காரணம்.''

''அப்படிங்கற?''

''அதுல என்ன சந்தேகம்? சரி, சொல்லுங்க. எனக்கு என்ன ட்ரீட் தர்றீங்க?''

''ட்ரீட்டா?''

''ம், உங்க... ம்கூம்... நம்ம வெற்றி சந்தோஷத்தக் கொண்டாட.''

''சரிதான், தந்துட்டாப் போச்சு.''

''அதுதான் எப்ப?''

''இன்னைக்கே, நைட் டின்னர்.''

''யார்த்த மாற மாட்டீங்களே?''

''அந்தப் பழக்கம் எனக்கு எப்பவும் கிடையாது. ஆனா கூட வந்தா என்ன வேணும்னாலும் நடக்கலாம். அதுக்கு நீ தயார்னா நானும் தயார்.''

''சரிதான்.''

''அதுக்கும் நல்லா யோசிச்சுக்கோ.''

''இனி யோசிக்க ஒண்ணுமில்ல. நீங்க என்ன சொன்னாலும் அத அப்படியே சந்தோஷமா ஏத்துக்க என்னால முடியும். அதுக்கு நான் தயாராயிட்டேன்.''

''ஏதேதோ சொல்ற. சரி, அதயும் பாத்துடலாம்.''

யாரோ உள்ளே வரும் அரவம் கேட்க, இருவரும் ஒரு சேரத் திரும்பிப் பார்த்தனர்.

''வா மதன்.''

விஜயமோகன் வரவேற்க, இவனா என்றிருந்தது உதயாவிற்கு.

அந்த மதன் வந்து அமர்ந்திருக்க, தன்னிடத்திற்குச் செல்லலாமென்று நகர்ந்தாள் உதயா.

''உதயா! ஒரு நிமிஷம்.''

விஜயமோகன் அழைக்க, நின்று அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

''சரி, திரும்பவும் கூப்புட்றேன். நீ போய்ப் பாரு,'' என்... வன் மீண்டும் அந்த மதனுடன் பேச ஆரம்பித்திருக்க, தன்னிடத்திற்கு வந்து விட்டிருந்தாள் உதயா.

விஜயமோகன் அவனுடைய சந்தோஷத்தை வெளி... படுத்தும் வகையில் விளையாட்டாகப் பேசுகிற... என்பது புரிந்தது.

பத்து நிமிடங்களில் மதன் கிளம்பியிருக்க, அதற்... பிறகே மீண்டும் அங்கு வந்தாள் உதயா.

விஜயமோகன் புன்னகையுடன் தன்னைப் பார்... என்னவென்று கேட்டாள்.

''இல்ல மாயாவப் பிடிக்காததால, மதனையும் பி... காமப் போயிடுச்சா?''

ஓ, அது வேறு இருக்கிறதா என்று நினைக்கத் தோ... றியது உதயாவிற்கு.



அந்த மதனும், அவன் பார்க்கிற பார்வையும்...

''என்ன?''

''அப்படியெல்லாம் ஒண்ணுமில்லையே,'' என்று சமாளித்து வைத்தாள்.

''மதன் எனக்கு வேண்டியவன், அது மட்டுமில்லாம உனக்கும் அவன முன்னாடியே தெரியும்தான? ஒரு வார்த்தை அல்லது ஒரு சின்னப் புன்னகை எதுவுமே இல்லாம ஏன் அப்படிப் போன?''

அவனைப் பார்த்தாலே எரிச்சல் பொங்குகிறது, இனி பேசவும் வேறு வேண்டுமாமா?

''ப்ளீஸ் விஜய், ஒரு சிலவங்கள பாத்த உடனே பேச ணும்னு தோணும்...''

''ஆனா இவனப் பாத்ததும் ஓடிடணும்னு தோணு தாக்கும்.''

சரிதான் என்று நினைத்தவளால் அதை அப்படியே வெளியே சொல்ல முடியவில்லை.

''ஒரு நிமிஷம்,'' என்று விட்டுத் தன் இடத்திற்கு வந்திருந்தாள் உதயா.

''இந்தாங்க.''

''என்ன இது?''

பெரிய கிஃப்ட் பார்சல் ஒன்றைக் கொண்டு வந்து நீட்டிய உதயாவிடம் கேட்டான் விஜயமோகன்.

''பிரிச்சுப் பாருங்க.''

''சர்ப்ரைஸா?'' என்றவன், உடனே அந்த கிஃப்ட் பேப்பரைப் பார்த்தான்.

''வாவ்!''

''என்ன, பிடிச்சிருக்கா?''

''அன்னைக்கு நீ வரைஞ்சிருந்தத விடவும் கூட நல்லாக்கு!''

''தேங்க்ஸ்,'' என்றவள் அதைவிடப் பல மடங்கு நேர்மு அக்கறையும் எடுக்கப்பட்டிருக்கிறதே என்று நினைத்து கொண்டாள்.

''அட்டா, இத வரைஞ்ச கைக்குக் கட்டாயம் ஏதாவ குடுத்தே ஆகணுமே.''

''அப்படியா, சரி, குடுங்க.''

உதயா சொன்னது கூட விஜயமோகனின் காதுகளி விழுந்திருக்கவில்லை. அந்த அளவிற்குத் தனது ஓ யத்தை அவன் ரசனையுடன் பார்த்துக் கொண்டிரு ததைப் பார்த்தவளுக்குப் பெருமையாக இருந்தது.

சில வினாடிகளில், ''ம் என்ன சொன்ன?'' என் நிமிர்ந்து உதயாவைப் பார்த்தவன்,

''இன்னைக்கு ஈவினிங் டின்னரோட சேத்து அந் பரிசையும் நிச்சயம் தருவேன்,'' என்றான்.

............

''ஹாஸ்டலுக்குப் போறதுக்குக் கொஞ்சம் லேட் னாலும் உனக்கொன்னும் பிரச்சனை இல்லையே.''

''பத்து மணிக்குள்ள போய்ட்டாப் போதும்.''

''அதுக்குள்ள கொண்டு போய் விட்ட்ரை பண்றே என்றவனின் கண்களில் என்ன இருந்தது?

வீம்புக்குப் பேசிக் கொண்டிருந்த உதயாவிற்கு வ இப்பொழுது மனதிற்குள் பயம் எட்டிப் பார்க்க ஆ பித்திருந்தது.



# 14

''என்ன கிளம்பலாமா? என்று விஜயமோகன் கேட் கும்போதே, ''நான் ரெடி,'' என்று கிளம்பியே வந்திருந் தாள் உதயா.

''என்ன ரொம்ப ஸ்பீடா இருக்கற மாதிரி தெரியுது?''

''ஆமா, ஸ்பீடாக் கிளம்பினா தான டின்னர முடிச்சுட்டு நான் சீக்கிரம் ஹாஸ்டல் போய்ச் சேர முடியும்.''

''நல்லா சமாளிக்கற.''

''ஏன், அதுதான் காரணம்.''

''சரிதான், வா.''

விஜயமோகனுடன் நடந்தவளுக்கு முதல் நாள் நடந்ததுதான் நினைவிற்கு வந்தது. இந்நேரம் இவனும் அதைத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறானோ?

அது சரியே என்பதைப் போல, ''எல்லாத்துக்கும் சேர்த்து சொல்லியிருக்க, மறந்துடாத!'' என்று நினைவு படுத்தினான் விஜயமோகன்.

இருவரும் ஏறி அமர்ந்ததும் காரை ஸ்டார்ட் செய்தான்.

''முதல்ல எங்க போறோம்? ஏன் கேக்கறேன்னா டைம் கூட ஆகல. இந்நேரத்துக்கே சாப்பிட முடியாதே,'' என்றாள்.

............

அவனுடைய மௌனம் ஏற்கெனவே நெஞ்சுக் கூட்டிற்குள் இருந்த பயத்தை மேலும் சற்று அதிகமாக்கியிருந்தது.

சரிதான் பாக்கலாமே என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள்.

அப்படி உதயா நினைத்துப் பயந்தது போலெல்லாம் எதுவும் நடந்திருக்கவில்லை.

முதலில் ஒரு நகைக்கடைக்கு உதயாவை அழைத்துச் சென்றவன், அவளைப் பேசவே விடாமல் அவளுக்காக இரண்டு அழகான தங்க வளையல்களைத் தேர்ந்தெடுத்திருந்தான்.

புரியாமல் பார்த்தவளிடம், "என்ன, பிடிச்சிருக்கா?" என்று கேட்டான்.

பிடித்திருக்கிறது என்பதைப் போலப் பட்டும் படாமல் தலையை அசைத்து வைத்தாள் உதயா.

பில் போடச் சொன்னவன், அதற்குப் பணத்தைச் செலுத்திவிட்டு, வளையல் பேக்கை வாங்கிக் கொண்டான்.

உதயாவிற்குத் தான் அவனுடைய செய்கை எதுவுமே புரிந்திருக்கவில்லை.

சாவி கொடுக்கப்பட்ட பொம்மையைப் போல அவனைப் பின் தொடர்ந்தாள்.

அடுத்ததாக அவர்கள் சென்ற இடம் முதல் நாள் காலையில் அவன் தன்னை அழைத்துச் சென்றிருந்த அவனுடைய வீடு.



கடவுளே! இங்கே எதற்காக அழை...

"என்ன, இறங்கி வா."

எதுவும் பேசாமல் இறங்கிக் கொண்ட உதயா, அவனுடன் வீட்டிற்குள் வந்திருந்தாள்.

"என்ன, வீம்புக்கு ஏதேதோ சொல்லிட்டோமேன்னு இப்ப ஃபீல் பண்றியா?"

இல்லையென்பதைப் போலத் தலையை அசைத்தாள் உதயா.

தவறான எண்ணத்துடன் இருப்பவன், குடியிருக்கும் வீட்டிற்கு அழைத்து வர மாட்டானே.

"என்ன, பாக்கற?"

"இல்ல, ஆன்ட்டி..."

"அவங்க இல்ல, அந்த வீட்ல இருக்காங்க."

பட்டென்று அவனிடமிருந்து வந்த பதிலில் திகைத்துப் போய் விட்டிருந்தாள் உதயா.

"என்ன பயமா இருக்கா?"

விஜயமோகனின் பார்வையிலும், கேள்வியிலும் முழுமையாக நடப்புக்கு வந்திருந்தவள், "நான் எதுக்காகப் பயப்படணும்?" என்று கேட்டாள்.

"குட்," என்றவன், "உக்காரு," என்று ஹாலில் இருந்த சோபாவைக் காட்டினான்.

அவன் இன்டர்காமில் எதையோ சொல்லிச் சில நிமிடங்களில் டிஃபனும் காபியும் வந்தது.

டிஃபனை ஒதுக்கிவிட்டுக் காபியை மட்டும் எடுத்துக் கொண்டாள் உதயா.

''சரிதான், அப்புறம் ஸ்பெஷல் டின்னர ரசிச்சுச் சாப்பிட முடியாது,'' என்று தானும் அது போலவே காபியை மட்டும் எடுத்துக் கொண்டான் விஜயமோகன்.

உதயாவின் மனம் படும்பாடு அவனுக்கும் புரியவே செய்தது. மனதிற்குள் சிரித்துக் கொண்டான்.

காபி குடித்து முடித்ததும், ''சரி வா,'' என்று அழைத்த விஜயமோகனை நிமிர்ந்து பார்த்தாள் உதயா.

ஆனால் அதற்குள் அவன் வீட்டிற்குள்ளேயே இருந்த அந்த மாடிப்படிகளில் ஏற ஆரம்பித்திருக்க, தயக்கத்துடன் தானும் அவனைப் பின் தொடர்ந்தாள்.

கீழே இருப்பதை விடவும் கூட மேலே இருந்த ஹால் இன்னும் அழகாக வடிவமைக்கப்பட்டிருப்பதைக் கண்டாள்.

ஆனால் அதெல்லாம் உதயாவின் கண்களைத் தாண்டிக் கருத்தினுள் நுழைந்திருக்கவில்லை.

''என்ன, நின்னுட்ட, வா,'' என்றவனை, மேலும் பின் தொடர்ந்தவள், அவனுடன் உள்ளே இருக்கும் அந்த அறைக்குள் வந்திருந்தாள்.

ஹாலில் இருந்து பல அறைகளைத் தாண்டியே அந்த அறைக்குள் வந்திருப்பதை உணர்ந்தாள் உதயா.

அடுத்ததாக இருப்பது அவனுடைய படுக்கை அறை என்பது புரிந்தது.

அங்கிருந்த ஒரு சோபாவைக் காட்டி அமரச் சொன்னவன், தானும் அதே சோபாவில் அமர்ந்திருந்தான்.

''உங்கிட்ட கொஞ்சம் பேசணும் உதயா.''



நேரடியாக விஷயத்திற்கு வந்திருந்தான் விஜயமோகன்.

என்ன என்பதைப் போலத் தன்னைப் பார்த்தவளிடம், ''முதல்ல வந்து உக்காரு,'' என்றான்.

தயக்கத்துடன் சோபாவின் விளிம்பில் அமர்ந்தவளைப் பார்த்துப் புன்னகை செய்தவன், ''ம்கூம், இது சரியில்ல,'' என்றான்.

''சொல்லுங்க.''

வாயைத் திறந்து கேட்ட உதயாவின் குரல் அவளுக்கே கேட்டிருக்கவில்லை.

''ம்கூம், இவ்வளவு சோகமாகக் கேட்டாச் சொல்ல முடியாது. ஏன்னா நாம இப்பப் பேசப் போறது சந்தோஷமான விஷயத்தப் பத்தி.''

மேலும் உதயாவை நெருங்கி அமர்ந்தவன், ''உன் கையைக் குடு,'' என்று கேட்டான்.

கேட்டதோடு நின்று விடாமல் தானே உதயாவின் கைகளை எடுத்து, கைக்கு ஒன்றாகச் சற்று முன்னர் அவன் வாங்கியிருந்த வளையலை அணிவித்து விட்டிருந்தான் விஜயமோகன்.

செய்வதறியாது அமர்ந்து விட்டிருந்த உதயாவாலும் எதுவுமே பேச முடிந்திருக்கவில்லை.

அவளுடைய குழப்பமான முக பாவனையைப் பார்த்தவன், ''என்னமா?'' என்று கேட்டான்.

''இதெல்லாம் என்ன விஜய்?''

தனது கைகளைக் காட்டி உதயா கேட்க, ''என்னோட சின்ன கிஃப்ட்,'' என்றான் விஜயமோகன்.

''அதுதான் எதுக்குன்னு கேக்கறேன்?''

''என்னவளுக்கு, ஐமீன் என் இனிய எதிர்கால வாழ்க்கைத் துணைக்கு நான் குடுக்கற ஒரு சின்ன அன்புச் சின்னம்.''

''வாழ்க்கைத் துணையா?''

''ம்.''

''விஜய்...''

''என்னமா?''

''நீங்க ஒண்ணும் விளையாடவெல்லா...''

''இல்லடா, நான் மனசார உணர்ந்த உண்மையத்தான் சொல்றேன்.''

..................

''என்னமா?''

விஜயமோகன் திடீரென்று இப்படிச் சொல்வானென்று துளியும் எதிர்பார்த்திருக்காத உதயா, குழப்பத்துடன் அப்படியே சிலை போல அமர்ந்து விட்டிருந்தாள்.

''என்ன உதயா?''

........

''என்னைப் பிடிக்கலையா?''

''உங்களப் பிடிக்காதவங்கன்னு கூட உலகத்துல யாராவது இருப்பாங்களா, விஜய்?''

''நான் உன்னக் கேக்கறேன்.''

''நான் அந்த அளவுக்கு அதிர்ஷ்டசாலியா, என்னால நம்பவே முடியலையே.''



''ஓ! உன் சம்மதத்த மறைமுகமா சொல்றியாக்கும்...''

''இது நடைமுறைக்கு ஒத்து வருமான்னு கேக்கறேன்.''

''ஏன் ஒத்து வராது? நம்ம ரெண்டு பேரோட விருப்பமும் தான் இதுக்கு முக்கியம்.''

''ஆனா என் நிலை உங்க...''

''நான் விரும்பறது உன்ன மட்டும்தான். என்னடா ஏதாவது காரணத்தச் சொல்லி என்னைத் தட்டிக் கழிச்சிடலாம்னு பாக்கறியா?''

''ஐயோ! எந்த விதத்துலயாவது நான் உங்களுக்கு முழுமையான பொருத்தமானவளா இருக்கறேனான்னு யோசிக்கறேன்.''

''ஓ என்ன ஏத்துக்கறதப் பத்தி இனிமேல்தான் நீ யோசிக்கவே ஆரம்பிக்கணுமா? நான் ஏதோ... சரிதான் எனக்குத் தான் எம்மேல எப்பவுமே ஒரு கர்வம்...''

உணர்ந்து சொன்ன விஜயமோகனின் வார்த்தைகள் தனது நெஞ்சையே அறுப்பதைப் போலிருக்க, அந்த வலியில் துடித்துப் போனாள் உதயா.

அதே நேரம் விஜயமோகனும் எழுந்து அந்த அறையின் ஜன்னலுக்கு அருகில் சென்று நின்றிருக்க, தான் அன்றுவரை அறிந்திராத சோகமான அவனுடைய முகபாவனை அவளை மேலும் என்னவோ செய்தது.

தானும் எழுந்து அவனருகில் சென்றிருந்த உதயா, ''விஜய்...'' என்று அவனுடைய தோள்பட்டையில் கைவைத்து அழைத்தாள்.

.............

''நான் ஒரு முட்டாள், என்ன மாதிரியே உன்ன...''

''வேண்டாம் விஜய், ப்ளீஸ் என்னைப் பாருங்களேன்...'' என்று அவனுக்கு முன்பாகப் போய் நின்றிருந்தாள் உதயா.

ஆனால் விஜயமோகனிடம் எந்த அசைவும் இருக்கவில்லை. அவன் தன் பாட்டுக்கு ஜன்னலுக்கு வெளியே வெகு தொலைவில் இருந்த எதையோ இலக்கற்று வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தது தெரிந்தது.

''விஜய்...'' என்று அவனுடைய முகத்தைத் தனது இரண்டு கைகளிலும் ஏந்திக் கொண்டவள், ''ஒங்க மேல நான் எந்த அளவுக்கு அன்பு வெச்சிருக்கேன்னு எனக்கு மட்டும் தான் தெரியும். ஆமாம் விஜய். ஒருவேளை அது நீங்க ஏத்துக்கலேன்னா அதுக்கப்புறம் இந்த உலகத்துல எனக்குன்னு எதுவுமே இல்லாமப் போயிடுமேன்னு மனசுக்குள்ள ஒவ்வொரு நாளும் நான் பட்ற அந்த வேதனை...

''கடவுளே! தகுதிக்கு மீறி ஆசைப்பட வெச்சு என்னை ஏன் இப்படியெல்லாம் வதைக்கறேன்னு நான் அழுத...''

அதற்கு மேல் விஜயமோகன் அவளைப் பேச விட்டிருக்கவில்லை...

அவளைத் தன்னருகில் இழுத்து, ''உதயா...'' என்று அவளுடைய கண்களை ஊடுருவிப் பார்த்தான்.

''சத்தியம்டா, உனக்காக என் உடம்புல இருக்கற ஒவ்வொரு அணுவும்...'' என்றவளை அதற்கு மேல் பேச விடாமல் வெறி கொண்டவன் போல இழுத்துத் தனது மார்போடு அணைத்துக் கொண்டு விட்டிருந்தான்.

அதே நேரம் சுத்தமாகத் தன் வசம் இழந்து விட்டிருந்த உதயாவும் அழுகையுடன் அவனை இறுக அணைத்து அவனுடைய மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள்.



எவ்வளவு நேரம் அப்படிச் சென்றிருந்ததோ, மனமே இல்லாமல் விஜயமோகன் தனது அணைப்பை லேசாகத் தளர்த்த, ''ம்கூம் விஜய்...'' என்ற முனகலுடன் மேலும் அவனது கழுத்தைக் கட்டிக் கொண்டு விட்டிருந்தாள் உதயா.

''என் உதயா...'' என்று அவனும் எல்லையற்ற காதலுடன் அவளது முகத்தை நோக்கிக் குனிய, மேலும் எவ்வளவு நேரம் அப்படிச் சென்றதோ, அதற்குப் பிறகு வெகுநேரம் கழித்தே இருவரும் நடப்புக்கு வந்திருந்தனர்.

தனது பிடியை விட்டதும் நிற்க முடியாமல் தள்ளாடியவளை மீண்டும் தனது கைகளில் ஏந்திக் கொண்டான் விஜயமோகன்.

அப்படியே அழைத்து வந்து சோஃபாவில் தன்னருகில் அமர்த்திக் கொண்டவனை, ஆனந்தக் கண்ணீரில் உதடு துடிக்கப் பார்த்தாள் உதயா.

''என்னடா?''

''என்ன... நீங்க... என்னால நம்பவே முடியலையே விஜய்.''

''ப்ளீஸ்டா. என்னக் கொல்லாத. இனிமேலும் உன்னத் தள்ளி நிறுத்தி வெச்சுட்டிருக்க என்னால முடியாது. சொல்லு. எப்ப உன்னப் பொண்ணு கேட்டு உங்க வீட்டுக்கு வரட்டும்?''

உதயாவின் பார்வையில் அவன் மீண்டும் நெருங்க, வெட்கத்துடன் அவனைத் தள்ளி விட்டாள் அவள்.

''சரிதான். தள்ளிவிட முடியாத நிலைல நிறுத்தி அப்புறம் நெருங்கறேன் அதுக்கப்புறம் உன்னால என்ன பண்ண முடியும்னு பாக்கலாம்.''

"எனக்கென்னவோ எல்லாம் நல்லபடியா முடியுமான்னு ரொம்ப பயமா..."

"வேணும்னா ஒண்ணு செய்யலாமாமா?" என்றவனை என்னவென்பதைப் போலப் பார்த்தாள் உதயா.

"பேசாம நாளைக்குக் காலைலயே ரெண்டு பேரும் போய் ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கலாம். என்ன பார்க்கற? உண்மையா தான் சொல்றேன். எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் உன்ன என்னவளாக்கிக்கத் துடிக்கிறேன்டா."

"அதைவிடப் பெரிய பாக்கியம் எனக்கும் இந்த உலகத்துல வேறென்ன இருக்க முடியும் விஜய். ஆனாலும் உங்க கல்யாணத்த எந்த அளவுக்கு ஆவலா எல்லாரும்..."

"நம்ம கல்யாணத்தன்னு சொல்லு."

"ஆஹா! கேக்கவே எவ்வளவு ஆனந்தமா இருக்கு."

"என்னடா..." என்று மேலும் நெருங்கியவனிடமிருந்து வெட்கத்துடன் எழுந்து ஓடியே விட்டிருந்தாள் உதயா.

இனம் புரியாத பரவசமொன்று உள்ளமெங்கும் ஊற்றாகப் பாய ஹாலில் இருக்கும் அந்த சோஃபாவில் வந்து அமர்ந்து தன்னைச் சமனப்படுத்திக் கொள்ள முயன்றாள்.

தொடர்ந்து சில வினாடிகளில் ஹாலுக்கு வந்தவனை வெட்கத்தில் சூடாகிச் சிவந்து விட்டிருந்த முகத்துடன் நிமிர்ந்து பார்த்தாள்.

"உதயா..." என்று அழுத்தமான காலடிகளுடன் தன்னை மீண்டும் நெருங்கியனை நெஞ்சு படபடக்கப் பார்த்தபடி, செய்தவறியாது எழுந்து நின்று விட்டிருந்தாள் உதயா.



அதற்குள் மிக அருகில் வந்து கண்கள் சொக்க அவளது முகத்தைத் தனது கைகளில் ஏந்தியிருந்தவன், மீண்டும் அவளை விடுவித்தபோது வெகு நேரம் கடந்து விட்டிருந்தது.

தனது அணைப்பிலிருந்து விடுவிக்கப்பட்டதும் உடல் நடுங்கப் பார்த்தவளிடம், "இனி ரொம்ப நாளைக்கு முடியாதுமா. கூடிய சீக்கிரம் உங்க வீட்ல வந்து பேசறேன்," என்றான்.

# 15

விடுதிக்கு வந்து சேர்ந்திருந்த பிறகும் கூட விஜயமோகன் இன்னும் தன்னருகில் இருப்பதைப் போலவே உணர்ந்து முகம் சிவந்து போய்க் கொண்டிருந்தாள் உதயா.

நல்லவேளையாக வாணிஸ்ரீ அறையில் இல்லாதது அவளுக்கு மிகவும் வசதியாகப் போயிற்று.

விஜயமோகனுடனான இன்பக் கற்பனைகளில் தடையின்றி ஆழ்ந்திருக்க முடிந்தது.

அவன் சொல்வதை வைத்துப் பார்த்தால் தன்னைப் பெண் கேட்டு உடனே வீட்டிற்கு வந்து விடுவான் போலல்லவா இருக்கிறது.

அதுவும் இப்பொழுது காரிலிருந்து இறங்கும் போது

வெட்கத்தில் சூடாகி விட்டிருந்த முகத்தைத் தனது கைகளால் மறைத்துக் கொண்டு விட்டிருந்தாள் உதயா.

இவ்வளவு அன்பையும் இத்தனை நாள் எங்கே மறைத்து வைத்துக் கொண்டிருந்தான்?

திடீரென்று தனது மொபைல் ஒலிக்க, கனவிலிருந்து விடுபட்டாற் போல நடப்பிற்கு வந்திருந்தாள் உதயா. விஜயமோகனாக இருக்குமோ என்று ஓடிச்சென்று எடுத்துப் பார்த்தாள்.

சித்தி!

சித்தி எதற்காகத் தன்னை இந்த நேரத்தில் அழைக்கிறார் என்று நினைத்தவள், உடனே அட்டெண்ட் செய்து காதில் வைத்திருந்தாள்.

"சொல்லுங்க சித்தி."

........

"சரி சித்தி. காலைல வர்றேன்."

மேலும் சில வினாடிகளும் கூட பேசிக் கொண்டிருந்து விட்டு அதற்குப் பிறகே மொபைலை வைத்திருந்தாள் உதயா.

எதற்காகத் தன்னை வீட்டிற்கு அழைக்கிறார்?

சரிதான், அங்கு போனால் தெரிந்து விடப் போகிறது.

ஆனாலும் ஏன் இவ்வளவு அவசரமாக...

ஒருவேளை ஊரில் ஏதாவது...

இல்லை, அப்படியெல்லாம் ஒன்றும் இருக்காது. காலையில் கூட ஊருக்குப் பேசினோமே.

ஏனோ அதற்கு மேல் மற்ற விஷயங்களைத் [illegible] அனாவசியமாகிப் போய் விட்டிருந்தது உதயாவிற்கு.



அந்த அளவிற்கு விஜயமோகன் வந்து நெஞ்சு முழுக்க எண்ணங்களாக வியாபித்திருந்தான்.

மீண்டும் மொபைல் ஒலிக்க, எடுத்துப் பார்த்தவளுக்கு உள்ளம் படபடவென்று அடித்துக் கொண்டது.

உடனே அட்டெண்ட் செய்து காதில் வைத்திருந்தாள்.

"விஜய்..."

.........

"ம்."

.......

"ஆமாம்."

அதற்குப் பிறகும் வெகுநேரம் கழித்தே பேசி முடித்து விட்டுப் போனை வைத்திருந்தாள் உதயா.

அதாவது விஜயமோகன் வைக்க விட்டிருந்தான்.

வாணிக்கா மட்டும் இருந்திருந்தால் என்று நினைத்தவளுக்கு அவளையறியாமலேயே சிரிப்பு வந்துவிட்டிருந்தது.

எந்நேரமும் மொபைலில் பேசி உயிரை வாங்கிக் கொண்டு என்று ஏற்கெனவே அறையில் முன்பு இருந்தவர்களைத் திட்டியவர் ஆயிற்றே என்று நினைக்கத் தோன்றியது.

அன்று காலையில் வழக்கத்தை விடவும் சற்று சீக்கிரத்திலேயே எழுந்து கொண்டு விட்டிருந்தாள் உதயா.

சீக்கிரமாகக் கிளம்பினால் தான் சித்தி வீட்டுக்குப் போய்விட்டு மீண்டும் வழக்கமான நேரத்திற்குள்

வேலைக்கு வந்து சேர முடியுமென்று குளியலறைக்குள் சென்றாள்.

என்றுமில்லாத வழக்கமாக அப்பொழுதே வேலைக் குச் சென்றாக வேண்டும் போலப் பரபரத்த மனதை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டாள்.

ஆறு மனிக்குள் குளித்துக் கிளம்பியே விட்டிருந்த உதயா, அடுத்த அரை மணி நேரத்தில் சித்தியின் வீட்டைச் சென்றடைந்திருந்தாள்.

முதலில் யாராவது எழுந்தாவது இருப்பார்களோ என் னவோ என்று நினைத்துக் கொண்டே காலனிகளை விட்டவளுக்குத் தனது சித்தியின் குரல் தான் முதலில் கேட்டது.

''சரிங்க. நான் சொல்லிட்றேன்.''

ஏன் சித்தி இப்படிப் பரபரப்பாகப் பேசுகிறார்?

ஒருவேளை தனக்குத்தான் அப்படித் தோன்றுகிறதோ!

''நம்ம குடும்ப மானத்தக் காத்துல பறக்க விடணும்னே அவ வந்திருக்கும்போது நீ என்னத்தச் சொல்லி என்ன!

.........

அதற்குப் பிறகு சில வினாடிகள் அமைதியாகப் போக யாரைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்களென்றே உதயாவிற்குப் புரியவில்லை.

விட்டிருந்தால் அடுத்த சில வினாடிகளில் வீட்டுக் குள்ளும் சென்றிருப்பாள்.

''சும்மாவா, வரும்போது சோத்துக்கே வழியில்லாத மாதிரி எப்படி வந்தா, ஆனா இப்பப்பாரு காலங்கா பணக்காரக் குடும்பங்கல்ல இருந்து வர்ற சி



பொண்ணுங்க எல்லாரும் கூட அவகிட்ட தோத்துப் போயிடணும் போல அல்லவா இருக்கு.''

''மெதுவாப் பேசுங்களே...''

''எதுக்குடி மெதுவாப் பேசணும்? இதுக்குத் தான் அந்தம்மா உன் அக்கா தன் மகள இங்க அனுப்பி வெச் சிருக்காங்களாக்கும்? இப்படியெல்லாம் பொழப்ப நடத்தறதுக்கு எங்கயாவது போய்ச் சாகலாம்.''

''தயவுசெஞ்சு என் அக்காவப் பத்தி எதுவும் சொல்...''

''என்னடி, இருக்கறதச் சொன்னா உடம்பு எரியுதோ? அப்பப்பா! ஊர்ல இருந்து வந்ததுக்கப்புறம் எப்படியெல் லாம் மாறியிருக்கா, இனி எவங் கூடவெல்லாம் போய்...''

''ப்ளீஸ் மெதுவாப் பேசுங்களேன்.''

''எனக்கு வர்ற கோபத்துல உன்னை அறைஞ்சு தள் ளிடுவேன். என்ன பண்ணுவியோ, ஏது பண்ணுவியோ, அதெல்லாம் எனக்குத் தெரியாது. உன் அக்கா மகள முதல் வேலையா இங்கிருந்து அனுப்பியாகணும்.''

''கடவுளே! நான் என்ன செய்வேன்...''

''ஏய், நீ எதுக்கு இப்ப ஒப்பாரி வெக்கற?''

''இதெல்லாம் தெரிஞ்சதுக்கப்புறமும் அவள இங்க வெச்சுட்டிருந்து, இத்தன நாளா நான் கட்டிக் காப்பாத்தி வெச்சிருக்கற மானம் மரியாதை எல்லாத்தையும் காத்துல விடச் சொல்றியா? ஆனா அதையெல்லாத்தையும் தான் உன் அக்கா மக பறக்க விட்டுட்டாளே. என்ன இப்ப இனிமேலாவது நாம சுதாரிச்சுட்டா தொடர்ந்து வரப் போற கேவலம் கொஞ்சம் குறையும்.''

............

"ஒன்னு இவள நீ அனுப்பு. இல்லேன்னா ஊரல இருக்கற உன் அக்காவக் கூப்புட்டு அந்தம்மா தன் மகள வளத்து வெச்சிருக்கற லட்சணத்துக்கு நாக்கப் புடுங்கிக்கற மாதிரி நான் கேள்வி கேக்க வேண்டியதாயிடும்."

"ஐயோ! வேண்டாம், நானே உதயாவ அனுப்பி..."

"உன் அக்காவும் இப்படித்தான் தப்பான வழில போய்த் தன் பொண்ணுங்கள வளத்திருப்பா. அத னாலதான் அந்தம்மா பொண்ணுங்களுக்கும் அதே புத்தி."

கணவனின் வார்த்தைகளைக் கேட்டுத் துடித்துப் போய் விட்டிருந்த வனஜா, "ஐயோ! போதுமே..." என்று தனது காதுகளைப் பொத்திக் கொண்டாள்.

"அடுத்த வேளை சோத்துக்கே வழியில்லாத அவளுக்கு விஜயமோகன் கேக்குதா? ஆனாலும் உன் அக்கா மக அக்கா மகதான்டி. புடிச்சாலும் புடிச்சா புளியங் கொம்பா அல்ல புடிச்சிருக்கா?"

.........

"பாவமேன்னு வீட்டுக்குள்ள விட்ட பாவத்துக்கு மாயாவோட பேரண்ட்ஸ் என்னக் கூப்புட்டுக் கேள்வி கேக்கற மாதிரி பண்ணி வெச்சுட்டானே. எவளெவளோ உடம்பு திமிரெடுத்துப் பண்ற தப்புக்கெல்லாம் நான் போய்க் கையக்கட்டி நின்னு பதில் சொல்லணும்னு எனக்கென்ன தலவிதியா?"

"காலங்காலமா விஜயமோகன் தான் எங்க வீட்டு மாப்பிள்ளைன்னு இருக்கோம். அவரக் கன்வின்ஸ்



பண்றது எப்படின்னு எங்களுக்குத் தெரியும். ஏன் விஜயமோகன விடப் பலமடங்கு வசதி வாய்ப்புகள்ல உயர்ந்தவங்க அவங்க.

"அவங்க நினைச்சா எத வேணும்னாலும் சாதிப் பாங்க. எங்க வீட்டுப் பொண்ணோட சந்தோஷம்தான் எங்களுக்கு முக்கியம். உங்க வீட்ல நீங்க கொண்டு வந்து வெச்சிருக்கீங்களே ஒரு..."

"வேண்டாம். அவங்க சொன்ன வார்த்தைகளையெல் லாம் அப்படியே சொல்லறதப் பத்தி என்னால நினைச் சுக்கூடப் பாக்க முடியல..."

"பாவம், அவங்களுக்கு அவங்களோட ஆதங்கம், அதுவும் கடைசியா அந்தம்மா என் கையப் புடிச்சுட்டு அழுதுட்டாங்க. விஜயமோகன் மட்டும் என்ன மறுத்துட் டான்னா அதுக்கப்புறம் நீங்க யாரும் என்ன உயிரோட கூடப் பாக்க முடியாதுன்னு மாயா சொல்லி அழு தாளாம்...

"உங்க குடும்பத்துக்குள்ள எப்படி இந்த மாதிரி ஒருத் தின்னு கேக்கும்போது எனக்கு அப்படியே பூமிக்குள் ளயே போயிட மாட்டோமான்னு இருந்தது."

"அதெல்லாம் பாக்கவும் கொஞ்ச, நல்லா தான இருக்கா. விஜயமோகன் மாதிரி ஊர் உலகத்துல இன்னும் எத்தன பேர் கிடைக்க மாட்டாங்க. ஆம்பளைங்கள மயலல விழ வெக்கற கலையத்தான் அந்த உதயாவா அவளுக்கு ரொம்ப நல்லாவே தெரியுமே. என்ன பாக்கற, இதையெல்லாம் நான் சொல்லல. மாயாவோட பேரண்ட்ஸ் சொன்னாங்க. இன்னும் என்னென்னவோ..."

"ஆனா ஒண்ணு. அந்த மாயா எதையாவது பண்ணிக் கிட்டா அதுக்கப்புறம் அவங்க பேரண்ட்ஸ் கண்டிப்பா

என்ன விட மாட்டாங்க. ஏற்கெனவே சொன்னோமேன்னு என்ன ஜெயிலுக்குள்ள தள்ளக் கூட அவங்க துணி வாங்க. அப்புறம் எல்லாமே முடிஞ்சு போயிடும்.

"கடைசியா இன்னொரு முறையும் சொல்றேன். உன் அக்கா மக இனி இந்த வீட்டு வாசப்படியக் கூட மிதிக்கக் கூடாது. வந்தா மூட்ட முடிச்சக் கட்டிட்டு சொல்லிக்காம ஓடிடுன்னு சொல்லிடு. முக்கியமா என் முகத்துல படக் கூடாது. சொல்லிட்டேன்.

"என்னடி, நான் பாட்டுக்குப் பேசிட்டே இருக்கே..."

"சரிங்க."

"ஆமா, இல்லன்னா கழுத்தப் புடிச்சு அப்புறம் நான் உன்ன வெளிய தள்ள வேண்டியதாயிடும். சொல்லிட்டேன்."

"ஆனா இனி நான் எப்படிப் போய் விஜயமோகன் முகத்துல விழிப்பேன்? இனி அவருகிட்ட என்னென்ன வித்தையெல்லாம் காட்டினாளோ? இல்லன்னா தன் வேலையத் தவிர வேற எதுக்காகவும் ரெண்டு நிமிஷத்தக் கூட செலவு பண்ணாத அந்தத் தம்பி ஏன் இவளக் கூட்டிட்டு நகைக்கடை வரைக்கும் போகப் போறார்?"

"போச்சு எல்லாம் போச்சு! ஆனா இன்னொன்னும் சொல்றேன். நல்லாக் கேட்டுக்கோ. இனி எவனெவன் கூடவெல்லாம் போய் எப்படி எப்படியெல்லாம் பழகினாளோ இன்னுங் கொஞ்ச நாள்ல வயித்துல புள்ளையோட வந்து நின்னாலும் கூட நிப்பா. அதுக்குள்ள துரத்திடு..."

"இன்னும் எங்கெங்க இருந்தெல்லாம் பிரச்சன கிளம்பும்னு தெரியலையே... சரி சரி. பசங்க எழற நேரமாச்சு



இந்தக் கேவலமெல்லாம் அவங்களுக்குத் தெரிய வேண்டாம். போ. போய் வேலையப் பாரு."

நிற்க முடியாத அளவிற்கு உடலும் மனமும் சோர்ந்து போய் விட்டிருக்க, அப்படியே சுவரில் சாய்ந்து கொண்டாள் உதயா.

என்னென்ன வார்த்தைகள்! அப்பப்பா!

தன்னால் இப்பொழுது சித்திக்கும் அல்லவா பிரச்சனை போலிருக்கிறது.

பேசாமல் அப்படியே செல்லத் திரும்பி விட்டிருந்தவள், சித்தியிடம் ஒரு வார்த்தை சொல்ல வேண்டுமே என்று மீண்டும் நின்று விட்டிருந்தாள்.

ஆனால் எப்படி உள்ளே...

"உதயா..."

பின் பக்கத்திலிருந்து வாசல் தெளித்துக் கோலம் போடுவதற்காக வந்திருந்த வனஜா, அங்கு நின்றிருந்த உதயாவைப் பார்த்துவிட்டு, "எப்பமா வந்த?" என்று கேட்டார்.

"ரொம்ப நேரமாச்சு சித்தி. ஸாரி, எல்லாத்தையும் கேக்க நேர்ந்துடுச்சு. பாவம், என்னால உங்களுக்கு..."

அதே நேரம் வனஜாவின் பார்வை உதயாவின் கைகளிலிருந்த புதுத் தங்க வளையல்களில் நிலைத்திருந்தது.

அதற்குப் பிறகு தான் உதயாவும் அதைக் கவனித்தாள்.

கணவன் சொன்னது போலவே புது நகை.

அப்படியானால்...

அவர் இல்லாத எதையுமோ அல்லது மிகைப்படுத்தியோ சொல்லியிருக்கவில்லை...

"அடிப்பாவி! எங்க குடி கெடுக்கறதுக்காகவே வந்தியா?"

............

"அவரு சொல்லும் போதெல்லாம் நான் துளியும் நம்பலையே. உன் கைல இருக்கற வளையலோட பருமனப் பாத்தா குறைஞ்சது ஒரு லட்சத்துக்கும் மேலயே ஆகும் போலிருக்கே.

"அவ்வளவு பணம் எங்கிருந்துடி வந்தது?

"போடி, போய்டு. எம் முகத்துலயே இனிமேல் விழிக்காத. அப்புறம் எனக்கு வர்ற வெறில நானே உன்னக் கொன்னாலும் கொன்னுடுவேன். போடி, போய்த் தொல."

தான் எதைச் சொன்னாலும் அதைக் காது கொடுத்துக் கேட்கும் நிலையில் சித்தி இல்லை யென்பது புரிந்தது.

வேண்டாம். இனியும் தொடர்ந்து நின்று அவளை மேலும் சிரமப்படுத்த வேண்டாமென்று ஒரு அடி எடுத்து வைத்திருந்தாள் உதயா.

"ஏய், நில்லுடி."

சித்தியின் அதட்டலில் உடனே நின்றிருந்தாள் உதயா.

"எங்கடி போற?"

"ரூமுக்கு..."

"என்னது ரூமுக்கா? எனக்கு வர்ற கோபத்துல அப்படியே உன்ன..." என வெறி கொண்டாற் போல இரண்டு அடி எடுத்து வைத்திருந்தவர், "இப்படியே நிக்காம



ஊருக்குத் தொலைஞ்சுடு. போடி. போ, என் அக்காவையும் சேத்து முழுங்கிட்டு சந்தோஷமா இரு போ.

"சை! என்ன மாதிரி முகத்த வெச்சுக்கிட்டு... இனிமேல் இந்த ஜென்மத்துல இந்த வீட்டுக்குள்ள வந்துடாத. போ... போயிடு."

அங்கிருந்து கிளம்பி விட்டிருந்தவளுக்குச் சுற்றுப்புறம் எதுவுமே மனதில் பதிந்திருக்கவில்லை.

எல்லையற்ற அதிர்ச்சி கண்ணீருக்கும் இடம் கொடுத்திருக்கவில்லை.

கால் போன போக்கில் நடந்தவள், திடீரென்று ஏதோ தோன்றியவளாகக் கைப்பையைத் திறந்து பார்த்தாள்.

தான் வாங்கியிருந்த பத்தாயிரத்தை விஜயமோகனுக்குக் கொடுத்து விட்டது போக, மீதிச் சம்பளப் பணம் முழுவதும் கைப்பையில்தான் இருந்தது.

நல்ல வேளையாக இப்படியே ஊருக்குச் செல்வதற்குப் பணமிருக்கிறது.

திடீரென்று அங்கே போய் நின்றால்...

முவென்று வர, இப்பொழுது அழுகை வந்துவிடும் போல இருந்தது.

சுற்றுப்புறம் உணர்ந்து தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

திடீரென்று தீப்பட்டு விட்டாற் போலத் திகைத்து நின்று விட்டிருந்தாள் உதயா.

கடவுளே! இந்த வளையல், இதையெப்படி விஜயமோகனிடம் கொடுப்பது?

ஏனோ அவனைச் சென்று பார்ப்பதைப் பற்றி உத
யாவால் கற்பனைகூடச் செய்து பார்க்க முடியவில்லை.

அப்படியே உடலெல்லாம் நடுங்கிப் போனது.

வேண்டாம், நம்மால் யாருக்கும் சிரமம் வேண்டாம்.

விஜயமோகனைப் பிரிந்து செல்வதென்பது தானே தனது உடலை இரண்டாக வெட்டிக் கொள்வது போல என்றாலும், இப்பொழுது தான் இருக்கும் நிலைக்கு அதைத் தவிர வேறு வழியே இல்லை.

ஆனால் அவன் தன்னைத் தேடுவானே, சித்தி வீட்டிலும் கூட விசாரிக்கலாமே...

ஏனோ அந்த எண்ண அலைகள் இருக்கிற கொஞ்ச நஞ்ச வலுவையும் அழித்து விடும் போலத் தோன்ற பேசாமல் தொடர்ந்து நடக்கத் தொடங்கி விட்டிருந்தா

அதுதானே, நாய்க்கு முழுத் தேங்காய் ஒட்டு என்பார்கள்.

அதிலும் தன்னைப் போன்ற துரதிர்ஷ்டசாலிகளுக்கு

திடீரென்று தாயின் நினைவு வந்து விட்டிருந்தது உதயாவிற்கு.

ஐயோ அம்மா, உங்களைப் போய் என்னவெல்லாம் சொல்லி விட்டார்கள்.

அதற்குக் காரணமும் நானே ஆகி விட்டேனே.

இல்லையம்மா, உங்கள் மகள் அந்த அளவிற்கெல்லாம் மோசமானவள் கிடையவே கிடையாது.

வேலைக்கென்று வந்துவிட்டு மனதை அலைபாய விட்டது என் தவறுதான் அம்மா.



உங்களைப் போய் என்ன வார்த்தையெல்லாம்... இந்தப் பாவி மகளை உங்களால் இந்த ஜென்மத்தில் மன்னித்துவிட முடியுமா அம்மா?

தவறான வழியில் சென்று எங்களை வளர்த்ததாக...

உங்களுக்குச் சோறு தண்ணீர் இல்லாவிட்டாலும் எங்கள் இருவருக்காகவும் உழைத்து, உழைத்து ஓடாகிப் போனீர்களே அம்மா.

யோசிக்காமல் பேசுபவர்களுக்கு உங்களைப் பற்றி என்ன தெரியும்?

காலி வயிற்றுடன் நான் சாப்பிட்டாயிற்று என்று சிரித்துக் கொண்டே எங்களுக்கு ஊட்டிவிட்டுப் படிக்க வைத்து ஆளாக்கினீர்களே அம்மா.

அந்த மகளால் உங்களுக்கு இன்று கிடைத்த வெகுமதி என்னவென்று தெரியுமா?

உள்ளம் நடுங்க வழியில் அப்படியே நின்று விட்டிருந்தாள் உதயா.

ஒருவேளை சித்தப்பா, அல்லது சித்தியே கூடத் தன் அம்மாவுக்குப் போன் செய்து விடுவார்களோ?

தான் கேட்க நேர்ந்ததையெல்லாம் தனது தாய் கேட்க நேர்ந்தால், தன்மானத்துடன் தங்களை உயிரைக் கொடுத்து வளர்த்த அந்தத் தாயின் உடலில் அதற்கு மேலும் ஒரு நொடி உயிர் தங்குமா?

ஐயோ, அம்மா! என்னால் ஒன்றுமே முடியவில்லையே. உங்களுக்கு இந்தக் கேவலமெல்லாம் தெரியவே கூடாதே. கடவுளே! அதற்கு நீதான் துணை புரிய வேண்டும்.

உங்களை உருக்கிக் கொண்டு எங்களை உருவாக்கிய உங்களுக்கு என்னால் மகுடம் சூட்டப்படா விட்டாலும் பரவாயில்லை. முடிவைக் கொடுத்து விட மாட்டேன் அம்மா. கண்டிப்பாக மாட்டேன்.

## 16.

எப்படி ஊருக்கு வந்து சேர்ந்தாள் என்று மட்டும் யாரா வது கேட்டிருந்தால், சத்தியமாக உதயாவால் சொல்ல முடிந்திருக்காது.

அனிச்சைச் செயலாக அனைத்துமே சரியாக நடந் திருக்கிறது. இல்லையென்றால் அவள் எப்படி வீடு வந்து சேர்ந்திருக்க முடியும்?

கசகசவென்று இருந்தால் தூக்கம் வராதென்று எப்பொழுதும் மாலையிலும் குளிக்கும் வழக்கமுடைய அம்மா, அப்பொழுது தான் குளித்து விட்டு வந்திருப்பாள் போல. கொடியில் அவரது ஈரத் துணிகளைக் காயப் போட்டுக் கொண்டிருப்பது தெரிந்தது.

யதேச்சையாகத் திரும்பிய வத்சலாவால் தனது கண்களையே நம்ப முடிந்திருக்கவில்லை.

உதயா?

ஏன், எதற்காகத் திடீரென்று வந்திருக்கிறாள்.

பெற்ற மனம் வினாடிகளுக்குள் எதையெதையோ எண்ணிக் கலங்கிப் போனது.



அதற்குள் அருகிலேயே வந்து விட்டிருந்த மகளை, "உதயா, வாம்மா!" என்று அழைத்தார்.

பிரதிபலன் பாராத தாயின் அன்பு, பட்டிருந்த துன்பங் களுக்கெல்லாம் மருந்தாக இருக்க, "அம்மா..." என்று அழைத்தாள்.

"வாடாம்மா, உள்ள வா."

..........

பேயறைந்தாற் போலிருந்த மகளின் முகம் நெஞ்சைக் கசக்கி விட்டிருக்க,

"என்னடாம்மா, ஏன் ஒரு மாதிரி..."

"வா, இங்க வந்து உக்காரு." என்று மகளைக் கட்டிலின் ஓரத்தில் அமர வைத்துவிட்டுத் தானும் அருகில் அமர்ந் தார்.

தாயின் பரிவு அதுவரை கட்டுப்படுத்தி வைத்திருந்த வற்றையெல்லாம் பீறிட்டு எழச் செய்துவிட, அப்படியே தாயின் மடியில் விழுந்து கதறி விட்டிருந்தாள் உதயா.

என்னவாக இருக்குமென்று பெற்ற உள்ளம் பதறிப் போய் விட, அழுது ஓய்ந்துவிட்டு மகள் தானாகவே சொல்லட்டுமென்று அவளது முதுகை வருடிக் கொடுத்த வாறு அமர்ந்து விட்டிருந்தார்.

சில நிமிடங்களில் ஓரளவு தன்னைச் சமாளித்துக் கொண்டு விட்டிருந்த உதயாவும் எழுந்து அமர்ந்திருந் தாள்.

"என்னமா..."

"நான் இனிமேல் எங்கயும் வேலைக்கெல்லாம் போக மாட்டேன்மா. உங்களையெல்லாம் பிரிஞ்சு என்னால

இருக்கவே முடியாது. இனிமேல் எப்பவும் நான் உங்க கூடவே இருந்துக்கறேன்.''

''சரிதான் விடு. ஆமா, கடைசியா எப்ப சாப்பிட்ட?''

நினைவு வரவில்லை உதயாவிற்கு.

''முதல்ல ஏதாவது குடி. இதோ வர்றேன்,'' என்று வத்சலா எழுந்து சென்றிருக்க, பிரமை பிடித்தாற் போன்று அப்படியே அமர்ந்து விட்டிருந்தாள் உதயா.

மகளின் நிலை, கடவுளே! வயதுப் பெண்ணைத் தனியாக வேலைக்கு அனுப்பியது தவறோ என்றுதாயின் மனதைக் கலங்கடித்து விட்டிருந்தது.

''இந்தாம்மா ஹார்லிக்ஸ், குடி.''

''வேண்டாம்மா.''

''உதயா, அப்புறம் கோபம் வந்து....''

தாயின் அதட்டலில் ஹார்லிக்ஸ் டம்ளரை வாங்கிக் கொள்வதற்காகத் தன்னையறியாமலேயே கையை நீட்டியிருந்தாள் உதயா.

குடித்து முடித்ததும் தாய் சொன்னது போலச் சென்று சுடுநீரில் குளித்து விட்டு வந்தாள்.

சிறிது நேரத்தில் வீடு வந்து சேர்ந்த வித்யாவிற்குத் தனது அக்காவை அங்கு கண்டதில் மிகவும் ஆச்சரியமாகிப் போயிற்று.

''அக்கா...'' என்று அருகில் சென்றாள்.

''வா வித்யா.''

''என்னக்கா, இதென்ன திடீர்னு...''

''ஆமா, வேல புடிக்கல. வந்துட்டேன்.''



அப்படிச் சொன்ன தனது அக்காவை அவள் அதிர்ச்சியுடன் நிமிர்ந்து பார்க்க, ''வித்யா, வந்துட்டயாமா? சரி, ரெண்டு பேரும் பேசிட்டிருங்க. நான் கோவில் வரைக்கும் போய்ட்டு வந்துடறேன்,'' என்று கூடையுடன் நகர்ந்தார் வத்சலா.

இதென்ன இப்படிச் சொல்கிறாளென்று வித்யாவின் மனம் பதைத்தது.

''சரிக்கா. அதையெல்லாம் அப்புறம் பாக்கலாம், முதல்ல நீ சாப்டியா?''

உதயா இல்லையென்பது போலத் தலையை ஆட்ட, ''சரி, உக்காந்திரு. நான் போய்த் தோசைக்குக் கல் வைக்கறேன்,'' என்று நகர்ந்தாள் வித்யா.

ஏதேதோ எண்ணங்கள் அலைமோத, அப்படியே அமர்ந்து விட்டிருந்தாள் உதயா.

தனது சித்தப்பா பேசிய வார்த்தைகளெல்லாம் அப்படியே கத்தி கொண்டு நெஞ்சிலேயே கீறினாற் போல பச்சை ரணமாக வலியை ஏற்படுத்தின.

கண்ணோரம் குடாவது தெரிய, உதட்டைக் கடித்து அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

இப்பொழுது வேண்டாம் மனமே, சற்றுப் பொறு என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள்.

ஆனாலும் என்ன முயன்றும் துளி கூட மனம் ஆற மறுத்தது.

செருப்பால் அடித்துத் துரத்தி விட்டிருந்தாலும் கூட இந்த அளவிற்கு வலிக்குமா என்று நினைக்க வைத்தது.

அப்பப்பா! என்னவெல்லாம் சொல்லி விட்டார்கள், அதிலும் தன்னைப் போய்.

திடீரென்று நினைவு வந்தவளாகத் தனது ஹேண்ட் பேக்கை எடுத்துப் பார்த்தவள், வளையல்களும் மொபைல் போனும் உள்ளே பத்திரமாக இருப்பதைக் கண்டாள்.

ஏதோ தோன்ற ஹேண்ட்பேக்கைக் கொண்டு போய் உள் அறையில் இருந்த பீரோவில் தனது துணிகளுக்கிடையே வைத்துவிட்டு வந்தாள்.

மொபைல் போன் ஆஃப் செய்யப்பட்டிருந்ததை மனம் கனக்க நினைத்துப் பார்த்தாள். விஜயமோகன் அழைத்திருப்பானோ?

சரிதான். இனிமேல் அவனுக்கும், நமக்கும் என்ன இருக்கிறது?

ஏனோ கட்டுப்படுத்திக் கொள்ளவே முடியாத அளவிற்கு அழுகை வந்து விட்டிருக்க, குளியலறைக்குச் சென்று கதவைத் தாழிட்டுக் கொண்டு கதறித் தீர்த்தாள்.

சில நிமிடங்களில் தன்னை ஓரளவு சமாளித்துக் கொண்டு, அவள் வெளியே வரவும், ''வாக்கா, சாப்பிடலாம்,'' என்று தங்கை அழைக்கவும் சரியாக இருந்தது.

.......

''என்னக்கா?''

''ஒன்னுமில்லயே. அம்மா வரட்டுமே வித்யா. ஒன்னா சாப்பிடலாம்.''

''ம்கூம், அம்மா எங்க மருந்து சாப்....''

ஏதோ சொல்ல வந்துவிட்டுப் பிறகு தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்ட தங்கையைப் பார்த்தாள் உத்ரா.



''என்னது மருந்தா? அம்மாவுக்கு உடம்புக்கு என்ன?''

''ஒன்னுமில்லக்கா. லேசா முதுகுவலி. வேறொன்னுமில்ல. ஒரு ஏழெட்டு வருஷத்துக்கு முன்னாடி ஒரு தடவ வந்ததே அந்த மாதிரி...''

''எப்பிருந்து இப்படி?''

''ரெண்டு வாரமா.''

''அந்த வலியோடவேதான் சென்னைக்கு வந்தாங்களா?''

''ஆமாக்கா. லேசாதான். பரவாயில்லன்னு வந்தது தான். அதுக்கப்புறம் அங்க வந்துட்டு வந்ததுக்கப்புறம் வலி தாங்க முடியாம ரொம்பவும் துடிச்சுப் போய்ட்டாங்க...''

''டாக்டர்ஸ் என்ன சொல்றாங்க?''

''டவுன்ல போய் பெரிய டாக்டரைத் தான் போன வாரம் பார்த்துட்டு வந்தோம்கா. அவங்க முப்பது வருஷத்துக்கும் மேல உக்காந்து தைச்சுட்டே இருந்ததுதான் காரணம்னு சொல்றாங்க. நல்ல ஆகாரம் சத்தானதா எடுத்திருந்தா இந்த அளவுக்கு வந்திருக்காதுன்னும் சொன்னாங்க. அப்புறம் கரெக்டான சேர் போடாம அம்மா உக்காந்து தைச்ச ஸ்டூல் அது இதுன்னு இவங்க இன்னும் ஏதேதோ சொல்றாங்க...''

..........

''அம்மாவா, நிறைய நாட்கள் இருபது மணி நேரங்கள் வரைக்கும் கூட உக்காந்து தைச்சிருக்காங்களே.''

.......

''அது எப்படியோ. ஆனா இனிமேல் ஒரு துளி கூட ஸ்ட்ரெயின் பண்ணிக்கவே கூடாதுன்னு சொல்லிட்டாங்க...''

..........

''என்னக்கா?''

''இப்ப வலி எப்படியிருக்கு?''

''அது இருந்துட்டேதான் இருக்கு. ரொம்பவும் வலி அதிகமாகும் போது தான், பாவம்! கண்ல தண்ணி வர அளவுக்குத் துடிச்சுப் போயிடறாங்க.''

அம்மா என்று மீண்டும் கண்கள் கரித்துக் கொண்டு வந்தது உதயாவிற்கு. இந்த அம்மாவைப் போய்த் தன் நான வழியில் அது இதென்று என்னவெல்லாம் சொல்லி விட்டார்கள்.

''அக்கா, என்னக்கா?''

''அம்மா பாவம், வித்...''

''பரவாயில்ல. கவலப்படாம இருக்கா. ஒரு ஏழெட்டு வருஷத்துக்கு முன்னாடி முழுமையா குணமான மாதிரி இப்பவும் ஆயிடும். நீ சாப்புடுக்கா...''

தங்கை கட்டாயப்படுத்திக் கையில் திணித்திருந்த ப்ளேட்டைப் பார்த்தாள் உதயா.

தனக்கு இப்பொழுது இது ஒன்றுதான் கேடா...

''சாப்புடுக்கா.''

''உனக்கு?''

''இதோ எடுத்துட்டு வர்றேன்.''

சில விநாடிகளில் தானும் டிபன் ப்ளேட்டுடன் வந்து அமர்ந்த தங்கையைப் பார்த்தாள் உதயா.

''ஆனா இனிமேலும் ஸ்ட்ரெயின் பண்ணி வலி அதிகம் பண்ணிக்கிட்டா அப்புறம் ஆபரேஷன் தா...



...ஒரே தீர்வாம். அதுக்கு லட்சக் கணக்குல செலவாகு...மாம்கா.''

தங்கையின் ப்ளேட்டில் தோசைக்குக் குழம்பிற்குப் பதிலாக சர்க்கரை இருக்க, அதைக் குறிப்பிட்டுக் கேட்டாள் உதயா.

''ஆமாக்கா, பின்ன மூனு வேளைக்கும் ஒரே குழம்புன்னா தீராதா? அதோட, ஏற்கெனவே ரெண்டு நேரமும் சாப்பிட்டு அந்தக் குழம்பப் பாத்தாலே பிடிக்கல!'' என்றாள்.

''ஏன் வித்யா இப்படி?''

''ரெண்டு காரணம்கா. ஒன்னு, அம்மாவுக்குக் கஷ்டத்தக் குடுக்கக் கூடாதுன்னு, அவங்க உக்காந்து சொல்லச் சொல்ல நானே செஞ்சேன். அதனால அதுக்கு மேல என்னால செய்ய முடியல. ரெண்டாவது முக்கியமான காரணம் நிதி நிலமை.''

''என்னக்கா, அப்படியே உக்காந்திருக்க. சாப்புடு...''

''ஆமா, இப்ப அம்மாவும் தைக்கறத சுத்தமா விட்டாச்சுன்னு சொல்ற. அப்புறம் செலவுக்கெல்லாம்...''

''அதான் அம்மாவோட மோதிரமொன்னு இருந்ததே, ரொம்பவும் வளைஞ்சு போய், அத வித்துதான் அந்தப் பணத்துல குடும்பம் ஓடிட்டிருக்கு.''

.........

''அது கூட இன்னும் ரெண்டு நாளைக்குத்தான் தாக்குப் பிடிக்கும்கா. அதுக்கப்புறம் அரிசி, பருப்புன்னு ஒன்னுமே இருக்காது...

''ஐயோ ஸாரிக்கா. பாவம்! நீ எப்ப சாப்பிட்டயோ, சாப்பிடுக்கா...''

''பசிக்கல வித்யா,'' என்றவளைக் கட்டாயப்படுத்திச் சாப்பிடச் செய்தாள் வித்யா.

''அது சரி, பலநாள் சாப்பிடாத மாதிரி பாக்கவே எப் படியிருக்க தெரியுமா?''

''வீட்ல யாரு? அக்கா...'' என்று யாரோ அழைக்க, பெண்கள் இருவருமே திரும்பிப் பார்த்தனர்.

''அட உதயாவா!''

''வாங்க, அப்புறம் எப்படியிருக்கீங்க?''

''எனக்கென்னமா, எப்பவுமே பிச்சக்காரப் பொழப்பு தான். சரி, அம்மா இருக்காங்களா, பாத்துட்டுப் போலாம்னு வந்தேன்.''

''வாங்க, உக்காருங்க,'' என்று உதயா சொல்லிக் கொண் டிருக்கும் போதே, ''அம்மா கோவிலுக்குப் போயிருக் காங்க,'' என்றாள் வித்யா.

''சரி, அப்ப வட்டிப் பணத்துக்குக் காலைல வர்றேன் அம்மாகிட்ட சொல்லிடுங்க,'' என்று நகரப்போன பெண் மணியை அழைத்தாள் உதயா.

தங்கையிடம் விவரம் கேட்க, தங்களுடைய தாய்க்கு உடல்நலம் சரியில்லாத போது ஏதோ ஒரு பெரிய ஸ்கேன் எடுக்க வேண்டுமென்று கடனாக அந்த பெண்மணியிடம் ஐந்தாயிரம் பணம் வாங்கியிருந்தது தெரிந்தது. அதற்கு முதல் வார வட்டி வசூல் செய்வதற் காக அந்த அம்மா இப்பொழுது வந்திருப்பதும்.

''ஒரு நிமிஷம்,'' என்று எழுந்து உள்ளே சென்ற உதயா, சில வினாடிகளில் பணத்தோடு திரும்பி வந்தாள்.



''அவசரத்துக்கு உதவினதுக்கு ரொம்ப நன்றி!'' என்று அந்தப் பெண்மணியின் கைகளில் அந்த ஒரு வார வட்டியோடு அசலையும் சேர்த்துக் கொடுத்தாள்.

''அட, வட்டி மட்டும் போதும்மா, நீ என்ன இப்படி...''

''பரவாயில்ல. இப்ப பணமிருக்கு. அதான், வாங்கிக் கோங்க.''

''அப்படியே அந்தப் பெரிய மகராசி மாதிரியே பொண் ணுங்களும்! பெரிசா பணம் இல்லேன்னா என்னமா? எந்த மாதிரியான பெரிய குணம்!'' என்று தாங்கள் பெரிதாக எதையோ செய்துவிட்டதைப் போல சிலாகித்துக் கொண்டே சென்ற அந்தப் பெண்மணியைப் பெண்கள் இருவரும் புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருந்து விட்டு மீண்டும் சாப்பிட அமர்ந்தனர்.

''அப்பாடா! எப்படியோ ஒரு பெரிய பிரச்சனை தீர்ந்த க்கா,'' என்ற தங்கையிடம், ''இன்னும் வேற யாருக் காவது...'' என்று தயக்கத்துடன் கேட்டாள் உதயா.

''என்னக்கா, அம்மாவோட குணம் தெரியாதா உனக்கு? இதுவே நீ இருக்கற தைரியத்துல அம்மாவுக்கே தெரி யாம நான் போய் வாங்கிட்டு வந்தது. அதுக்கப்புறம் அம்மாகிட்ட அதுக்காக நான் வாங்கின திட்டும் எனக்குத் தான் தெரி.....

''சரி சரி, சாப்புடு. குடுத்ததே மூணு தோச. அதுலயும் பாதியா...''

''போதும் வித்யா, தயவு செஞ்சு கம்பல் பண்ணாத.''

சிறிது நேரத்தில் வீட்டிற்குள் வந்த தாயிடம், ''இப்ப உங்களுக்கு வலி எப்படியிருக்குமா?'' என்று அக்கறை யுடன் கேட்டாள்.

''நேத்து இருந்ததுக்கு இப்ப சுத்தமாவே சரியாயிடுச்சுன்னு கூட சொல்லலாம் உதயா. ட்ரேவலிங், அப்புறம் சரியா உக்கார முடியாம உக்காந்து தூங்கினதுன்னு எல்லாம் சேந்துதான் வலி அதிகமாயிருக்கும் போலிருக்கு.''

''நிஜமாவாம்மா?''

''ஆமாம்மா, அப்புறம் சாப்டிங்களா?''

''உங்க பெரிய மகளுக்கு ரெண்டு தோசைக்கு மேல இறங்கலமா. ஏன்னா அவீங்கெல்லாம் இப்ப பெரியாள் ஆயிட்டாங்க இல்ல.''

சற்றும் சூழ்நிலைக்கு ஒத்து வராத வித்யாவின் கேலியில் பெயருக்குச் சிரித்து வைக்கக் கூட உதயாவால் முடியவில்லை.

''சரிமா, நீ போய்ப் படுத்துக்கோ போ,'' என்று தா சொல்ல, ''ஆமாம்கா, பாவம்! டயர்டாத் தெரியற பே,'' என்று தானும் சொன்னாள் வித்யா.

உள்ளே இருக்கும் தான் எப்பொழுதும் தூங்கு ஒற்றைக் கட்டிலில் படுக்கையை உதறி விட்டு விட்டு படுத்துக் கொண்டாள் உதயா.

தங்கை எப்பொழுதும் தனது தாயோடு கூடத்து அறையில் படுத்துக் கொள்வது வழக்கம், அதோடு உதயா விற்குத் தான் எப்பொழுதும் தனிப்படுக்கை, மெத்தை அனைத்திலும் முக்கியமாக அமைதியான இருட்டு என தூங்குவதற்கான அனைத்துச் சூழலும் இருந்தாக வேண் டும். மற்ற இருவருக்கும் அப்படியில்லை. அதிலும் வித்யாவைப் பற்றியோ கேட்க வேண்டியதே இல்லை. வெறும் தரையில் கூட அப்படியே படுத்து விடுவாள்.



தூங்குவதிலும் அப்படித்தான். இடியே விழுந்தாலும் கூட அசைந்து கொடுக்க மாட்டாள்.

படுக்கையில் விழுந்தவளுக்கு மீண்டும் ஓ வென்று கதறி அழ வேண்டும் போல இருந்தது.

இந்த நேரம் விஜயமோகன் என்ன செய்து கொண்டிருப் பான்?

தான் சொல்லாமல் வந்து விட்டதற்காக, அவன் தன்னைத்தானே தவறாக எண்ணிக் கொண்டிருப்பான்.

சரிதான் எண்ணிக் கொள்ளட்டும்.

ஒட்டு மொத்தமாகப் பிரிந்து விடுவதற்கு இதுவே தொடக்கமாக இருக்கட்டும்.

ஆனால் அவனை அப்படித் தன்னால் பிரிந்து இருந்து விட முடியுமா?

அதற்குப் பிறகு தனக்கு வாழ்க்கையில் என்ன இருக் கிறது?

அதுவும் அன்று ஒரு முறை விஜயமோகன் சொன் னதுதான் அப்பொழுது நினைவிற்கு வந்தது உதயா விற்கு.

தான் விரும்பிய பெண் இல்லையென்று ஆகிவிட் டால் அவ்வளவுதான், இனி நமக்கு வாழ்க்கையில் ஒன் றுமே இல்லை என்பதைப் போல நான் உணர வேண் டும். அப்படிப்பட்ட ஒருத்தியைத் தான் நான் திருமணம் செய்து கொள்வேன் என்றானே.

விஜயமோகனைப் பிரிய வேண்டுமென்ற கட்டாயம் இப்பொழுது நம்மையும் அந்த மாதிரித் தானே எண்ண வைக்கிறது.

தன்னைக் காணாததற்கு என்ன காரணமென்று தெரியாமல் விழித்துக் கொண்டிருப்பவனுக்கு மட்டும், காரணம் இன்னும் தெரிந்திருக்காது என்றுதான் உதயா விற்குத் தோன்றியது.

அப்படி விழித்துக் கொண்டிருப்பவனுக்கு இனிமேல் அவனுடைய வாழ்க்கையில் தான் இருக்கப் போவதே இல்லையென்பது மட்டும் தெரிந்தால்...

அன்று அவன் சொன்னது போல, அதாவது தான் இப்பொழுது உணர்வதைப் போலவே தான் அவனும் உணர்வானோ?

எது எப்படியோ இனித் தனது வாழ்க்கையில் விஜய மோகன் இருக்கப் போவது இல்லை.

ஆனால் அவனைப் பொறுத்தவரை தன்னால் முடி யாது. இதற்கு மேல் நடக்காது என்றெல்லாம் அவன் எதையும் அவ்வளவு சுலபமாக விட்டு விடுபவன் கிடை யாதே.

சுவர்க் கடிகாரத்தில் நேரம் பார்த்தாள்.

முதல்நாள் இரவு இதேநேரம் அவனுடன் இருந்தோமே ...எப்படியெல்லாம் பேசிக் கொண்டிருந்தோம், அதற்குப் பிறகு இரவு மொபைலுக்கும் வேறு அழைத்து வெகு நேரம் பேசினானே.

ஒவ்வொன்றாக நினைத்துப் பார்த்தவள், அதற்கு மேல் தாங்கிக் கொள்ள முடியாமல் கதறி விட்டிருந்தாள்.

ஆற்றுவாரோ தேற்றுவாரோ இல்லாமல் வெகுநேரம் அழுது தீர்த்தவள், அப்படியே தூங்கியும் போய் விட் டிருந்தாள்.



காலையில் அவள் கண் விழித்தபோது, மணி ஏழரைக்கு மேல் ஆகி விட்டிருந்தது.

அப்படியே எதைப் பற்றியும் யோசிக்கவே அவசிய மில்லாத வகையில் தூங்கிக் கொண்டே இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்குமென்று நினைக்கத் தோன் றியது.

ஆனால் அவ்வளவு நேரம் வரையே தூங்கிப் பழக் கப்படாதவள் என்பதால், உடனே படுக்கையிலிருந்து எழுந்து கொண்டாள்.

தங்கை மும்முரமாகக் கல்லூரிக்குக் கிளம்பிக் கொண் டிருக்க, தாய் சமையல் வேலையில் ஈடுபட்டிருந்தது தெரிந்தது.

அடுத்த பத்து நிமிடங்களில் தாய்க்கு உதவுவதற் காகத் தானும் சமையலறைக்கு வந்திருந்தாள் உதயா.

''வாடாம்மா, பிரஸ் பண்ணிட்டயா?''

''ஆமாம்மா, புது பிரஸ் ஒன்னு இருந்தது, எடுத்துக் கிட்டேன்.''

''சரிதான், உனக்காகத்தான் எடுத்து வெச்சேன்.''

''சரி, இந்தா காபி எடுத்துக்கோ.''

''ஸாரிமா.''

''ஏன்?''

''பாவம், நீங்க ஏற்கெனவே முடியாம கஷ்டப்பட்டுட் டிருக்கீங்க...''

''அது சரி, போம்மா, போய் உக்காந்து குடி. அப்புறம் வித்யா இன்னும் கொஞ்ச நேரத்துல கிளம்பிடுவாளே, அது வரைக்கும் அவ கூடப் பேசிட்டிரு.''

''சரிமா.''

''குட்மார்னிங் வித்யா.''

''அக்கா, வா வா, இப்பதான் உன்ன வந்து எழுப்பி விட்டுடலாம்னு இருந்தேன்.''

''ஏன்?''

''பின்ன, நான் இப்பக் கிளம்பினா அப்புறம் ஈவினிங் தான் வருவேன். அப்புறம் என் புது சுடிதார் எப்படிக்கா இருக்கு?''

''நல்லார்க்கு வித்யா. ஏன், இன்னைக்கு என்ன ஸ்பெஷல்?''

''அதெல்லாம் ஒன்னுமில்லக்கா. நீ ஃபீஸ் கட்றதுக்காக அனுப்பின பணத்துல ஒரு ரெண்டாயிரம் மீதி இருந்தது. அதுல எடுத்தேன்.''

''அப்படியா?''

''ஆமாம்கா, எங்கிட்டிருந்த எல்லா டிரஸ்மே ரொம்பவும் பழசாயிடுச்சுக்கா. இப்பதான்கா கொஞ்சம் பரவாயில்லாத மாதிரி ஃப்ரீயா ஃபீல் பண்றேன்.''

படபடவென்று அவளுடைய இயல்பாகத் தங்கை பேசிக் கொண்டே போக, அதை ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டபடி அமர்ந்து விட்டிருந்தாள் உதயா.

பாவம், அவளும்தான் மனதிலிருப்பதையெல்லாம் யாரிடம் பகிர்ந்து கொள்வாளென்று தோன்றியது.

தங்கை கிளம்பியதும் மீண்டும் சமையலறைக்கு வந்தாள் உதயா.

என்ன ஆயிற்று, ஏன் அம்மாவின் முகத்தில் அவ்வளவு வேதனை?



''என்னம்மா திரும்பவும் வலிக்கிதா...?''

''அது அப்பப்ப வரும்மா. சரி, நீ சாப்புட்றியா இல்ல குளிச்சுட்டு வந்துட்றியா..?''

''இன்னும் கொஞ்ச நேரம் போகட்டும்மா.''

''சொல்லுமா, என்ன பிரச்சனை?''

திடீரென்று அப்படிக் கேட்ட தாயைப் பார்த்தாள் உதயா.

''பிரச்சனையா? அதெல்....''

''உன்ன எனக்குத் தெரியாதாமா, இவ்வளவு ஸீரியஸா நான் உன்னப் பாத்ததே இல்லையே...''

இனி தாய் விடமாட்டாரென்பது தெரிந்து விட, மனதிற்குள் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு நடந்ததைச் சற்று மாற்றிச் சொன்னாள்.

''வேலதாம்மா பிரச்சனை. எனக்கு அவ்வளவா சம்பந்தமில்லாத வேலைகள் மட்டுமே செய்யச் சொல்றாங்க. சரியா செய்யலேன்னு எம்.டி. ரொம்பவும் திட்டிட்டார்...''

''உன் எம்.டி. நம்ம சித்தி வீட்டுக்கு ரொம்ப வேண்டியவங்கன்னு நினைக்கறேன், இல்லையா?''

கடவுளே! தூண்டித் துருவிக் கேட்டால்...

''ஆமாம்மா, ஆனா அது வேற...''

''என்னமா, எதுவா இருந்தாலும் மறைக்காம சொல்லு. உங்கூட வேல செய்யறவங்க, இல்ல... உன் எம்.டி.யே கூட உங்கிட்ட தப்பான முறைல ஏதாவது நடந்துக்....''

''அச்சச்சோ! என்னமா நீங்க?''

''உண்மையைச் சொல்லு உதயா. அப்படி ஏதாவது பிரச்சனைன்னா சித்தப்பாகிட்ட வேணும்னா...''

அப்படியொரு பழியைப் போடுபவரே சித்தப்பா தான் அம்மா என்று உதயாவின் மனம் ஊமையாய் அழுதது.

என்மேல் மட்டும் தான் என்றாலும் கூடத் தாங்கிக் கொள்வேனே, அம்மா. ஆனால் அவர் உங்களையும் அல்லவா...

''உம்மேல எனக்கு நூறு சதவிகிதம் நம்பிக்கையிருக்குமா. ஆனா இத்தன வருஷங்களுழ் இந்தக் கிராமத்துலயே வளந்துட்டு உனக்கும் வெளியுலக அறிமுகம் அவ்வளவா கிடையாதேன்னு தான் பயமா இருக்கு...''

''உங்க பயம் ரொம்பவும் நியாயமானது தாம்மா, ஆனா நீங்க நினைக்கற மாதிரி யெல்லாம் எந்தப் பிரச்சனையும் இல்ல.

''நீங்க சொல்றதும் கூட ஒரு விதத்துல சரிதாம்மா, இதுநாள் வரைக்கும் வீடு, ஸ்கூல், காலேஜ்னு எல்லா இடங்கள்லையுமே எல்லாரும் பாராட்டற மாதிரியே இருந்து பழகிட்டேனா, இப்ப வேல செய்யற இடத்துலயும், ஏன்... என்னப் பாக்கற பேசற எல்லாருமே எங்கிட்ட அதே மாதிரி தான் நடந்துக்கனும்னு ரொம்பவும் எதிர்பார்த்துட்டேன் போலிருக்கு...''

என்னதான் கேட்டுக் கொண்டாலும் தான் சொல்வதையெல்லாம் தாய் நம்பவில்லையோ என்று உதயாவால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

''எது எப்படியோ நீ இப்படி திடீர்னு கிளம்பி வந்தது, உங்க சித்தப்பா, சித்திக்கும் நீ கெட்ட பேர் வாங்கித் தந்த மாதிரி தானே? இனி திரும்பவும் போய் அவங்கள எப்படிப் பார்த்துப் பேசுவ?''



இனி தான் திரும்பவும் செல்வதா? அதிலும் சித்தப்பா சித்தியைப் பார்த்துப் பேசுவதா?

இல்லவே இல்லை, அது மட்டும் இனி எப்பொழுதும் நடக்கப் போவதே இல்லையென்று மனதிற்குள் நினைத்துக் கொண்டவளால் அதை வெளியே சொல்ல முடிந்திருக்கவில்லை.

''சரிதான் உதயா, நீ சொல்றத நான் முழுசா நம்பறேன், நான் நினைச்சு பயப்பட்ட மாதிரியான பிரச்சன எதுவும் இல்லேங்கறத நினைச்சு சந்தோஷப்படக் கூட செய்யறேன்.

''ஆனா இதுக்கு மேல முடிவு எடுக்க வேண்டியது உன் கைலதான் இருக்கு. நீ புத்திசாலிப் பொண்ணு. உனக்கு நான் சொல்லித் தெரிய வேண்டியது ஒன்னுமிருக்காதுன்னும் எனக்குத் தெரியும். நல்லது கெட்டது எல்லாமே உனக்கே தெரியும், யாருக்காகவும் பாக்காம உன் மனசுக்குப் பிடிச்சத நீ செய். அதுதான் எப்பவும் நிலைக்கும்.''

சொல்வதையெல்லாம் சொல்லிவிட்டுத் தனது தாய் சென்று விட்டிருக்க, முன்னிலும் அதிகமாக இப்பொழுது குழம்பிப் போனாள் உதயா.

முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பது போல முழுத் தவறையும் தன்மேல் வைத்துக் கொண்டு பூசி மெழுகுவதைப் போல மனதிற்குள் கூனிக் குறுகிப் போனாள்.

மீண்டும் வேலைக்குச் செல்வதைப் பற்றி மட்டும் அவளால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

விஜயமோகனிடம் போனில் மட்டும் ஒருமுறை பேசிவிட்டாலென்ன, நடந்தவற்றை எடுத்துச் சொன்

னால் அவனால் புரிந்து கொள்ள முடியாமல் போய் விடுமா என்ன?

ஆனால் அவன் எதையும் அவ்வளவு சுலபமாக விட்டுவிடுபவன் இல்லையே, அப்புறம் பிரச்சனை இன்னும் பூதாகரமாகி விட்டால்...

இப்போதென்றால் தன்னைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு அவனுக்கிருக்கும் ஒரே வாய்ப்பு தனது சித்தி குடும்பம் மட்டும்தான்.

ஆனால் அவர்கள் தன்னைப் பற்றி நிச்சயம் வாயைத் திறக்கப் போவதில்லை. அதற்குப் பிறகு, சரிதான் உனக்கே அவ்வளவு இருந்தால் எனக்கு மட்டும் இருக்காதா என்று விஜயமோகனும் தன்னை மனதிலிருந்தும் கூடத் தூக்கியெறிந்து விட்டுப் போய் விடக்கூடும்.

நிச்சயம் அப்படி நடக்காது என்று மனச்சாட்சி மீண்டும் மீண்டும் சொல்வதை அலட்சியப்படுத்திவிட்டு அப்படித் தான் என்று பேசாமல் இருந்து விட்டிருந்தாள் உதயா.

மனச்சாட்சியை அலட்சியப்படுத்த முடிந்தவளால் அவ்வளவு எளிதாகக் குடும்பச் சூழ்நிலையை அலட்சியப் படுத்த முடிந்திருக்கவில்லை.

மாதாமாதம் கட்டியே ஆக வேண்டிய வங்கிக்கடன், தங்கையின் படிப்புச் செலவு, தாயின் உடல் நிலை, அடுத்த வேளை உணவு என இன்னும் எத்தனை எத் தனையோ பிரச்சனைகள் வந்து மருட்டியதில், தன் னுடைய பிரச்சனை கூட சிறிதாகிப் போய் விட்டாற் போல உணர்ந்தாள் உதயா.

இப்படி எவ்வளவோ இருந்தும் கூட உன் மனதிற்கு என்ன படுகிறதோ அதன்படி செய்யென்று இன்முகத்



துடன் முடித்து விட்டிருந்த தாய்க்காகவே அது எவ்வளவு சிரமமானதென்றாலும் வேலைக்குத் தான் மீண்டும் செல்வதென்ற முடிவுக்கு வந்து விட்டிருந்தாள் உதயா.

# 17

இரண்டு நாட்களுக்குப் பிறகு அன்று மீண்டும் வேலைக்கு வந்திருந்தாள் உதயா.

முன்பு தான் செய்திருந்த முட்டாள்தனத்திற்கெல்லாம் கூடச் சேர்த்து மனதைக் கல்லாக்கிக் கொண்டிருந்தாள்.

முடிந்தவரை பார்க்கலாம், மிகவும் முடியாவிட்டால் வேறு வேலையைப் பார்த்துக் கொண்டு சென்று விட வேண்டியது தான் என்ற முடிவுக்கும் கூட மனதிற்குள் வந்து விட்டிருந்தாள்.

உதயா உள்ளே வந்தபோது விஜயமோகன் அவ னுடைய இருக்கையில்தான் இருந்தான்.

காலை வணக்கம் தெரிவிக்கும் நிலையில் உதயா இருக்கவில்லை.

ஏன் அவனும் அதை எதிர்பார்க்கவில்லை.

ஏன், விஜயமோகன் எதையும் கண்டு கொள்ளும் மன நிலையிலுமே இருக்கவில்லை.

நேராகத் தன்னுடைய இடத்திற்குச் சென்று ஹேன்ட் பேக்கை வைத்தவள், அப்படியே தன்னுடைய

இருக்கையில் அமர்ந்து பெரிய பெரிய மூச்சுக்களை எடுத்துத் தன்னை ஓரளவு சமன்படுத்திக் கொள்ள முயன்றாள்.

ஆனால் உதயாவிற்குத் தான் பாவம் அன்று விஜய மோகன் தன்னிடம் பேசப்போவதே இல்லையென்பது அப்பொழுது தெரியாது போயிற்று.

அதிலும் அன்று கடைசியாக இருவரும் சந்தித்துக் கொண்டதற்கு மறுநாள் நெஞ்சு நிறைய ஆவலுடன் அலுவலகத்திற்கு வந்திருந்த விஜயமோகனுக்கு அவனுக்கு முன்னரே உதயா வந்திருக்கவில்லை என் பதே தாங்கிக் கொள்ள முடியாத ஒன்றாக இருந்தது.

அப்படியிருக்கும் பொழுது அடுத்த இரண்டு முழு நாட்களும் கூட அவள் வந்திருக்கவே இல்லையென்றால்,

அது மட்டுமா, அதற்கான காரணமும் இல்லை.

போனிலும் அழைத்திருக்கவில்லை.

வெட்கத்தை விட்டு அவன் நிறைய முறை அழைத் திருந்தும் பலனில்லை. மொபைல் ஸ்விட்ச் ஆஃப் செய்யப்பட்டிருந்தது.

என்ன ஏதென்று எதையுமே அறிந்து கொள்ள முடி யாத நிலை.

ஒருவேளை உதயாவிற்குத் தான் தொடர்பு கொள் ளவே முடியாத அளவிற்கு ஏதாவது ஆகி விட்டதோ என்ற பதற்றம்.

அந்த எண்ணம் தோன்றியதற்குப் பிறகு அவனால் துளியும் நிலை கொள்ள முடியவில்லை.



கடவுளே! தன் உதயாவிற்கு எதுவும் ஆகியிருக்கக் கூடாதே என்று உடனே அவள் தங்கியிருக்கும் விடு திக்கு அழைத்தான்.

ஆனால் அங்கிருந்து காலை ஆறு மணிக்கே கிளம்பி விட்டதாகச் சொல்ல, உடனே மீண்டும் உதயாவின் சித்தி வீட்டிற்கு அழைத்தான்.

ஆனால் அவர்களோ, ஓ அவளா, ஊருக்குக் காலையில் நேரத்திலேயே கிளம்பிப் போய் விட்டாளென்று விட் டேற்றியாகப் பதில் சொன்னதோடு, அவள் இனி எப்பொழுதும் திரும்பி வரவே மாட்டாள். அப்படியென்ன அவள் பெரிய பிரமாதம். உங்களுடைய தாத்திற்கும், நிலைமைக்கும் உங்களுக்கு வேலைக்கு எத்தனை பேர் கிடைக்க மாட்டார்கள் என்று அறிவுரை சொல்கிற மாதிரி வேறு பேசியதில் கோபத்தின் எல்லைக்கே சென்று விட்டிருந்தான், விஜயமோகன்.

அதாவது அவனுடைய கோபம் முழுவதுமே உதயா வின் மேல் தான் பாய்ந்தது.

சரி, அனைத்தையும் ஒட்டு மொத்தமாகக் கூட்டிக் கழித்துப் பார்க்கும் போது ஏதோ பிரச்சனை என்கிற அளவில் அவனுக்கும் புரிந்தது.

சரிதான். அதற்கு அவள் என்ன செய்திருக்க வேண்டும்.

முதலில் அவள் அதைத் தன்னிடமல்லவா சொல்லி யிருக்க வேண்டும்.

தன்னுடைய உதவியை அல்லவா நாடியிருக்க வேண்டும்.

சரிதான். அதெல்லாம் வேண்டுமானால் போகட்டும்.

அதற்கு மேலும் தன்னிடம் ஒரு வார்த்தை சொல்லாமல் கொள்ளாமல் கூட அப்படியா ஓடுவது?

அப்படியென்றால் அவள் இன்னும் தன்னைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்றுதானே அர்த்தம்.

அவள் தனக்குத் துளியும் முக்கியத்துவம் கொடுக்க வில்லை. ஏன், அவள் தன்னை ஒரு பொருட்டாகக் கூட மதிக்கவில்லை என்றுதானே அர்த்தம்.

ஆனால் அவளை நாம் எந்த அளவிற்கு மனச் சிம்மா சனத்தில் தூக்கி அமர வைத்திருக்கிறோம்.

அதாவது தான் மட்டும் உதயாவை அந்த அளவிற்கு வைத்திருக்கிறோமே, அவள் மட்டும் எப்படி அப்படி இல்லாமல் போகலாமென்றெல்லாம் அவன் நினைக்க வில்லை.

தன்னுடைய அன்பிற்கு அவளிடமும் எதிரொலி இருக்க வேண்டுமென்று எதிர்பார்த்தான். ஏன், தன்னை விடப் பல மடங்கு அதிகமாகவே கூட.

# 18

முதல்நாள் முழுக்க விஜயமோகன் தன்னிடம் ஒரு வார்த்தை கூடப் பேசியிருக்காததில் மனதிற்குள் மிகவும் ஒரு மாதிரியாக உணர்ந்தாள் உதயா.

ஏன், அவளுமே அதைத்தான் எதிர்பார்த்து வந்திருந் தாள் என்றாலும் கூட, அந்த மௌனத்தை ஏனோ



அவளால் சுத்தமாகத் தாங்கிக் கொள்ளவே முடிய வில்லை.

ஏன், தான் ஒருத்தி அங்கு இருப்பதையே அவன் கண்டுகொள்ளவில்லையே.

அப்படியானால் அவனுக்கும் இப்பொழுது தன்னைப் பிடிக்காமல் போய் விட்டதோ?

தன்னிடம் அந்த மாதிரியெல்லாம் பழகியதற்காகத் தனக்குள் மிகவும் வருந்துகிறானோ?

அதை ஈடு செய்து கொள்வதற்காகத் தன் மேல் எந்த அளவிற்குப் பாசத்தையும், நேசத்தையும் காட்டினானோ, அதே அளவு வெறுப்பையும் காட்டி வதைப்பானோ?

ஆனால் இந்த மௌனத்திற்கு அதைக் கூடத் தாங்கிக் கொண்டு விடலாம் போல இருக்கிறதே.

முதலில் அவன் தன்னைக் கண்டு கொள்ளவே கூடாது, பேசக்கூடாது என்றெல்லாம் நினைத்துவிட்டு, இப்பொழுது அப்படியே அதற்கு எதிர்ப்பதமாக நினைக்கும் தன்னை நினைத்துத் தனக்கே மிகவும் விசித்திரமாக இருந்தது உதயாவிற்கு.

அன்று காலையில் உதயா தான் வேலைக்கு வந்த போது விஜயமோகன் இன்னும் வந்திருக்காததைக் கண்டாள்.

நேராகத் தன்னிடத்திற்குச் சென்றவள், ஹேண்ட்பேக்கை வைத்துவிட்டு அனைத்தையும் ஒதுக்கி வைத்தாள்.

முக்கியமாக ஆர்டர்ஸ், கொட்டேஷன் பேப்பர் எனத் தனது டேபிளில் இருந்த அனைத்தையும் கொண்டு போய் எம்.டி.யின் டேபிளில் வைத்தாள்.

அதே நேரம் உள்ளே வந்த விஜயமோகன், உதயா தன்னிடத்தில் எதையோ வைத்து விட்டுத் திரும்பி யதைப் பார்த்து அருகில் வந்தான்.

''நீ என்ன உன்னிஷ்டத்துக்கு வருவ, புடிச்சா வேல செய்வ, இல்லையா?'' என்றவன் தன்னைத் திரும்பிப் பார்த்த உதயாவின் மேல் அவள் வைத்துவிட்டுப் போன பைலைத் தூக்கி விசிறியடித்தான்.

விஜயமோகனின் கோபத்தில் நடுங்கிப் போய் விட் டிருந்தாள் உதயா.

அவன் தூக்கியடித்ததில் பறந்திருந்த காகிதங்கள் அந்தப் பெரிய அறை முழுக்க ஆங்காங்கே சென்று சிதறியிருக்க, கீழே அமர்ந்து அவற்றைச் சேகரிப்பதில் முனைந்தாள்.

''ஏதாவது வேல சொன்னா மட்டும் செய். அதிகப் பிரசங்கித்தனம் வேண்டாம்'' என்று விட்டு விஜயமோகன் தனது வேலையைப் பார்க்க ஆரம்பித்திருக்க, கீழே விழுந்தவற்றில் முக்கால் பங்கிற்கும் மேல் சேகரித்திருந் தாள் உதயா.

அதே நேரம் யாரோ சிலர் உள்ளே வருவது தெரிய, மீதியையும் வேகமாகச் சேகரிக்க முனைந்தாள்.

''வாங்க, உக்காருங்க!'' என்று வந்தவர்களை விஜய மோகன் வரவேற்று உபசரிப்பது காதுகளில் விழுந்தது.

''இப்பதான் வீட்டுக்குப் போய் அம்மாவுக்குப் பத் திரிகை வெச்சுட்டு வர்றோம். நல்லவேள, நீங்க இருப் பீங்களோ மாட்டீங்களோன்னு பயந்துட்டே வந்தோம்.

''உங்களப் பாக்க முடிஞ்சதுல ரொம்ப சந்தோஷம். மதனுக்குக் கல்யாணம். உங்களுக்கு மாயா சொல்லி யிருப்பான்னு நினைக்கறோம்.



''கல்யாணத்துக்கு எல்லா நேரமும் நீங்க அவசியம் வரணும்!'' என்று மாயாவின் பெற்றோர் விஜயமோக னுக்குப் பத்திரிகை வைக்கவும், மாயா உள்ளே வரவும் சரியாக இருந்தது.

அதே நேரம் தானும் அனைத்தையும் சேகரித்து முடித்து எழுந்திருந்தாள் உதயா.

''எனக்காக இங்க வந்திருக்காட்டி என்ன? வீட்ல அம்மாகிட்ட குடுத்ததே போதுமே...''

''அச்சச்சோ! அதெப்படி உங்களுக்கு நேர்ல பார்த்துக் குடுக்காம. அது நல்லா இருக்காதே.''

''பாருங்க, அம்மாவும் அப்பாவும் இப்படியேதான் சொல்லிட்டிருக்காங்க. என்ன விட்டிருந்தா நான் நாலு நாளைக்கு முன்னாடியே இன்விடேஷன் கொண்டு வந்து வெச்சிருப்பேன்.''

............

''ஆனா விட்டாதான. என்னவோ உங்களுக்கு அவங் களே நேர்ல வந்து வெச்சாதான் நல்லார்க்குமாம்...''

''நீங்க அவசியம் ஒரு நாள் முன்னாடியே வரணும்,'' என்று மற்றொரு முறையும் மாயாவின் பெற்றவர்கள் சொல்ல, ''ஆமாம் விஜய். உங்க வரவ நாங்க எல்லாருமே ரொம்ப ரொம்ப ஆவலா எதிர்பார்த்துட்டிருக்கோம்,'' என்று மிகவும் உணர்ந்து சொன்னாள் மாயா.

''நீங்க மட்டும் மனசு வெச்சா நாங்க இன்னும் என் னென்னவோ எல்லாம் கற்பன பண்ணிட்டிருக்கோம்...'' என்று மெல்லிய குரலில் தயங்கிக் கொண்டே தனது பெற்றவர்கள் சொல்ல வந்ததைச் சொல்லாமல் பாதியில் நிறுத்தியிருக்க, ''அடுத்து வர்ற முகூர்த்தத்துலயே நம்ம

கல்யாணத்த வெச்சுடலாம்னு சொல்றாங்க விஜய்,'' என்று வெட்கத்துடன் சொல்லி முடித்திருந்தாள் மாயா.

ஏனோ அவளுடைய வெட்கத்தைப் பார்க்கவே அருவருப்பாக இருந்தது விஜயமோகனுக்கு.

எதையோ சொல்வதற்காக வாயைத் திறக்கப் போனவன் பிறகு வேண்டாமென்று விட்டுவிட்டிருந்தான்.

அதே நேரம் எம்.டி.யின் டேபிளில் இருந்த லேண்ட் லைன் ஒலிக்க, அவன் அட்டெண்ட் செய்வது போலத் தெரியாததால் தான் வந்து எடுத்துப் பேசினாள் உதயா.

பேசி முடித்து விட்டு அவள் ரிஸீவரை வைக்கவும், ''அப்புறம் இவளுக்கு இன்விடேஷன்,'' என்று உதயாவைத் தனது பெற்றோரிடம் கைகாட்டி மாயா கேட்கவும் சரியாக இருந்தது.

''உனக்கென்ன, மூளை ஏதாவது குழம்பிப் போயிடுச்சா, நமக்குன்னு ஒரு தராதரமில்ல?''

அப்படிக்கேட்ட தாயை, ''ஏம்மா?'' என்று பார்த்தாள் மாயா.

''பின்ன? நம்ம தகுதிக்கு இல்லேன்னா கூடப் பரவாயில்ல. இருந்திருந்து இவளுக்குப் போய் வைக்கச் சொல்றியே. நீ சின்னப் பொண்ணு. உனக்கு விவரம் போதாதுங்கறது சரியாதான் இருக்கு,'' என்று புன்னகை செய்த மாயாவின் தந்தை, திரும்பி உதயாவைப் பார்த்து, ''நீ பாட்டுக்கு எங்காவது கல்யாணத்துக்குக் கிளம்பி வந்துடாதம்மா. எங்களுக்குன்னு ஒரு ஸ்டேட்டஸ் இருக்கு. தயவு செஞ்சு அதக் கெடுத்துடாத!'' என்றார்.

அவர்களுடைய வார்த்தைகளால் உதயா தனக்குள் கூனிக் குறுகிப் போயிருக்க, டேபிளின் கைப்பிடியை



இறுகப் பிடித்துத் தனது கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டான் விஜயமோகன்.

''சரி, நாங்க கிளம்பறோம்,'' என்று வந்தவர்கள் மூவரும் எழுந்திருக்க, முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு அமர்ந்திருந்தான் விஜயமோகன்.

அவனுடைய உணர்ச்சி துடைக்கப்பட்ட முகத்தைப் பார்க்க அவர்களுக்கும் என்ன தோன்றியதோ, ''கல்யாணத்துக்கு ஒரு நாள் முன்னாடியே அவசியம் வரணும்,'' என்று விட்டு அதற்கு மேல் எதுவும் பேசாமல் கிளம்பி விட்டிருந்தார்கள்.

வந்தவர்கள் பேசிவிட்டுச் சென்றதைவிட, விஜயமோகனின் கோபம் தான் உதயாவை மிகுந்த அதிர்ச்சிக்குள்ளாக்கி விட்டிருந்தது.

அடிமேல் அடியாக விழுந்து கொண்டே இருக்க, அவற்றையெல்லாம் தாங்கிக் கொள்ள முடியாது உதயாவின் பூ மனம் வாடிக் கசங்கிப் போயிற்று.

சில நிமிடங்களில் தன்னை ஓரளவு சமாளித்துக் கொண்டு, சற்று முன்னர் வந்த போன் டீடெய்ல்ஸை சொல்வதற்காக விஜயமோகனுக்கு முன்பாக வந்து நின்றாள் உதயா.

''என்ன?''

''ஸார், இன்னைக்கு ஈவினிங் ஹோட்டல் சந்திரால...''

''கொஞ்சம் முன்னாடி நான் சொன்னதெல்லாம் உன் காதுல விழல, ஒன்னு செய். அப்படியெல்லாம் என்னால எதையும் கேட்டுக்க முடியாதுன்னா, அப்புறம் உனக்கு இங்க வேலையில்ல. கிளம்பு.''

.........

''அதுக்கும் முதல்ல ஒன்னு செய். என் முகத்துல விழிக்காம எங்காவது போய்டு.''

கடவுளே! எவ்வளவு எளிதாகச் சொல்லி விட்டான்.

தன் மனம் படும்பாடு பற்றிக் கொஞ்சமேனும் இவனுக்குப் புரியுமா?

கண்கள் கலங்கி விட்டிருக்க, அதை மறைப்பதற்காகச் சற்றே குனிந்து கொண்டாள் உதயா.

''லுக், இந்தக் கண்ணீர் வடிக்கற வேலையெல்லாம் எனக்குச் சுத்தமாகப் பிடிக்காது. இது வேல நடக்கற இடம். இங்க சொந்த விருப்பு வெறுப்புகளுக்கெல்லாம் இடமே இல்ல,'' என்றவன் எழுந்து வெளியே செல்ல, எதையும் யோசிக்கக் கூட முடியாத அளவிற்கு மூளை மரத்துப் போய்விட அப்படியே நின்று விட்டிருந்தாள் உதயா.

அதற்குப் பிறகு வந்த நாட்களும் கூட அப்படித்தான் அமைந்தன உதயாவிற்கு.

ஏன், அதை விடவும் அதிகக் கடுமையாகவே.

நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டே போன விஜய மோகனின் கடுமையும் கோபமும் உதயாவை மேலும் மேலும் உருக்கிக் கொண்டே வந்தன.

ஏனோ அவளுக்கென உலகத்தில் யாருமே இல்லாததைப் போல உணர்ந்தாள்.

ஆனாலும் அவள் எப்பொழுதும் போல வேலைக்கு வந்து கொண்டேதான் இருந்தாள்.

என்ன, வேலை செய்வதற்குப் பதிலாக, உதாசீனங்களையும், கடுமையான வார்த்தைகளையும் மட்டுமே முழுநேரமும் வாங்கிக் கொண்டிருக்க நேர்ந்தது.



## 19

தொடர்ந்து சில நாட்களாகவே சரியாகச் சாப்பிடாததாலோ என்னவோ, அன்று காய்ச்சலில் உதயாவின் உடம்பு கொதித்துக் கொண்டிருந்தது.

எழுந்து நன்றாக நிற்க முடியுமென்று கூடத் தோன்றவில்லை.

வலியச் சென்று வாங்கிக் கட்டிக் கொள்வதை விட அன்று தான் இருக்கும் நிலைக்கு வேலைக்குப் போகாமலே இருந்துவிட்டால் என்னவென்று கூடத் தோன்றத் தொடங்கி விட்டிருந்தது.

ஆனால் அப்படி இருந்துவிட உதயாவால் முடிந்திருக்கவில்லை.

மனம் கேட்காமல் அந்த நிலையிலும் எழுந்து குளித்துக் கிளம்பியிருந்தாள்.

காய்ச்சலில் குளித்து உடலை வதைத்த தாலோ என்னவோ உடல் சூடு மேலும் கூட அதிகமாகியிருந்தது.

எப்படியோ அலுவலகம் சென்று அடைந்திருந்தவள், தன்னிடத்தில் சென்று அப்படியே அமர்ந்து விட்டிருந்தாள்.

கை கால்களை அசைப்பது கூட ஏதோ மலையைப் புரட்டிப் போடுவதைப் போலப் பெரிய விஷயமாக இருந்தது.

அந்த நிலையில் விஜயமோகனையும், அவனுடைய கோபத்தையும் நினைத்துப் பார்த்தவளுக்குப் பயத்தில் உடல் மேலும் வெலவெலத்துப் போனது.

உதயா எண்ணிப் பயந்து கொண்டிருந்தது போலத் தான் நடக்கவும் செய்தது.

அன்று விஜயமோகன் உள்ளே வந்த போதே கோபத் துடன் தான் வந்திருந்தான். அந்த அளவிற்கு அவ னுடைய முகம் கல்லாக இறுகிப் போயிருந்ததைப் பயத் துடன் பார்த்தாள் உதயா.

அப்படித்தான் போனால் போகிறதென்று மன்னித்து விடவே முடியாதா? அந்த அளவிற்கு உலகத்திலில்லாத பாவத்தையா நாம் செய்து விட்டோமென்று அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

தன்னை விஜயமோகன் அழைப்பது காதுகளில் விழுந்தது.

சுத்தமாக ஒத்துழைக்க மறுத்த கைகால்களுடன் சிரமப்பட்டு நடந்து வந்து அவனுக்கு முன்பாக நின்றாள்.

''என்ன இது?''

கடவுளே! நேற்று கூரியரில் அனுப்பச் சொன்னானே, அது ஒன்னு மட்டும் எப்படித் தப்பிப் போயிற்று.

அது கண்டிப்பாக அனுப்ப வேண்டிய கவரென்று அவன் குறிப்பிட்டுச் சொன்னதும் வேறு நினைவிற்கு வந்தது.

அந்த கூரியர் பையன் இப்படிச் செய்து விட்டானே....

''என்ன, பேசு?''



விஜயமோகனின் வார்த்தைகள் அவளை மேலும் நடுங்கச் செய்து விட்டிருந்தன.

''எப்படியோ எடுத்துட்டுப் போகாம விட்டுட்டாங்க போ...''

''எடுத்துக் குடுக்கறது உன் வேல. அத நீ செய்யாம இருந்துட்டு மத்தவங்கள எதுக்குக் குறை சொல்ற?

''சும்மா பந்தாவுக்கு மேக்கப்பெல்லாம் நிறையப் பண்ணிக்கிட்டு வேலைக்கு வரத் தெரியற அளவுக்கு, வேலையும் செய்யணுங்கற அறிவு வேண்டாம்?''

..........

''அதுக்கு மேல எப்பக் கூப்புட்டாலும் மொபைல் ஸ்விட்ச் ஆஃப், ஏன் அப்படி எவங்கூட சுத்தற? அது யாருக்கும் தெரியக்கூடாதுன்னு போன ஸ்விட்ச் ஆஃப் பண்ணி வெக்கறதுக்கு?''

அந்த வார்த்தைகளில் தன்னை நிமிர்ந்து பார்த்த உதயாவின் முகத்தைப் பார்த்த விஜயமோகனுக்குமே ஏனோ ஒரு மாதிரியாகி விட்டிருந்தது.

சோகமே உருவாக அவள் தன்னைப் பார்த்த பார்வை, என்னை இப்படியொரு கேள்வி கேட்க அதுவும் உன் னால் எப்படி முடிந்ததென்று கேட்பதைப் போலிருந்தது.

ஆனாலும் அவளின் மேலிருந்த கோபத்தையோ, எரிச்சலையோ சிறிதும் விஜயமோகனால் கட்டுப்படுத் திக் கொள்ளவே முடிந்திருக்கவில்லை.

''போதும், உன் நடிப்பையெல்லாம் உண்மைன்னு நம்பிக்கறதுக்கு இனியும் இங்க யாரும் தயாரா இல்ல. கிளம்பு. எப்ப வந்தா ஒழுங்கா சொல்ற வேலையைச் செய்ய முடியும்னு நினைக்கறியோ அப்ப வா, போதும்.''

......

''என்ன நான் பேசறது காதுல விழல?''

அடிபட்ட மானாய்ப் பயம் கலந்த ஆவலுடன் போதுமே என்னை இப்படியெல்லாம் பேசி வதைக்காதீர்களே என்பதைப் போலத் தன்னை நிமிர்ந்து பார்த்த உதயா வின் பார்வை, அவனையும் என்னவோ செய்திருந்தது.

ஆனாலும் அதைவிட அதிகமாக மீண்டும் கோபமே தலை தூக்கியிருந்தது.

''ஓ! அது சரிதான், நீ சொல்லி நான் என்ன கேக்கற துன்னு நின்னுட்டிருக்கியா...''

அதற்கு மேல் உதயா விஜயமோகனைப் பேச வைத் திருக்கவில்லை. நேராக உள்ளே சென்று கைப்பையுடன் திரும்பி வந்திருந்தாள்.

போக வேண்டாம், உள்ளே போய் வேலையைப் பார் என்று சொல்லிவிட மாட்டானா என்பதைப் போலப் பல வினாடிகள் ஆவலுடன் நின்று பார்த்துக் கொண்டிருந்த உதயா, அதற்குப் பிறகு எவ்வளவு நேரம் நின்றாலும் தான் நினைப்பது நடக்கப் போவதில்லை என்பதை உணர்ந்து வெளியே செல்லத் திரும்பினாள்.

என்னென்ன வார்த்தைகள் சொல்லி விட்டானென்று அவளுடைய மனம் ஊமையாய் அழுதது.

கண்ணீர் விட்டு அழக்கூட அவளால் முடிந்திருக்க வில்லை. ஏன் எதுவுமே முடிந்திருக்கவில்லை.

உடலோடு உள்ளமும் சேர்ந்து சோர்ந்து போய் விட் டிருக்க, எப்படியோ அறைக்குச் சென்று சேர்ந்தவள்தான், கை கால்களைக் கூட அசைக்க முடியாது அப்படியே படுக்கையில் விழுந்திருந்தாள்.



தன்னுடைய விஜயமோகனே எப்படித் தன்னை அப்படியெல்லாம்....

யாருக்காக மற்றவர்கள் பேசியவற்றையெல்லாம் தாங்கிக் கொண்டு நடைபிணமாய்த் திரிந்து கொண்டிருந் தாளோ அவனே இப்பொழுது மனச்சாட்சியில்லாமல் ஏதேதோ பேசி விட்டிருந்ததில் ஆணி வேரே ஆட்டம் கண்டு விட்டாற் போல வாடிக் கசங்கித் தொய்ந்து போய் விழ்ந்து விட்டிருந்தாள் உதயா.

## 20

உதயாவை அப்படியெல்லாம் பேசி அனுப்பிவிட்டு விஜயமோகனாலும் ஒன்றும் நிம்மதியாக இருந்து விட முடியவில்லை.

தன்னை எந்த அளவிற்குக் கீழிறங்கிப் பேச வைத்து விட்டாளென்று அவனுக்கும் மனம் வெறுத்துப் போய் விட்டிருந்தது.

பிரச்சனை எதுவாக இருந்தாலும் அதைத் தன்னிடம் வந்து சொல்லித் தொலைப்பதற்கென்ன என்று கோப மாகவும்.

இவள் எப்பொழுது இறங்கி வருவாளென்று பார்க்க வைத்தே தன்னையும் நிம்மதியாக வேலையைச் செய்ய விடாமல் முடித்து விடுவாள் போலிருக்கிறதே என்றும்.

இனி இப்படியே போனால் எங்கே தன்னையும் பைத்தியம் பிடிக்கச் செய்து விடுவாள் போலிருக்கிறதே என்றும் கூட பயந்து போய் விட்டிருந்தான் விஜயமோகன்.

அப்படித்தான் அவளாவது நிம்மதியாக இருக்கிறாளா என்று பார்த்தால் அதுவுமில்லை.

நாளுக்கு நாள் உருகி உருகிக் கடைசியில் தேய்ந்து காணமலே போய்விடுவாள் போலல்லவா இருக்கிறது.

வாழ்க்கையிலேயே முதன்முறையாக எதிலுமே மனம் ஈடுபடாமல் எந்த வேலையையும் செய்யத் தோன்றாமல் நெற்றியைப் பிடித்துக் கொண்டு அமர்ந்து விட்டிருந்தான் விஜயமோகன்.

தனது டேபிளின் மேலிருக்கும் லேண்ட் லைன் போன் ஒலிக்க, சில வினாடிகள் எடுத்துத் தன்னை ஓரளவு சமாளித்துக் கொண்டு ரிஸீவரை எடுத்துக் காதில் வைத்தான்.

எதிர்முனையில் பேசியது உதயாவின் தாய்.

முதலில் அவர் நலம் விசாரித்துப் பேச அவருக்குப் பதில் சொன்னவன், நாகரிகம் கருதித் தன்னை இயல்பாகக் காட்டிக் கொண்டு தானும் அவரிடம் நலம் விசாரித்துச் சில வார்த்தைகள் பேசினான்.

உதயாவைப் பற்றி அவராவது ஏதாவது சொல்வாரா என்ற பரபரப்பு அவனை ஒரு வழி செய்து கொண்டிருந்தது.

மூன்று நிமிடங்களுக்குப் பக்கம் பேசிவிட்டு ரிஸீவரை வைத்திருந்தவனுக்கு அவரிடமிருந்தும் பெரிதாகத் தகவலென்று எதுவும் கிடைத்திருக்கவில்லை.



ஆனால் ஓரளவு கிடைத்திருந்தது.

முதலில் உதயாவிற்கு இரண்டு நாட்களாக உடல் நலமில்லை என்ற தகவலே அவர் சொல்லித்தான் விஜயமோகனுக்குத் தெரிந்தது.

கடவுளே! அதனால்தான் இரண்டு நாட்களாக மிகவும் ஒரு மாதிரியாகவே இருந்தாளோ? அது தெரியாமல் நாம் எப்படியெல்லாம் வதைத்து விட்டிருக்கிறோமென்று அவனுக்கும் ஒரு மாதிரியாகி விட்டிருந்தது.

காரணமில்லாமல் சொல்லாமல், கொள்ளாமல் கூட விடுமுறை எடுத்துக் கொண்டு போனாளே.

இப்படிக் காய்ச்சலை வைத்துக் கொண்டு கூட எதற்காக வேலைக்கு வந்தாளாம்.

ஆனால் அந்த விடுமுறைக்கான காரணத்தை உதயாவின் தாய் சொன்னதிலிருந்து ஓரளவு யூகிக்க முடிந்தது.

ஆனால் அதற்கு மேலும் ஏதேதோ சொன்னாரே...

யாரோ உள்ளே வருவதற்கு அனுமதி கேட்க, "யெஸ், கம் இன்," என்றான் விஜயமோகன்.

அபிஷேக் உள்ளே வர, வரவேற்றான்.

தான் இப்பொழுதிருக்கும் மனநிலையில் இவனிடம் நன்றாகப் பேச முடியுமா என்று அவன் நினைத்துக் கொண்டிருக்கும் போதே, "ஸாரிண்ணா. வேல நேரத்துல வந்துட்டேன். நான் வேணும்னா நைட் ஏழு மணிக்கு மேல வரட்டுமா?" என்று கேட்டான் அவன்.

"இல்ல அபிஷேக், வா. வந்து உக்காரு."

..........

''அப்புறம் காலேஜ் போய்ட்டு வந்தாச்சா?''

''இல்லண்ணா. இன்னைக்குப் போகல.''

சிலபல இயல்பான பேச்சுகளுக்குப் பிறகு தான் வந்த விஷயத்திற்கு வந்தான் அபிஷேக்.

''அண்ணா, உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்.''

''என்னப்பா, சொல்லு.''

''அத எப்படி ஆரம்பிக்கறதுன்னு தான் தெரியல,'' என்று தயங்கியவனை, தயங்காமல் சொல்லுமாறு ஊக்கப்படுத்தினான் விஜயமோகன்.

மெல்லிய குரலில் தயக்கத்துடன் ஆரம்பித்திருந் தவன், அதற்குப் பிறகு தான் சொல்ல வேண்டுமென்று நினைத்துக் கொண்டு வந்த அனைத்தையும் மிகத் தெளிவாகச் சொல்லி முடித்திருந்தான்.

முதல் நாள் நடந்தது, அதற்கு அடுத்த நாள் காலை யில் உதயா வந்திருந்த போது தனது தாயும் தந்தையும் பேசிக் கொண்டது, கழுத்தைப் பிடித்து வெளியே தள் ளாத குறையாக உதயாவை ஊருக்கு அனுப்பி வைத்தது

அதற்கு மேலும் மாயா வந்து தனது பெற்றவர்களிடம் முக்கியமாகத் தந்தையிடம் பேசிவிட்டுப் போனது, தனது தந்தை சென்று அவளுடைய பெற்றவர்களைச் சந்தித்துப் பேசிவிட்டு வந்தது என ஒன்றுவிடாமல் தான் அறிந்த அனைத்தையும் சொல்லி முடித்திருந்தான் அபிஷேக்.

அனைத்து முடிச்சுகளும் அவிழ்ந்து போனதில் இப் பொழுது விஜயமோகனாலும் இயல்பாகச் சிந்திக்க முடிந்தது.



கடவுளே! அப்படியானால் கடந்த பத்து நாட்களாக உதயா படும்பாடு.

மற்றவர்கள் போகட்டும், ஆனால் தான் எந்த அள விற்குக் கேவலமாக நடந்து கொண்டு விட்டிருக்கோம்.

ஏற்கெனவே அடிபட்டு அடிபட்டு நைந்து போய்க் கிடந்தவளை நாமும் நம் பங்குக்கு எப்படியெல்லாம் வதைத்து விட்டிருக்கிறோம்.

அதையெல்லாம் கேட்க நேர்ந்த உதயாவின் மனம் என்ன பாடுபட்டிருக்கும்.

அவள் தன்னை அழைத்துப் பேசியிருக்க வேண்டும் தான். ஏன் நடந்த அனைத்தையும் தன்னிடமும் சொல்லி யிருக்க வேண்டும்தான்.

ஆனால் எதையெதையோ எண்ணி அவசியமில் லாமல் பயந்து போய் விட்டிருக்கிறாள் என்பதை அவ னால் இப்பொழுது புரிந்து கொள்ள முடிந்தது...

மேலும் ஏதோ சொல்ல வந்துவிட்டுப் பிறகு வேண்டா மென்று விட்டு விட்டிருந்த அபிஷேக்கிடம், ''என்னப்பா, எதுவானாலும் சொல்லு,'' என்றான் விஜயமோகன்.

''அண்ணா...''

''ம்.''

''நேத்து ஒரு வேலையா அப்பா சொல்லி மாயாக்கா வீட்டுக்குப் போயிருந்தேன். அப்ப மதன் அண்ணா அவங்க ஃப்ரண்ட்ஸ் கூடப் பேசிட்டிருந்ததையும் கேட்க நேர்ந்தது.

''மதன் ரொம்ப நாளா உதயாக்காவ அவங்க மொபை லுக்குக் கூப்புட்டு டார்ச்சர் பண்ணிட்டு இருந்திருக் கான்னு அப்பதான் என்னால புரிஞ்சுக்க முடிஞ்சுது.

ஏன்னா நான் ஒரு முறை கேட்கப் போய் உதயாக்காவே இதப் பட்டும் படாம எங்கிட்டச் சொல்லியிருக்காங்க.

அதுவும் யார்னு சொல்லல, இந்த மாதிரி பிரச்சன இருக்கறத மட்டும்.

''ஆனா யார்னு அக்காவுக்கும் தெரியாதே,'' என்றவள், ''அப்படி தான் டார்ச்சர் குடுத்ததப் பெருமையா அவன் அந்த மதன் அவனோட ஃப்ரண்ட்ஸ் கிட்டையெல்லாம் சொல்லிச் சிரிச்சுட்டிருந்தான்,'' என்றான்.

''எனக்குப் பயந்து எப்பப் பாத்தாலும் மொபைலை ஸ்விட்ச் ஆஃப் பண்ணியே வெச்சிருக்கா. அதோட எனக்கும் மேரேஜ் ஃபிக்ஸ் ஆயிடுச்சே. அதனால போனாப் போகுதுன்னு இனிமேல் விட்டுடலாம்னு இருக்கேன். பிழைச்சுப் போகட்டும் பாவம்னு... இன்னும் கூடக் கீழ்த்தரமா ஏதேதோ சொல்லிட்டிருந்தான்.

''எனக்கு வந்த கோபத்துல அப்பவே போய் அவனோட சட்டயப் புடிச்சிருப்பேன்.

ஆனா அதுக்கும் பாவம் உதயாக்கா தான் பலிகடா ஆவாங்கன்னு ரொம்பச் சிரமப்பட்டு என்னைக் கன்ட்ரோல் பண்ணிட்டு அப்பவே கிளம்பிட்டேன்.''

அபிஷேக் சொன்னதையெல்லாம் கேட்ட விஜயமோகனாலும் கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ளவே முடிந்திருக்கவில்லை.

அப்பொழுதே சென்று அந்த மதனை அடித்துத் துவைத்துவிட்டு வந்தாலென்ன என்னுமளவிற்கு நெஞ்சு கொதித்தது.



ஆனால் முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான். அதோடு அபிஷேக்கும்தான் தன்னைப் பற்றி என்ன நினைப்பான்?

அதிலும் அப்படிச் செய்தால் அவர்களுடைய கோபமெல்லாம் உதயாவின் மீது தான் திரும்புமென்று அவன் வயதிற்கே அபிஷேக் எவ்வளவு புத்திசாலித்தனமாக யோசித்திருக்கிறான்.

எல்லாவற்றையும் விட மொபைல் போனை ஆஃப் செய்து வைத்ததற்காகத் தான் உதயாவை என்ன வார்த்தை கேட்டு விட்டோம் என்பதைத் தான் அவனால் சிறிதும் ஜீரணித்துக் கொள்ளவே முடிந்திருக்கவில்லை.

ஒழுக்கத்துடன் வாழ நினைத்து அப்படிச் செய்திருந்தவளை, ஒழுக்கம் கெட்ட வழியில் செல்கிறாயா என்று நாக்கூசாமல் கேட்டோமே என்று துடித்துப் போனான்.

''உதயாக்கா ரொம்பவும் ஸாஃப்ட். ஏன், அவங்க எந்த அளவுக்குக் கஷ்டப்பட்டு இந்த நிலைக்கு வந்திருக்காங்க தெரியுமா? அவங்களப் போய் எல்லாரும் எந்த அளவுக்குப் பேசிட்டாங்கன்னு நினைச்சா தான் என்னால சுத்தமாவே தாங்கிக்க முடியல.''

''அபிஷேக், உன்னால எனக்கொரு உதவியாகணும்.''

''சொல்லுங்கண்ணா.''

விஜயன் அண்ணாவே தன்னிடம் உதவி கேட்கிறாரென்றால், ஆவலுடன் அவர் தன்னிடம் கேட்கப் போகும் உதவிக்காகக் காத்திருந்தான் அபிஷேக்.

''உதயாவ மதன் கல்யாணத்துக்குக் கூட்டிட்டுப் போகணும். அதுக்கு ஏதாவது வழியிருக்கா?''

எதற்காக இப்படிக் கேட்கிறாரென்று சில வினாடிகள் யோசித்தவன், உடனே, ''அதெல்லாம் இருக்குண்ணா,'' என்று துள்ளிக் குதித்தான்.

...............

''எப்படின்னு பாக்கறீங்களா? பொண்ணு வீட்டு சைட்ல இருந்தும் எங்களுக்கு இன்விடேஷன் வந்திருக்கு. ஐ மீன் மதனோட வருங்கால மனைவி எங்களுக்கும் ஒரு விதத்துல சொந்தம்,'' என்றான்.

''அப்படியா?''

''ஆமாண்ணா. அது மட்டுமில்லாம காலேஜ்ல அவங்க உதயாவோட சீனியர். உதயாக்கா இங்க சென்னைல இருக்கறது தெரிஞ்சு ரொம்பவும் சந்தோஷப்பட்டாங்க. அவங்களப் போய்ப் பாக்கறதுக்காக போன் நெம்பரும் வாங்கிட்டுப் போனாங்க.''

ஆனால் அந்தப் பெண்ணால் உதயாவுடன் பேச முடிந்ததோ என்னவோ?

''ஆனா உதயாக்கா மேக்ஸிமம் டைம் மொபைல ஆஃப் பண்ணி தான வெச்சிருக்காங்க. அதனால அவங்களால பேச முடிஞ்சதோ என்னவோ?

ஒரு சமயம் என்னால பேச முடியாமப் போனாக் கூட எதுக்கும் இங்கயும் ஒண்ணு இருக்கட்டும்னு உதயாக்கா பேர் போட்டு வீட்லயும் ஒரு இன்விடேஷன வெச்சுட்டு தான் போயிருக்காங்க.

அது போதும்.

தான் யாரைத் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்று முடிவு செய்வதற்கு இவர்கள் யார்?



ஏன் அந்த உரிமையைத் தனது தாய் கூடத் தனது கையில் எடுத்துக் கொண்டிருக்கவில்லையே.

அப்படியிருக்கும்போது இவர்கள் என்னவெல்லாம் செய்து விட்டிருக்கிறார்கள்!

இவர்கள் அனைவருக்கும் பாடம் புகட்டியே ஆக வேண்டும்.

இந்த விஜயமோகனிடம் மோதினால் கடைசியில் என்ன ஆகுமென்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டியே தீர வேண்டும்.

அதற்கான சரியான சந்தர்ப்பம் மதனுடைய திருமண நாள்தான்.

அதைவிட பிரமாதமான தருணம் வேறு அமைய வாய்ப்பே இல்லை.

அப்பொழுது தான் அனைவருடைய மூக்கையும் ஒட்டு மொத்தமாக அறுக்க முடியும்.

அதிலும் தனது வருங்கால மனைவி என்று பெருமையுடன் உதயாவைச் சபையில் வைத்து அறிமுகப்படுத்தும் போது இஞ்சி தின்ற குரங்கு போல அனைவருடைய முகங்களும் மாறுவதை ஆவலுடன் பார்த்து ரசிக்க வேண்டும்.

முடிந்தால் அன்றே திருமணத் தேதியையும் அறிவிக்க வேண்டும்.

''முக்கியமா நான் இப்ப வந்ததே உதயாக்கா இருந்தா இந்த இன்விடேஷன் விஷயத்த சொல்லிட்டு அப்படியே அவங்களப் பாத்துட்டுப் போலாம்னுதான் அண்ணா.''

''ரொம்ப சந்தோஷம் அபிஷேக். அத உதயாகிட்ட நானே சொல்லிடறேன். உங்கூடப் பேசவும் சொல்றேன்.''

'தேங்க்யூண்ணா. ஆனா உதயாக்கா இல்லாம இருக்கறது கூட ஒருவிதத்துல நல்லதாதான் போச்சு. இதையெல்லாம் உங்ககிட்ட சொன்னதுக்கப்புறம் தான் எனக்கும் மனசுக்கு ரொம்ப நிம்மதியா இருக்கு.''

''தெரிஞ்சோ தெரியாமலோ எனக்கும் நீ ரொம்பப் பெரிய உதவி பண்ணியிருக்க அபிஷேக், தேங்க்ஸ்.''

''என்னண்ணா நீங்க போய் எங்கிட்ட...''

''இப்ப உனக்குப் புரியாது அபிஷேக். மதனோட கல்யாணத்துக்கு நீயும் அவசியம் வா. அப்பத் தெரியும்.''

''என்னண்ணா ஏதேதோ சொல்றீங்க,'' என்று சிரித்தவன், ''கொஞ்சம் புரியற மாதிரி தான் இருக்கு. ஆனாலும் அதுவரை ஆவலோட காத்திருப்பேன்,'' என்று அதே புன்னகையுடன் விடைபெற்றுக் கொண்டான்.

# 21

அபிஷேக் கிளம்பியது தான் தாமதம், தான் உதயாவைப் பார்ப்பதற்காகக் கிளம்பி விட்டிருந்தான் விஜயமோகன்.

தன்னை விரும்பி விட்டிருந்ததற்குப் பலனாக எப்படியெல்லாம் சிரமப்பட்டு விட்டாள் பாவம் என்று அவனுடைய உள்ளம் உருகிப் போனது.



மற்றவர்கள் சிரமப்படுத்தியது மட்டுமா?

தானும் கூட எப்படியெல்லாம்...

தன் உதயாவின் மென்மையான உள்ளம் எப்படியெல்லாம் துடித்துப் போயிருக்கும்.

அவள் மட்டும் நடந்ததை முழுக்கத் தன்னிடம் சொல்லியிருந்தால் இந்த அளவிற்குப் போக நாம் விட்டிருப்போமா என்றும் நினைத்துக் கொண்டான்.

நல்லவேளை, இப்பொழுதாவது அபிஷேக் வந்து சொன்னானே என்றிருந்தது.

நாம் இன்னும் சிறு பையன் என்று நினைத்துக் கொண்டிருக்க, அவன் எந்த அளவிற்கு யோசித்திருக்கிறானென்று பெருமையாகவும்.

ஆனால் அவனுடைய பெற்றவர்கள்! என்ன முயன்றும் அவர்கள் நடந்து கொண்டதை மட்டும் விஜயமோகனால் ஜீரணித்துக் கொள்ளவே முடிந்திருக்கவில்லை.

அதிலும் அவர்களையே நம்பி வந்திருக்கும் உதயாவை என்ன பாடு படுத்தியிருக்கிறார்கள்.

பணத்தையே பெரிதாக மதித்துக் கொண்டு, மனிதர்களின் குணநலன்களையே சிறிதும் எண்ணிப் பார்க்காமல்...

இந்தப் பணம் தான் மனிதர்களை என்ன பாடு படுத்துகிறது என்று எப்பொழுதும் போல மனதிற்குள் ஏளனமாக நினைத்தான்.

சரிதான், பிரச்சனைகள் வரும்போது தானே மனிதர்களை இனம் கண்டு கொள்ள முடிகிறது.

உதயாவின் விடுதிக்கு விஜயமோகன் சென்றபோது நேரம் மாலை ஆறு மணி.

உதயாவிற்காகக் காத்திருக்க நேர்ந்த அந்தச் சில நிமிடங்களிலேயே அவன் மிகவும் தவித்துப் போய் விட்டிருந்தான் என்று சொன்னால் அது சற்றும் மிகையல்ல.

ஆனால் உதயாவைப் பார்த்த பிறகோ துடித்துப் போய் விட்டிருந்தான்.

சூழ்நிலையை உணர்ந்து அதை வெளியே காட்டிக் கொள்ளாததோடு தன்னைக் கட்டுப்படுத்தியும் கொண்டான்.

அந்த அளவிற்கு வாடி, வதங்கிப் பார்க்கவே பல நாள் படுக்கையில் விழுந்திருந்தது போலத் தெரிந்தாள் உதயா.

அதற்கும் அவள் அவசரமாகத் தனது முகத்தையும் தலை முடியையும் திருத்திக் கொண்டு வந்திருந்தும் கூட ஒரு பக்கம் கோபமாகவும் வந்தது.

இப்படி யெல்லாம் கூடத் தன்னை வருத்திக் கொண்டு மற்றவர்களைக் காப்பாற்றியே ஆக வேண்டுமென்று அப்படியென்ன வேண்டுதல் என்று எரிச்சலாகவும்.

தன்னைப் பார்க்க யார் வந்திருப்பார்கள், யாருக்கு என்ன என்று பயந்து கொண்டே வந்த உதயா, அங்கு வரவேற்பறையில் அமர்ந்திருந்த விஜயமோகனைப் பார்த்து மேலும் சற்று அதிகமாகவே பயந்து போய் விட்டிருந்தாள் என்று கூடச் சொல்லலாம்.



''என்னமா, சொல்லியிருக்கலாமில்லையா?'' என்று ஆதங்கத்துடன் கேட்ட விஜயமோகனைப் புரியாமல் பார்த்தாள்.

''காய்ச்சலைத் தான் சொல்றேன்,'' என்றவன், ''இன்னும் என்னென்னவோ இருக்கு. ஆனா அதையெல்லாம் சொன்னாலும் பாவம் கேட்டுக்கற அளவுக்கு இப்ப நீ இல்லையே,'' என்றான்.

உதயா புரியாமல் பார்க்க, ''இப்ப காய்ச்சல் எப்படியிருக்கு?'' என்று கேட்டான்.

''பரவாயில்ல, ஓரளவுக்கு நல்லாவே ஆயிடுச்சு.''

''அப்ப கொஞ்சம் - அதுகூட முடிஞ்சா தான் - வெளிய வர முடியுமா? விடுவாங்களா?''

''அதெல்லாம்,'' என்றவள், ''கட்டாயம் வந்தாகணும்னா போய் பர்மிஷன் வாங்கிட்டு வர்றேன். அதுக்கு ஒரு ரெண்டு நிமிஷம் ஆகும்,'' என்றாள்.

''பரவாயில்ல. நான் வெய்ட் பண்றேன். போய்ட்டு வா.''

பத்து நிமிடங்களில் உதயாவுடன் விஜயமோகன் வந்து சேர்ந்திருந்த இடம் அவனுடைய வீடு.

முன்பு ஒரு முறை அழைத்துக் கொண்டு வந்த அதே அறைக்கு அழைத்து வந்தவன், ''உக்காருமா,'' என்று இருக்கையைக் காட்டிச் சொல்லிவிட்டுத் தானும் அருகில் அமர்ந்து கொண்டான்.

எதுவும் பேசாமல் அவன் தனது கழுத்தைத் தொட்டுப் பார்க்க, அவனுடைய ஸ்பரிசத்தில் உடல் சிலிர்த்தாள் உதயா.

''காய்ச்சல் சரியாயிடுச்சு,'' என்றவளிடம், ''அதனால தான் பாக்கறேன். இல்லேன்னா எனக்கு வர்ற கோபத்துக்கு அறைஞ்சு தள்ளிடுவேன்,'' என்றான் விஜயமோகன்.

புரியாமல் பார்த்தவளிடம், ''எவ்வளவு நடந்திருக்கு. ஒரு வார்த்தை சொன்னியா?'' என்று ஆதங்கத்துடன் கேட்டான்.

''விஜய்...''

கண்கள் கலங்கி விட்டிருக்க, ''இந்த ஒரு வாரமா எத்தனை முறை அத உங்ககிட்ட சொல்றதுக்காக ட்ரை பண்ணினேன்னு எனக்குத்தான் தெரியும்,'' என்றாள்.

''என்னடா... உதயா, உம் முகத்தைப் பாத்துப் பேசற தகுதிகூட எனக்கில்லமா. அதுக்கு நீ என்ன தண்டனை குடுக்கப் போற? எதுவானாலும் அத ஏத்துக்க நான் தயாரா இருக்கேம்மா,'' என்ற விஜயமோகனின் வாயைத் தனது கையால் பொத்தியிருந்தாள் உதயா.

''ப்ளீஸ் பெரிய வார்த்தையெல்லாம் சொல்லி என்னக் கொல்லாதீங்க,'' என்றவளைப் பூப்போலத் தன் அருகில் இழுத்து அவளுடைய கண்களை ஊடுருவிப் பார்த்தான்.

தானும் பார்த்தவள் சில வினாடிகளுக்கு மேல் முடியாமல் அப்படியே அவனுடைய மார்பில் சாய்ந்து கொண்டாள்.

''என் உதயா...'' என்று அவளைத் தன் மார்போடு மிருதுவாக அணைத்துக் கொண்டு விட்டிருந்த விஜயமோகனுக்கும் பேச வேண்டிய அவசியமே இருக்கவில்லை.



விரசம் சிறிதுமற்ற அந்த மென்மையான அணைப்பிலேயே அவர்கள் இருவரும் அதுவரை பட்டிருந்த காயங்களையெல்லாம் ஆற்றிக் கொள்ள முயன்று அதில் வெற்றியும் கண்டார்கள்.

# 22

அவர்கள் இருவரும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த மதனுடைய திருமண நாளும் இனிதே விடிந்தது.

விஜயமோகன் அளவிற்கு உதயாவால் தைரியமாக இருக்க முடியவில்லை.

ஆனால் விஜயமோகன் அருகில் இருக்கும்பொழுது அவள் மிகவும் தைரியமாகவும், சந்தோஷமாகவும் உணர்ந்தாள்.

விஜயமோகன் தான் சொன்னது போலவே சபையில் வைத்துத் தான் உதயாவைக் கரம் பிடிக்கப் போவதை சந்தோஷமாக அறிவித்தான்.

கூடவே திருமணத் தேதியையும். அவன் எதிர்பார்த்தது போலவே அனைவருடைய முகங்களும் மாறவும் செய்தன.

ஆனால் அவன் முன்பு சொன்னது போல அதையெல்லாம் கவனித்துச் சந்தோஷப்படும் மன நிலையில் அவன் இருக்கவில்லை.

ஏனென்றால் உதயாவோடு தான் காணப்போகும் அந்த இனிமையான எதிர்காலத்தைத் தனது மனக் கண்களில் கண்டு அவன் சந்தோஷத்தில் திளைத்துக் கொண்டிருந்தான்.

உதயாவும் அந்த நிலையில் தான் இருந்தாள் என்பதை உங்களுக்கு நான் சொல்லவும் வேண்டுமா?